329

# செங்குந்த மித்திரன்

ஆனி 1931

6

உ 4

JL
Y592 5G m211, N28
N31. 4.6
158888

Registered No. M. 1514 பிரமோதூத௵ ஆனிமீ

329.
2 SEP 19




*The Progressive Printers, Coral Merchant Street, Madras.*

எங்கள் மருந்துச்சாலை கடந்த 25 வருடகாலமாய் உள்ளூரிலும், வெளியூரிலும அநேக வைத்தியர்களும் நோயாளிகளுக்கும் மருந்துகள் செய்து அனுப்பி அவர்களுடைய நன்மதிப்பைப் பெற்று வருகிறது. அநேக நண்பர்கள் இவ்வளவு சிறந்த மருந்துகள் வெளியூர்களிலுள்ள நண்பர்களுக்குப் பயனளிக்காமல் போய்விடுகிறதென்பதை உணர்ந்து வற்புறுத்திச் சொன்னதின்மேல்விளம்பரம் செய்யமுன்வந்துளோம். நண்பர்கள் பலரும் எங்களுடைய மருந்துகளை யாதொரு பயமுமில்லாமல் வாங்கியுண்டு நலனமைந்து எங்களை மேன்மேலும் ஊக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

முதலாவதாக நாட்டுமக்கள் ஒவ்வொருவரும் திடகாத்திர முள்ளவர்களாக விளங்க வேண்டுவது அவசியம். தற்கால இளைஞர்கள் பாலிய சேஷ்டையாலும் மிதமிஞ்சிய போகத்தாலும் உடல் நலன் கெட்டுச் செல்லெரித்த மூங்கில்போல் மேலே மனிதராகவும் உள்ளே ஆண்மை இழந்த நிர்ப்பாக்கிய நிலைமையிலும் இருக்கிறார்கள்; இவர்களுக்கும், ஜுரம் முதலியவைகளால் பீடிக்கப்பட்டு ரத்தம் கெட்டுப் பலம் குன்றி இருப்பவர்களும், சாதாரணமாய் பல முள்ளவர்களாய், வீரிய முள்ளவர்களாய் இருக்க விரும்பும் ஒவ்வொரு ஆண் பெண் இருபாலர்க்கும், உலகவாழ்க்கையின் இன்பத்துக்கும், ஆண் சிங்கம் போன்ற பலம் தருவதற்கும்,

## நாராயணசஞ்சீவி லேகியமும் அயத்தங்கச்செந்தூரமும்

மிக்கச் சிறந்தவை என்று உறுதி கூறுகிறோம்.

இந்த லேகியம் செந்தூரம் சித்த வைத்திய முறைப்படி மிக ஜாக்கிரதையாயும் முறைதவறாமலும் செய்து முடிக்கப்பட்டது. வைத்திய முறைப்படி இதைக்காட்டிலும் சிறந்த பலம் தரும் மருந்து வேறொன்றில்லை.

### இந்த லேகிய செந்தூரங்களால் தீரும் முக்கிய வியாதிகள்.

தற்காலம் மானிட வர்க்கத்தை நிழல்போல் தொடர்ந்து அரிக்கும் 20 வகை மேகரோகங்கள். குன்மம், பித்த பாண்டு, சூலை, ஓடு வாய்வு, கை கால் முடக்கு, நெஞ்சு தொண்டை எரிச்சல், பித்த எப்பம். அஜீர்ணம், வயிற்றுப்பிசம், பசியின்மை, சோம்பல், நித்திரை வாராமை, நீர் இறங்கும்போது பொறுக்க முடியாத பாதையைத் தரும் தந்திமேகம் தாது நஷ்டம், தேக உளைச்சல், கண்களில் நீர் வடிதல் முதலிய வியாதிகள் சூரியனைக்கண்ட பனிபோல் நீங்கும். பயங்கரமான மேகவியாதிகளைப் போக்கி தேகத்தைப் புஷ்டியாக்கிச் சப்த நரம்புகளும் முறுக்கேற்றி அபரிமிதமான இரத்த விருத்தியை உண்டாக்கும்.

மனக் கவலையினாலாவது துர் அப்பியாசத்தாலாவது அடிக்கடிவரும் நோயினாலாவது மற்றெந்தக் காரனத்திலாவது பலம் கெட்டவர்கள் நமது லேகிய செந்தூரங்களைச் சாப்பிடுவார்களானால் அழகு தேகாரோக்கியம், தேக வலிவு முதலியவற்றைக் கொடுத்து அவர்களைச் சந்தோஷிக்கச் செய்யும். நோயுள்ளவர்கள் தான் இவற்றைச் சாப்பிடவேண்டுமென்பதில்லை. நோயிலாதவர்களும் இவற்றை ஆரோக்கியத்திற்க்காகச் சாப்பிடலாம். இதற்கு பத்தியமே கிடையாது. காலதேச வர்த்தமானமில்லாமல் எல்லா காலங்களிலும் சாப்பிடலாம். பசிஅதிகமாய் எடுக்குமாகையால் ஜீரணிக்கக்கூடியதும் கொழுமையுள்ளதுமான ஆகாரங்களை வேளை தவறாமல் சாப்பிடவேண்டும். இச்சிறந்த லேகிய செந்தூரங்களை டைரெக்ஷனில் சொல்லியபடி 48 நாள் சாப்பிடுவார்களானால் அவை தேகத்தில் ஊறி மேகங்களை நெருப்புப்பொறி பட்ட பஞ்சுப் பொறியென நாசம் செய்து, புதிய ரத்தத்தை உற்பத்தி செய்து தேகத்தை இளைக்காமலிருக்கச் செய்யும். இவற்றை ஒற்றுமையாய் மனைவியும், கணவனும் ஏககாலத்தில் சாப்பிட்டால் அவர்களுக்கு உற்பத்தியாகும் குழந்தைகள் மிக அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருக்கும்.

24-நாள் சாப்பிடக்கூடிய லேகியமும் ஒரு புட்டி செந்தூரமும் ரூ. 2-4-0 தபால்செலவு [illegible]ணை. 48-நாள் மருந்து தபால் சார்ஜ் உள்பட ரூ. 4-12-0,

பினங்கு, சிங்கப்பூர், செட்டால் முதலியவெளிநாடுகளுக்கு24-நாள் மருந்து தபால்சார்ஜ் [illegible]ள்பட ரூ. 3-8-0. 48-நாள்மருந்து ரூ.6-4-0. வெளிநாட்டு அன்பர்கள் யாராவும் முன்பணமாகவே அனுப்பவே[illegible]டும்.

**நாராயண சஞ்சீவித்தைலம்:**—பச்சிலை, மூலிகைகளாலும் பசும்பால் முதலிய பரிசுத்த வஸ்துக்க[illegible]லும் மிகச் சுத்தமாக செய்யப்பட்டது. தேகவரட்சியைப் போக்கி மூளையைக் குளிரச்செய்து புத்தி [illegible]ர்மையையும் ஆரோக்கியத்தையும் உண்டாக்கும். கடந்த 25-வருடகாலமாய் இதை ஆயிரக்கணக்கான[illegible]ர்கள் வாடிக்கையாய் வாங்கி ஸ்நானம் செய்து தேகாரோக்கியத்தோடு வாழ்ந்து வருகிறார்கள்.

5 பல டின் 1-க்கு விலை ரூ. 1-0-0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

**நாராயண திராட்சைபழ லேகியம்:**—மலச்சிக்கலே எல்லா வியாதிகளுக்கும் காரணம். இதனால் நம[illegible]நாட்டில் கோடிக்கணக்கானவர்கள் அவஸ்தைப்பட்டு அதைச் சரியாய் கவனிக்காமையினால் அநேகவித நோய்களுக்கு ஆளாவதை நாம் நேரில் பார்த்திருக்கிறோம். அதற்கு இது திவ்வியமான மருந்து. சாப்பிடுவதற்[illegible] மிக ருசியாய் இருக்கும். இரவில் படுத்துக்கொள்ளும்போது ஒரு கெச்சக்காய் பிரமாணம் சாப்பிட்டு படு[illegible]துக் கொண்டால் காலையில் மலம் தாராளமாய்ப் போய்விடும். யாதொரு கெடுதலுமில்லை. தேகம் ஆரோ[illegible]கியமாய் இருக்கும். டப்பி-1-க்கு விலை ரூ. 1-0-0. தபால் சார்ஜ் பிரத்தியேகம்.

ஒரு ரூபாய்க்குக் குறைந்த தொகைக்கு V. P. அனுப்பமுடியாது.

(7) ஸ்ரீ நாராயண மெடிகல் ஹால், காசிபுரம்

329.
2 SEP 1931

## உள்ளடக்கம்


| | |
|---|---|
| கடவுள் வணக்கம்:—பாமாலைப் பகுதி | 190 |
| பத்திரிகாசிரியர் முன்னுரை | 191 |
| ஒழுக்கப் பகுதி:—புத்தி என்பது யாது? | 193 |
| சமயப் பகுதி:—இந்துதெய்வ தத்துவார்த்த விளக்கம் | 196 |
| இளைஞர் பக்கம் | 200 |
| ஆராய்ச்சிப் பகுதி:—முருகன் | 202 |
| திருப்புகழ் ஆசிரியர் | 204 |
| சுகாதாரப்பகுதி:—கொக்கிப் புழுநோய் (Hook-worm disease) | 207 |
| குடியால் விளையும் கேடுகள் | 209 |
| சித்தாந்தப் பகுதி:—சமய நுண் பொருள்கள் | 213 |
| நாவல் பகுதி:—சிந்தாமணி யெழுதிய சித்திரம் | 217 |
| செங்குந்த யாத்திரைவாசி | 220 |
| நிருபங்கள் | 222 |
| செங்குந்தர் கிளர்ச்சி | 226 |
| தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாடு விளம்பர சபைப் பிரசுரம் 1. வசூல் கமிட்டி | 229 |
| தலைச்சங்கத்தின் விளம்பரம்:—ஏழைச் செங்குந்த மாணக்கர்களுக்கு உபகாரச் சம்பளம் | 231 |
| பஞ்சாங்கம் | 232 |

## கடவுள் வணக்கம்

ஏகநாயகனை யிமையவர்க்கரசை யென்னுயிர்க்கமுதினை யெதிரில்
போகநாயகனைப் புயல்வணற்கருளிப் பொன்னெடுஞ் சிவிகையாவூர்ந்த
மேகநாயகனை மிகுதிருவீழிமிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோகநாயகனை யன்றி மற்றொன்றுமுண்டென வுணர்கிலேன்யானே.

கற்றவர்விழுங்குங் கற்பகக்கனியைக் கரையிலாக்கருணை மாகடலை
மற்றவரறியா மாணிக்கமலையை மதிப்பவர்மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ்சிவனைத் திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன்தன்னைக் கண்டுகண்டுள்ளங் குளிரவென் கண்குளிர்ந்தனவே.

## செங்குந்த குலதிலகர்களாகிய இரட்டையர் பாடிய அம்மானை

[திரு. R. V. சருப்பண்ண முதலியார் அனுப்பியவை]

(தொகுதி 4, பகுதி 4, 106-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்பூமி தன்னி லியல்பாந் திருத்தணிகை
முப்பூ விளையு முருகருக்கே யம்மானை
முப்பூ விளையு முருகருக்கே யாமாயின்
அப்பவருக் கங்கே யரிதல்லோ வம்மானை
அவர்க்கு முக மாறுளலப் பரிதோ வம்மானை.

மாந்தரொடு விண்ணோர் வணங்கு தணிகாசலத்
[தான்
போந்து தலையோட்டி விரப்போன் மகன்கா
ணம்மானை
போந்து தலையோட்டி விரப்போன் மகனே யாமா
[யின்
காந்திவிடு மாடகப் பொற்காசரிதோ வம்மானை
கல்லாரவெற் படைந்தாற் காசரிதே யம்மானை.

பாலாறுசேரும் பரமர் திருவிற் கோலர்
நாலாறு சேரி நடுப்புகுந்தா ரம்மானை
நாலாறு சேரி நடுப்புகுந்தா ராமாயின்
தோலாமையோ டெலும்பு தொட்டதுண்டோ
[வம்மானை
தொட்டனரென்றே மறையோர் தொட்டிலர்கா
[ணம்மானை.

கோணமலை யுடைய கோதையிடப் பாகனார்
சேணுடர் போற்று திருவம்பலர்கா ணம்மானை
சேணுடர் போற்று திருவம்பலரே யாமாயின்
ஏனதி மால்பிரமர்க் கெட்டாரோ வம்மானை
இடைமதிக்குங்குச மதிக்கு மெட்டுவரோ வம்மா
[னை.

அண்டரெல்லாம் போற்றுகின்ற வண்ணாமலைநாதர்
கண்டொரு பெண்பாதியுடல் கைக்கொண்டா
[ரம்மானை
கண்டொரு பெண்பாதியுடல் கைக்கொண்டா
[ராமாயின்
உண்ட விடமெல்லா மேலூராதோ வம்மானை
ஊரு மென்றே யுண்ணாமுலையானா ளம்மானை.

தேவாதி தேவன் றிருவல்லிக்கேணி யண்ணல்
ஓவாப் பெருஞ்செல்வ முற்றவன்கா ணம்மானை
ஓவாப் பெருஞ்செல்வ முற்றவனே யாமாயின்
பூவாளு மாவலிபாற் போவதே னம்மானை
போனகதை கேட்கிலது பூத்தா ணம்மானை.

வில்வந் திருச்சடில மேவுமயி லேச்சுரனார்
செல்வந் தழைந்த நிறைசெல்வர்கா ணம்மானை
செல்வந் தழைந்த நிறைசெல்வரே யாமாயின்
இல்லங்க டோறு மிரப்பதே னம்மானை
இரந்தார் விதிதலைவந் தேறலா லம்மானை.

தீமைக்கடல் விடத்தைத்தேர்ந்த விரிஞ்சேசுரனார்
வாமத்தொரு மயிறு வைத்தனர்கா ணம்மானை
வாமத்தொரு மயிறு வைத்தனரே யாமாயின்
ஏமமுடிமே லரவ மேறுமோ வம்மானை
ஏறுதோ வன்புற் றிருந்தக்கா லம்மானை.

இருவருங்குங் காண்பரிய வீசர்மது ரேசனார்
விருது கட்டி யங்கம் வெட்டி வென்றனர்கா ணம்
[மானை
விருது கட்டி யங்கம் வெட்டி வென்றனரே யாமா
[யின்
அருமையுடம் பொன்றிரு கூறுவதே னம்மானை
ஆனாலுங் காயமில்லை யையரவர்க்கம்மானை.*

அடர்ந்து வாழுங் குடந்தையரு வமுதர்
மடந்தை பாகர்க்கேறு மாடுகா ணம்மானை
மடந்தை பாகர்க்கேறு மாடுதானாமாயின்
கடந்த பாதம் மிரண்டுங் காணாரோ வம்மானை
கண்ணிரண்டும் பூவானாற் காண்பாரோ வம்மானை.

(தொடரும்)

---

*இப்பாட்டு மதுரைக் கலம்பகத்திலும் வருவதுணர்க. [ப - ர்.

# செங்குந்த மித்திரன்

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கத்தின் மாத வெளியீடு
பத்திரிகாசிரியர் :—ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ., எல். டி.
துணையாசிரியர் :—பண்டிதர் பி. செ. மாணிக்கவாசக முதலியார்.

தொகுதி—ச ] பிரமோதூத வருஷம் ஆனி மாதம் [ பகுதி—சு

## பத்திரிகாசிரியர் முன்னுரை

### உபகாரச் சம்பளம்

நமது கல்வி நிதியினின்றும் ஏழைச் செங்குந்த மாணாக்கர்களுக்கு வருஷா வருஷம் அளிக்கப்பெறும் உபகாரச் சம்பள சம்பந்தமான விளம்பரம் இம்மாத மித்திரனின் மற்றோரிடத்தில் வெளியிடப் பெற்றுள்ளது. உபகாரத்துக்காக மனு அனுப்புவோர் கவனிக்கவேண்டிய முறைகளுள் முக்கியமானவைகளை ஈண்டு சுட்டிக் காட்டுகின்றோம் :

1. பள்ளிக் கூடங்களில் சேர்ந்து வாசிக்கும் பிள்ளைகளுக்கு மட்டுந்தான் உபகாரச் சம்பளம் அளிக்கப் பெறும்.

2. உபகாரத்துக்கு மனு அனுப்புவோர் உரிய சிபார்சுக் கடிதங்களுடன் மனுக்களைத் தமது பள்ளிக் கூடத்துத் தலைவர் மூலமாக அனுப்புதல் வேண்டும். நேராக அனுப்பப் பெறும் மனுக்கள் கவனிக்கப்பட மாட்டா.

3. இவ்விளம்பரத்தைக் காண்பதற்கு முன்னதாக மனு அனுப்பி யுள்ளோர் இந்நிபந்தனைகளுக்கு ஒப்ப மற்றொரு புது மனு அனுப்புதல் வேண்டும். பழைய மனு கவனிக்கப் பெறாது.

4. உபகாரச் சம்பளம் பெரும்பான்மையும் உயர்தரப் படிப்புக்குக் கொடுக்கப் பெறும்.

5. உபகாரச் சம்பளம் பெறும் மாணாக்கர்கள் ஏழைகளாக மட்டும் இருந்தால் போதாது; ஏழ்மையோடு அவர்களுக்குத் திறமையும், கல்வியில் மிக்க தேர்ச்சியும், யோக்கியதையும் அமைந்திருக்க வேண்டும்.

### தலைச்சங்கப் பிரசாரகர்

கல்விநிதிச் சீட்டின் வேலை ஒருவாறு முடிவடைந்து வருவதால் நமது தலைச்சங்கப் பிரசாரகர்கள் நமது 'மித்திரன்' சந்தா வசூல் நிமித்தமும் வித்தியாப் பிரசார நிமித்தமும் சென்னையை விட்டுப் பல ஜில்லாக்களுக்கும் புறப்பட்டுக்கொண் டிருக்கின்றனர். திரு. தி. அ. சண்முக முதலியார் அவர்கள் செங்கற்பட்டு வட ஆற்காடு ஜில்லாக்களைப் பார்த்துக்கொண்டு தஞ்சாவூர், மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி ஜில்லாக்களுக்குச் செல்லப் புறப்பட்டு விட்டனர். திரு. மா. திருநாவுக்கரசு முதலியார் அவர்கள் தென் ஆற்காடு ஜில்லாவில் சந்தா வசூலித்துக் கொண்டிருக்கின்றனர். திரு. V. K. M. அப்பா அவர்கள் கோயம்புத்தூர் ஜில்லாவில் சந்தா வசூலித்துக்கொண் டிருக்கின்றனர். திரு. பி. செ. மாணிக்கவாசக முதலியார் அவர்கள் கூடிய சீக்கிரம் புறப்பட்டுக் கோயம்புத்தூர் ஜில்லாவில் பாக்கியுள்ள இடங்களுக்கும், சேலம், திருச்சி, மலையாளம் ஜில்லாக்களுக்கும் செல்லுவர். மலாய் நாட்டுச் சந்தாக்களைக் கோலாலம்பூர் திரு. சி. த. தாண்டவராய முதலியார் அவர்களும், இலங்கைச் சந்தாக்களைக் கல்முனை திரு. T. இராஜேஸ்வர முதலியார் அவர்களும் வசூலித்து அனுப்புவதாக அன்பு கூர்ந்து ஒப்புக்கொண் டிருக்கின்றனர். சந்தா நேயர்களை நமது பிரசாரகர்களிடம் சந்தாபாக்கிகளை யாதொரு தவக்கமுமின்

றிக் கொடுத்துவிடும்படி வேண்டிக்கொள்ளுகின்றோம்.

## மித்திரன் காரியாலயம்

நமது பிரசாரகர் வெளியே வசூலுக்குப் புறப்பட்டிருப்பதால் மித்திரன் காரியாலயம் தற்போது எமது இல்லத்தில் உள்ளது. நேரில் சந்தா செலுத்த விரும்புவோர் பவழக்காரத் தெரு 17-வது எண்ணுள்ள நமது மித்திரன் அச்சாகும் அச்சுயந்திரசாலையில் செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம். எம்மை நேரில் காண விரும்புவோர் ஷ அச்சுயந்திர சாலையில் பகல் ஒன்று முதல் இரண்டு மணிக்குள் காணலாம்.

## புது வருஷத்துப் பட்டதாரிகள்

சென்னைச் சர்வகலாசாலை பி. ஏ. பரீக்ஷையில் நமது வாலிபர் இருவர் இவ் வருஷம் தேர்ச்சி பெற்றிருக்கின்றனர்: திரு. ம. தக்ஷிணாமூர்த்தி முதலியார் (நமது மித்திரன் பத்திரிகாசிரியரின் இளைய சகோதரர்), திரு. S. A. ஸ்ரீராம் முதலியார் (திரு. S. P. அய்யாசாமி முதலியார் பி. ஏ. பி. இ. அவர்களின் குமாரர்). இவர்களுக்கு எமது மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

## ராவ்சாஹேப் இரத்தினமுதலியார், பி. ஏ.

சென்னை போர்ட் அப் ரெவினியூவைச் சேர்ந்த கோர்ட் அப் வார்ட்ஸ் மானேஜராக அதிகாரம் வகித்துச் சில மாதங்களுக்குமுன் ஓய்வு எடுத்துக்கொண்ட திரு. இரத்தின முதலியார், பி. ஏ., அவர்களுக்கு 'ராவ் சாஹெப்' பட்டம் வந்ததைக் குறித்து 'மிகவும் மகிழ்ச்சி யடைகின்றோம். இத்தகைய பட்டதாரிகள் நமது குலத்தில் இரண்டொருவரே யுள்ளார் என்பதை இங்குக் குறிப்பிடுகின்றோம்.

## இராமேஸ்வரம் மடம்

இராமேஸ்வரம் முதலியார் மடத்து விஷயங்களை ஷ ஊர் பாத்திரக்கடை திரு. மருத வீர பாண்டிய முதலியார் அவர்கள் தற்போது நமது தலைச்சங்கத்தின் பிரதிநிதியாக இருந்து கொண்டு பார்த்து வருகிறார்.

ம. ச.

## நன் கொடை

லாட்டரியில் வந்த பிரைஸ் தோகையைக் கல்வி நிதிக்கு நன் கொடை அளித்தவர்கள்

| | | | |
|---|---|---|---|
| நாகப்பட்டணம் ரா. முனிசாமி முதலியார் அண்சன்ஸ் வரவு | 2 | 12 | 0 |
| மேலப்புவனகிரி நா. செ. சிங்கார முதலியார் வரவு | 1 | 0 | 0 |
| குண்ணகம் பூண்டி லக்ஷ்மியம்மாள் | 1 | 0 | 0 |
| இலங்கை கல்முனை கி. அப்துலகமீது ஆலீம்] | 0 | 10 | 0 |
| தாமரைக் கேணி. வீ. கேதாரமுதலியார் | 1 | 0 | 0 |
| கல்முனை க. இராஜேஸ்வர முதலியார் | 0 | 10 | 0 |

### தேன் ஆபிரிகா

V. வீரபத்திர முதலியார் பேரால் டிக்கட்டு. [5-க்கு ரூபாய் 5 அணா 10.
செல்வநாயகர் டிக்கட்டு 1-க்கு அணா 10.
சி. கந்தசாமி முதலியார் டிக்கட்டு 1-க்கு அணா 10.
ஆ. பொன்னுசாமி முதலியார் டிக்கட்டு 2-க்கு [ரூபா 5-அணா 10.
S. ராமு முதலியார் டிக்கட்டு 9-க்கு [illegible] 8 [அணா 12.
அ. அமிர்தலிங்க முதலியார் டிக்கட்டு 3-க்கு [ரூபா 2 அணா 4.
S. நடேச பண்டிதர் டிக்கட்டு 1-க்கு அணா 10.
**ஆக கூடியது ரூபா 24 அணா 2.**

### ஷஷ்டி அப்த பூர்த்தி முகூர்த் நன்கோடை

சீகாழி நாட்டின் தலைவர் திருவாளர். அ. பூரண முதலியார் அவர்களின் கிருஹத்தில் மாயவரம் தாலூக்கா கீழையூர் ரா. அருணாசல முதலியார் திருநிறைச் செல்வர் ஆறுமுக முதலியாரவர்களுக்கு நிகழும் பிரமோதூத வருஷம் வைகாசி௴ 26௳ பாநுவாரம் சுவாதி நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் அறுபதா மாண்டு பூர்த்தி விழா மிக்க விமரிசையாக நடைபெற்றதில் நமது தலைச்சங்கத்திற்கு ரூபாய் 2—0—0 நன்கொடை அளிக்கப் பெற்றது.

### இதர நன் கொடைகள்

| | | | |
|---|---|---|---|
| திரு. ஆ. வே. முத்தைய்ய முதலியார், புதுவை. | 5 | 0 | 0 |
| திரு. கு ந. பழனியப்ப முதலியார், பள்ளிபாளையம் (குமாரர் திரு. நஞ்சப்ப முதலியார் திருமணத்துக்கு) | 1 | 0 | 0 |

### உண்டியல் வசூல்

| | | | |
|---|---|---|---|
| இம்பீரியல் பீடியகாட் கம்பெனி, சைதாப்பேட்டை | 1 | 0 | 0 |
| கிரேட் பாளையகாட் ,, ,, | 17 | 5 | 9 |
| திரு. M. Y. சொக்கலிங்க முதலியார், தோப்புபேட்டை | 10 | 0 | 0 |
| பெஸ்டு பாளையகாட் கம்பெனி, சைதாப்பேட்டை | 12 | 1 | 6 |



# ஒழுக்கப் பகுதி

## புத்தி என்பது யாது?

[திரு. ஆ. வே. முத்தைய்யா முதலியார், பி. ஏ., பி. எல்., புதுவை அரசாங்க அமைச்சர்]

### ஏழைக்கொள்ளைத் தருமம்

முன் வியாசத்தில், மனதின் நிலையைத் தெரிந்து கொள்வதற்கும், அப்படி தெரிந்துக்கொள்வதால் அதைத் திருத்தித் தூய்மை செய்வதற்கும், மனத்திற்கப்பாலுள்ள, அதற்கு வேறுயுள்ள, புத்தி, விவேகம், அறிவு, சாட்சி என்று பல பெயர்களால் சொல்லப்படும் கருவியும் நல்ல நிலையிலிருக்க வேண்டுமென்று குறிப்பிட்டோம். எனவே, அந்தக் கருவியாகிற புத்தியென்பது யாது என்று இனி நாம் விசாரிக்க வேண்டியிருக்கிறது.

இந்த விசாரணை மிகவும் சிக்கலானது. இப்போது மானிட வாழ்க்கையில் பெரும்பாலும் மனத்தால் மொத்துண்டு நிற்கிறோம். விவேகமென்பது சிறிதே, அதுவும் சில சமயங்களில் தான் அருமையாக ஒளிர்கிறது. பிறகு மறைந்து விடுகிறது. மனதின் ஆரவாரந்தான் பெரிதாக விருக்கிறது. ஆசை பேராசையெனும் சுழல் காற்றி லகப்பட்டுச் சுற்றிச்சுற்றி வருகிறபடியால், அறிவென்னும் உள் கண் நமக்கு மங்கலாக விருக்கிறது. நன்றாய்த் தெரியவில்லை யென்ற வெண்ணமுமில்லை. அம்மட்டோ? "நம் அறிவைப்போல வேறுயாருக்கும் கிடையாது. நாமே விவேகி" யென்பதாக மனப்பால் குடித்துக் கொண்டிருக்கிறோம். இதுவும் மனதின் சூட்சியே.

இதை நன்கு விளக்குவதற்கு, இப்போது ஆங்காங்கு (நம்மவர்களிடையேயும்) நடந்து கொண்டிருக்கும் "ஏழைக் கொள்ளைத் தருமத்தை"ப் பற்றி விவரித்து, அதனிடையே புத்தியென்கிற நமது கருவி எவ்விதமிருக்கிறது, என்ன செய்கிறதென்பதை ஒருவாறு காட்டுவோம். அன்றியும் ஒழுக்கப்பகுதியும், கணிதம் பீஜகணித முதலியவைகளைப் போல துவர்ப்பாக வில்லாமல், சற்று உருசியுடைத்தாக விருந்தால் தான் நண்பர்களும் எளிதாக வுணர்ந்து பலனடையக்கூடுமாயிருக்கும்.

"ஏழைக் கொள்ளைத் தருமம்" என்பது ஏழைகளுடைய பொருளைக் கவர்ந்து அதைக் கொண்டு செய்யும் சில பகட்டுத் தருமங்களே யாகும். கிராமங்கள் பட்டினங்கள் எங்கும் நடைபெறுகிறது. இதை நடத்துபவர்கள் பொருள்படைத்த வியாபாரிகளும், முதலில்லாத வர்த்தகர்களுமே யாகும். சில சமயங்களில், சில விடங்களில், கிராமத்தலைமை, ஊர் நிர்வாகம் வகிக்கும் பெரியார்களுமாக விருக்கும். எந்த விதமாக மேற்சொன்ன ஏழைக்கொள்ளைத் தருமம் நடைபெறுகிறது?

தொழில் முறைகளில் முக்கியமாக நம்மவர்கள் நெசவுப் புடவைகளை வாங்கும் பொருளாளிகள் அல்லது வியாபாரிகள் மகமை அல்லது தருமஉண்டியென்பதாகக் காலணாமுதல் எட்டணா வரை பொருள் விலையில் பிடித்துக் கொள்ளுகிற பழக்கம் நம்மவர்கள் அறியாததல்ல. இந்தப் பிடிப்புகளின் அழகிய விவரங்கள் நம்மித்திரனில் முன்னமேயே வெளிவந்துள்ளன. அந்த விவரங்களைத் திரும்பவும் நன்றாய் வாசித்துக் கொள்ளுவது நலம். இப்படிச் சேரும் தொகையில் ஒரு தம்படி கூட சேர்க்கும் வியாபாரியினுடையதல்ல. அத்தனையும் தொழிலாளியுடையதே, ஏழைக் காசேயாகும். இந்தப் பொருளைத் தருமம் செய்ய வேண்டியதே முறை. அதோடு தருமமும் பொதுவாக அதாவது தொழிலாளிகளாகிய ஏழைகள் பெயரால் நடத்துவதே நெறி. இதுவே நியாயமென உணருவது தான் புத்தி, விவேகம், அறிவு யென்பதாகச் சொல்லும் கருவியின் வேலை.

இது நம்முடைய சொத்தல்ல. ஏழைகளுடைய வயிற்றுச் சோற்றிலிருந்து பிடுங்கிக்கொண்ட ஒரு பிடியாகும். இதை நாம்

வைத்திருப்பது பொது நலத்திற்கேயன்றி நமக்கல்ல. நமது சொந்தமுமல்ல வென்று உணர்பவர்களே அறிவுடையோர்கள், விவேகிகளாவார்கள்.

அதல்லாமல், இந்தத் தொகை நம்முடையதாயிருந்தால் தான் நன்றாயிருக்கும் என்ற பேரவா தூண்ட, இது நம் சொத்து தான் நம் பொருளைப் போல் உபயோகிப்போம்; ஏதாகிலும் கேள்வி பிறந்தால் தருமம் செய்திருக்கிறேனே என்று சொல்லுவோமென்று, தங்களையும் பிறரையும் ஏமாற்றலாமென்றிருப்பது ஏன்? ஏமாற்றிக் கொண்டு வருவது, நமது மனதின் அதிகாரத்தைக் காட்டுகிறது. அறிவின் பலக்குறைவை வெளிப்படுத்துகிறது. இம்மாதிரி செய்பவர்கள் ஏழைகளைக் கொள்ளை யடிப்பவர்களே யாவர். ஆனாலிவர்களிடம் அறிவென்பதில்லாமல் போகவில்லை. மனதின் சாக்ஷி யொன்றிருக்கிறது. எப்படி யென்பதைப் பார்ப்போம்,

இக்கொள்ளைக்காரர்களிடம் யாராவது சேர்ந்திருக்கும் பொதுப்பணத்தைப் பற்றிப் பேசினால் அவர்களுக்குடனே கோபம் வரும். அந்த விஷயமாக அவர்களை யொன்றும் கேட்கக்கூடாது. கேட்டதும், அவர்களுடைய மனதிற்கு பிறர் பொருள், அதிலும் பொதுப்பொருள், தன் பொருளாயிருக்க வேண்டுமென்றிருக்கிறது. ஆனால் அந்த மனதின் சாக்ஷியாகிற அறிவு, விவேகம், சிறுகுரலாக “அல்லவே, இது ஏழைகள் சொத்தாச்சுதே” என்று பயந்து சொல்லுகிறது போல் சொல்லுகிறது. இதனால், ‘இந்தச் சனியன் ஏனிப்படி சொல்லவேண்டும்?’ என்பதாக மனதில் கோபம் பிறக்கிறது. அப்படியின்றி, உண்மையைக் கைக்கொண்டு அறிவின் வழிச்சென்று, “என்னிடம் சேர்ந்துள்ள உண்டிப்பணம் என்னுடையதல்ல” என்று ஒப்புக்கொண்டு, அதுபோல நடந்து கொள்பவனாயின், இவனுக்குக்கோபம்வராது. அதாவது, மனதின் ஜெபம் ஓடவில்லை. மனதானது புத்தியின் வசப்பட்டு, உண்மையின் வசப்பட்டு நிற்கிறது. இவனே யோக்கியனென்ற பெயருக்கு உரித்தானவன்.

இன்னும் சில கொள்ளைக்காரர்களிடம் வெளிக்குக் கோபம் வராதது போல விருந்தாலும், உள்ளே மனது துடிக்கும். கேள்வி கேட்டவனுக்கு எந்த வகையிலும் இன்னல் புரிய வழிதேடிக் கொண்டிருப்பார்கள். இவர்களுக்கும் முந்தையவர்களுக்கும் அதிக வித்தியாசமில்லை. கொள்ளைத்தனத்தோடு பொய் வேடம் ஒன்று தான் அதிகம்.

இப்பேர்ப்பட்ட கொள்ளைக்காரர்களிடம் இன்னுமொரு விசேஷம். கடவுள் பயம். கடவுளிடம் அன்புமல்ல, பக்தியுமல்ல, பயம். தங்கள் உள்ளம் இறைவனுக்குத் தெரிந்திருக்குமாகையால், அந்த மறைபொருளாகிய ஆசாமியைத் தாங்கள் வசப்படுத்திக் கொள்ள வேண்டும். அதற்கென்னவழி? அவனுடைய தோத்திரங்களை உரத்த சத்தமாக கத்துவோம். சன்னிதானத்தில் நின்றுக் கொண்டு அழுவோம். சின்னங்களை யெங்கு பார்த்தாலும் உடம்பில் அணிவோம் அவனுக்குக் கைக்கூலியும் (லஞ்சம்) கொடுப்போம்; அதாவது, அபிஷேக முதலிய செய்வோம்; முடி செலுத்தி விடுவோம்; வாரக்கட்டளை மாதக்கட்டளை அல்லது வருடக்கட்டளை யாவது ஏற்படுத்துவோம்; வாகனங்கள், கவசங்கள் செய்து வைப்போம்; என்பதாக செலவு செய்ய உடன்படுகிறார்கள். எதற்காக? இறைவன் தங்களுக்குத்தீமை செய்யாதிருக்க: அதாவது தங்கள் குற்றத்தை மன்னித்துவிட இந்தச் செலவுகளுக்கு பணம் ஏது? அந்த ஏழைக் கொள்ளைப் பணந்தான்! ஏழைகளைக் கொள்ளையடித்து வந்த பொருளின் ஒரு பகுதியை—நன்றாய்க் கவனிக்கவும்—ஒரு பகுதியை மாத்திரந்தான்: தனக்கு ஒரு பகுதி வேண்டாமா? வீணுக்கா உழைக்கிறது? ஒரு பகுதியை உபயோகப்படுத்தி விட்டு, தானே தன் சொந்த பொருளைக் கொண்டு செய்ததாக வெளியே தம்பட்டம் அடித்தல், சந்திப்பவர்களிடமெல்லாம் “தாங்கள் பார்க்கவில்லையே? முருகருக்கு நெற்றிச் சுட்டியும், வள்ளி தெய்வயானைக்கு ஒட்டியாணமும் கோமேதக வைடூரியங்களிழைத்துச் செய்திருக்கிறேனே. நாளைசோமவாரமாவது வந்து பாருங்கள். பெருத்த செலவு. எனக்கு முருகரிடத்திலே பக்தி அதிகமாகையால் செலவைப்பார்க்கவில்லை. நான் அவரையே நம்பி விட்டேன். அவர் பெயரால் தான் நான் எல்லாம் செய்கிறது. ஒன்று மறந்து விட்டேன். பிற்காலத்தில் நான் செய்த இந்தத் தருமம் பெயர் கெடாமலிருப்பதற்கு, நீங்கள் பார்க்கப்போகிற அந்தக்கல்லிழைத்த நெற்றிச்சுட்டியிலும் ஒட்டியாணங்களிலும் எனது பெயரைப் போட்டிருக்கும். கொ-த வென்று: கவனித்துப்பாருங்கள். இன்னும் சில நகைகள் செய்



வதற்கிருக்கிறேன். ஆனால், இதனடுவில் சில பெயர்வழிகள் ‘கோயிலுக்குக் கொடுக்கின்றீர்களே தருமஞ் செய்கின்றீர்களே, கல்விக் கழகங்களுக்கும், கல்விச் செலவுகளுக்கும் கொடுங்களேன்’ என்று என்னிடம் வந்து ஏமாற்றப் பார்க்கிறார்கள். நான் ஏமாறுகிறவனா? ‘ஆகட்டும் அப்படியே, பார்ப்போ’மென்று சொல்லிவிட்டேன். நான் செய்யப் போகிறதேது? இந்தக் காலத்தில் படிக்கும் பிள்ளைகளெல்லாம் நியாயம் பேசுகிறார்கள். சிலர் இந்த எனது தருமங்களைப் பற்றியும் பொதுப் பணமென்று சொல்லுகிறார்கள். இப்பேர்ப்பட்டவர்களுக்கு எனது பொருளை ஏன் கொடுக்கவேண்டும்? என்ன நினைக்கின்றீர்கள்?” என்பதாக வலியப்பிடித்து வழிமறித்துக்கொண்டு, அல்லது நாலு பேர் கூடுமிடத்தில் தம்பட்டமடிக்கிறதைக் காண்பது அருமையல்ல.

இப்போது ஒழுக்க முறையில் நாமிங்கே கவனிக்க வேண்டியது, உண்மையாகவே தரும நோக்கம் அவர்கள் செய்கையிலுண்டாவென்பதேயாகும். ஏழைகளிடம் பறித்த தொகையின் பகுதியைக் கொண்டு, முழுமையுமென்றே வைத்துக் கொள்வோம். சுட்டியும் கவசங்களும் செய்தார்கள் எதற்காக? தங்கள் மனசாக்ஷி அதிகம் கூச்சல் போடாமலிருப்பதற்கும், ஆறுமுகப்பிரான் கோபங் கொள்ளாமலிருப்பதற்குமே. இங்கே புத்தியின் விளக்கம் கொஞ்சமிருக்கிறதல்லவா? ஆனால் மனதே மேல் கொண்டு நிற்கிறது. அதனாற்றான் இது கொள்ளைப் பொருளென்பதை மறக்கும்படிக்கும் அல்லது மறந்து விட்டதுபோல விருப்பதற்கும் நாம் உடன்படுகிறோம். அதாவது, நமது விவேகம் பலங் குறைந்து நிற்கிறது. அறிவிற்கு மயக்கங் கொடுக்கிறோம். இது புத்திசாலித்தனமாகுமா? அல்லவே.

ஏழைகளிடம் அபகரித்த பொருளைக் கொண்டு ஏழைகள் பொதுப் பெயரால், பொதுக் காரியம், பொது தருமம் செய்யட்டும். இதுவே முறை. அந்தப் பொருளில் தாங்களும் பாகம் வைத்துக் கொண்டு, அற்பம் இறைவன் வழிபாட்டுக்கெனக் கொடுத்து விட்டு, அதுவும் தான் தன் சொந்தத்தில் தருமம் செய்ததாக நடிப்பதும் பேசுவதும் புகட்டும் பொய்யுமல்லவோ? பகட்டும் பொய்யும் புத்தி, அறிவு, விவேகத்தினிடம் கிடையா. மனத்தின் கோலங்களும் கேவலமான சூதுகளுமே இம்மாதிரியான நிகழ்ச்சிகள், செய்கைகள்.

இன்னும் விந்தையானவைகளு மிருக்கின்றன. ஏழைப்பணத்தைத் தாங்களே உபயோகித்துக் கொண்டு, தாங்கள் மற்றவர்களைப் போல பொதுவரிகள் கொடாமல், இன்னும் வரிகள் ஏழைகளிடமே வாங்க வேண்டுமென்பதாக வாதிக்கும் காரியவான்களு முண்டு. இந்தக் காரியஸ்தர்களும் ஏழைக்கொள்ளைக்காரர்களேயாகும்.

இப்பெரியார்களுக்கேற்படும் இன்னல்கள் பல. சந்ததியிருப்பதில்லை. தங்கி நிற்பதில்லை; நின்றாலும் குறைப்பாடுள்ளவர்களாக விருக்கும். தாங்களுக்கும் உடல் நலமில்லை. எப்படியிருக்கும்? மனது மூன்று கோணலாயிருக்கும் போது, மனசாக்ஷிக்கு வாய்ப்பூட்டிட்டிருக்கும்போது, தேகமாத்திரம் தழைக்குமா? சதா ஏக்கம் உள்ளே; பகட்டு வெளியே. இந்தச்சம்பிரமத்தில் இவர்களுக்கு மரியாதைகள் வேண்டும்: தங்களைப் பிறர் மதிக்கிறதில்லையென்ற சஞ்சலம்: அதற்காக வீண்கோபம். இவர்களிடம் அன்பு பாராட்டுவது எப்படி முடியும்? இறைவனையே ஏமாற்றி விட்டோமென்றிருக்கும் இவர்களுக்குப் பிறர் அஞ்சுவார்களேயன்றி, மதிப்பு எப்படி யுண்டாகும்?

இவைகளைத் தெரிந்து கொள்வது தான் புத்தியினுடைய வேலை, புத்தியினுடைய தொழில். வேறு எளிதான வழியில் புத்தியைப்பற்றி விளக்கிக் காட்டுவதென்றால் ஏதோ பரிபாஷையாகத்தானிருக்கும்.

---

**நீங்கள் உங்கள் கடமையைச் செய்து விட்டீர்களா? இல்லையாயின் உடனே உங்கள் சந்தாவை அனுப்பி விட்டு ஒவ்வொருவரும் இயன்ற அளவு புதிய சந்தாதாரர்களைச் சேர்த்தனுப்புங்கள்.**

# சமயப் பகுதி

## இந்து தெய்வ தத்துவார்த்த விளக்கம்

(தொகுதி 4, 154-ம் பக்கத் தொடர்ச்சி)

### இலிங்க மூர்த்தம்

[திருவாளர் வை. ச. இராமலிங்க முதலியார் அவர்கள், கஞ்சீபுரம்.]

அருமணிக் கடல் சூழ்ந்திலகு மிந் நிலவுலகில் சைவசித்தாந்திகளால் "பரமசிவம்" எனவும், வேதாந்திகளால் "பிரமம்" எனவும் கொள்ளப்பட்டு, யாதொரு பேதாபேதமற்று, ஒலி முதலிய புலன்களின்றி, மனோவாக்குகளுக் கெட்டாததாய், அளவில்லாத பேரொளியாய், தனக்குமேல் நாயகமில்லாததாய், அருவாய், நின்மலமாய், குணரகிதமாய், அநந்த குணமணியாய், வண்ணமற்றதாய்,நாசரகிதமாய், சர்வ ஜகத்துக்கு மேதுவாய், அவ்யக்தமெனப் பழமறை பகர்வதா யுள்ளது சுத்தசிவம். இத்தகைய சிறப்பினை வாய்ந்த அப்பரமசிவம் (பிரமம்) ஆன்மாக்களின் தியானபாவனை நிமித்தம் நிட்கள சகளத் திருவுருக் கொண்ட நிலை இலிங்கமெனப்படும். லிங்க மென்னுஞ் சொல் (குறி) அடையாள மென்னும் பொருளை யுணர்த்தும். அடையாள மென்பது ஒரு பொருளை இதுவெனவுணர்த்தற்குச் சிறந்த குறியாம். அக்குறி பிறிதொரு பொருளை யுணர்த்தாது குறித்த பொருளை யுணர்த்தும். அக்குறியை எப்பொழுது உபயோகப் படுத்துவதெனவாராயுமிடத்து ஒரு பொருளைப்பிறிதொருவருக்கு நேரிற் காட்ட முடியாத சந்தர்ப்பத்தில், அப்பொரு ளித்தன்மைத்தா யிருக்குமென்று அத்தன்மையை யுணர்த்துகின்ற (விளக்குகின்ற) ஒரு குறியைக் காட்டுவது வழக்கமாம். அதுபோல இங்கு சிவலிங்கமாகிய பொருளை நேரிற் காட்ட முடியாத சந்தர்ப்பத்தில் அச்சிவப் பொருளிருப்ப தித்தன்மைத் தென்று காட்டும் அடையாளமாயிருந்தது. லிங்கம், சந்திர சேகரர், சோமாஸ்கந்தர் முதலிய திருமேனிகளெல்லாம் பிறிதோரண்டத்தில் பேசுந் தெய்வமாகக் காணப் படுமாதலால், அத்திருமேனிகளை யுள்ளவாறே காட்டும் அம்மூர்த்தங்களுக்கு லிங்க மென்ற பெயர் இடையாது. உருவப் பொருளல்லாத சிவப் பொருளைக் குறிப்பதற்கே லிங்கமெனப் பட்டது. இனி இலிங்கமென்பதற்கு எல்லாந் தோன்றி யொடுங்குதற்குரிய மூலமெனவும், சித்தரித்த லெனவும் பொருள் கொள்ளலாம். இலிங்=லயம், கம்= தோற்றம். சிருட்டியாதி பஞ்ச பஞ்ச கிருத்தியஞ் செய்யும் ஈசுரப் பிரபாவமே இலிங்கமாகும். புண்ணிய பூமியாகிய நம் பாத கண்டத்திலே வடக்கே இமயந் தொட்டு தெற்கே கன்னியா குமரி வரையிலும் வியாபித்துள்ள எண்ணிறந்த சிவக்ஷேத்திராலயங்க டோறும் மூலட்டானத்திலே (கற்பக்கிருஹம்) மேற்கூறிய திவ்விய தேஜோமயமாகிய "இலிங்க மூர்த்தம்" காணப்படுகின்றது. சிவலிங்கம் என்பது மிதுவே. இத்தொடர் சிவமாகிய லிங்கம் என விரியும். சிவலிங்க மென்பதிற் "சி" என்பது சிவமாகிய நாதத்தையும் "வ" என்பது சத்தியாகிய பீடத்தையுங் குறிப்பனவா மென்க. அதாவது சிவத்தையும் அருளையுங் குறிக்கும். சிகரம் பற்றின்மையைக் குறித்த ஓரெழுத் தொருமொழி. இதனைக் கற்றறிந்த மேலோர் "நாயோட்டு மந்திரம்" என்பர். இதனை "நாயோட்டு மந்திரம் நாதனிருப்பிடம்" என்னுந் திருமூலர் திருவாக்கு நன்கு வலியுறுத்தும். வகரம் வாவென்னுங் கிருபைக் குறிப்பை யுணர்த்து மொழியாய்க் குறுகி நின்றது. ஆகவே சிவமென்னுஞ் சொல் பற்றின்மையால் எப்பொருட்கும் வேறாயும் கிருபையினால் எல்லாப்பொருள்களுட னொன்றாயுங் கூடி நிற்றலால் எல்லாப் பொருளுக்கு மங்கலத்தைக் கொடுப்பதில் தனக்குமேலொரு மங்கலப் பொருளின்மையை யுணர்த்தி, எப்பொருட்கு மேலாய் மங்கலத்தைத் தருவது என்பது பொருள். மங்கலப் பொருளாகிய அழிவிலின்ப முத்தியைத் தந்து தன்மயமாக்கிற் தன்னுள் லயிக்கச் செய்வது என்பதே சிவலிங்க மென்பதற்குப் பொருள். சிவஞானிகள் பாவனை யுற்றதே சிவலிங்கம். ஆகவே இம்மண்ணுலகினுள்ளார்கள் கடவுளை வழிபடுவதற்குப் பார்த்த மாத்திரையானே, பொதுவான உணர்ச்சியுடையார்க்குக் கடவுள் என்ற எண்ண சிறப்பான யுணர்ச்சி யுடையாருக்குப் பரவெளியாகிய சிவம் என்ற எண்ணமும் உண்டாகும் பொருட்டு, அப்பரமசிவமே சிவலிங்கமாகிய ஒரு திருமேனியைக் கொண்டருளிற்று. இங்ஙனமிறைவன் கொண்ட நிட்கள சகள வுருவைத்தைத்தான் "சிவலிங்கம்" என்று நாம் கூறுகிறோம். இவ்விலிங்கத்தின் பிண்டிகையானது (ஆசனம்) சத்தியுருவம். இலிங்கமானது சிவரூபம். ஆகவே இலிங்கம் ஞானசக்தி வடிவம். பீடம் கிரியா சத்தி வடிவம். ஆதலினிவ்விரண்டுஞ் சிவனதிஷ்டிக்குந் தேகம். இத்தேகத்தை யதிஷ்டித்துள்ளவனாகிய பரசிவன் லிங்கியாம்.



இனி இச் சிவலிங்கத்தின் போதபேத வகைகளை யாராயுமிடத்து அவ்வியந்த லிங்கமெனவும், வியக்தாவியக்த லிங்கமெனவும், வியக்த லிங்கமெனவும் மூவகைப்படும். இதனை

"அவ்வியத்த மற்றை வியத்தம்வியத் தாவ்வியத்த
மிவ்விதத்தான் மூன்றிலிங்க மென்"

என்னு மான்றோர் வாக்காலுணர்க. "அவ்வியக்தம்பீடலிங்கம்" என்னுஞ் சுருதியின் பிரமாணப்படி நிஷ்கள சொரூபமாய், பீடமும் லிங்கமுமாயிருப்பதே "அவ்வியக்த லிங்க மெனப்படும்.

" விளங்கின் முகமே வியத்தாவ் வியத்த
மிலிங்கந் தனிலென்றே யெண்"

என்னுஞ் சுருதி வாக்கியப் பிரமாணப்படி சகள நிஷ்கள சொரூபமாய் லிங்கத்திலே முகமுந் தோள்களுமாய் வெளிப்பட வியக்தாவியக்த லிங்க மெனப்படும்.

" ..............அங்கமனைத்தும் விளங்கு
மவ்விலிங்க மேவியத்தமாம்"

என்னுஞ் சுருதிப்படி சகல வுருவமாய் சந்திர சேகரர் முதலிய பல வடிவங்களாய் விளங்கும் இருபத்தைந்து சிவமூர்த்தங்களுமே வியக்தலிங்க மெனப்படும். பின்னு மிச் சிவலிங்கமானது, அசல லிங்கம், சலனலிங்கம் அசலசல லிங்கம். எனவும் நான்கு வகைப்படும் இதனை

" அசலஞ் சலனஞ் சலாசல மற்றை
யசலசல மென்றொருநான் காம்

என்னுஞ் சைவ சமய நெறியாலுணர்க. ஒரு க்ஷேத்திரத்தின் கோபுரம் விமானம் முதலியன அசல லிங்க மெனவும்; இதயத்திற் கற்பிக்கப்படும் சிவலிங்கம் சலன லிங்க மெனவும் ; வர்ணலிங்கம் இரத்தின லிங்கம் முதலியன சலாசலலிங்க மெனவும்; வேதிகையிலே மண்டல மிட்டுப் பூசிக்கப்படின் அது அசலசலலிங்கமெனவும் கூறப்பட்டுள்ளது. ராவாண லிங்கம் முதலியன இஷ்ட லிங்க மாகவும் பரார்த்த பூசையிலே சிவ சந்நிதியில் அங்க லிங்க மாகவும் பூசிக்கப்படிற் சலமெனவும் பரார்த்தமாகத் தாபிக்கப்படின் அசல மெனவும் நிற்றலால் சலாசலமெனப்பட்டன. தீக்ஷைக்குச் சொல்லியவாறு வேதிகையிலிட்டுப் பூசிக்கப்படின் அசல.மெனவும் நிற்றலால் அசலசல மெனப்பட்டன. தவிர வேத சிவாகம் துய்த்துணர்ந்த மேலோர்கள் தூபியைத் தூலலிங்க மெனவும், விமானத்துள் எழுந்தருளியிருக்கும் சிவலிங்க வடிவாய் இறைவனைச் சூக்குமலிங்க மெனவும் அதற்கு முன் உள்ள பலி பீடம் பத்திரலிங்கமெனவுங் கொள்கின்றனர் இவ்வுண்மையை

" தூலலிங்க மாந்தூபி சூக்குமமா முள்ளிலிங்க
மேலும் பலிபத் திரம்"

என்னுஞ் சுருதி வாக்கியப் பிராமணத்தாலும்,

தூயவிமானமுந் தூலமதாகுமா
லாயசதாசிவமாகு நற்சூக்குமம்
பாயவெலி பீடம் பத்திரலிங்கமாம்
ஆய அரன்நிலை ஆய்ந்து கொள்வார்கட்கே

என்று திருமூலர் கூறியிருத்தலினாலு முணர்க. கோபுரத்தையுந் தூபியையுஞ் சிவபெருமானாகப் பாவித்து வணங்கும்படி சில சுருதிகள் முறையிடுகின்றன. இதனை [தொழு

" தூபியினைக் கோபுரத்தை யீசனெனக் கண்டு
பாபமறும் வாய்த்துறு மின்பம்"

என்னுந் திருக்குறளாலுணர்க. இஃதல்லாமல் ஸ்தாவரலிங்கம் சங்கம லிங்கம் என இருவகை லிங்கங்களுளவா மென்றும், ஸ்தாவர லிங்கமானது ஆலயத்துள் எழுந்தருளி யிருக்கின்ற சிவலிங்கமாகு மென்றும், சங்கம லிங்கமானது பக்தர்களுடைய இதயத்துள்ள லிங்கமாகு மென்றும் சில சிவாகமங்களால் அறியக் கிடக்கின்றது. புறப்பூசையில் உபயோகிக்கப்படும் லிங்கங்கள் பலதிறப்படும். பச்சைமண் லிங்கத்தினும் சுட்டமண் லிங்கம் பதின்மடங் கதிகம். அதினுந் தாருலிங்கம் பதின்மடங்கதிகம். அதினுஞ் சைலலிங்கம் பதின்மடங்கதிகம். அதினும் லோகஜலிங்கம் நூறுமடங்கதிசம். அதினும் இரத்தின லிங்கம் அனந்தமடங்கதிகம். அதினும் மணிலிங்கம் இலக்ஷமடங்கதிகம். அதினும் வாணலிங்கம் கோடி மடங்கதிகம். அதினும் இரசலிங்கம் கோடி மடங்கதிகம். அதினும் அனந்தமடங்கதிகம் சுயம்புலிங்கம். பிரதிஷ்டா பூஜை லிங்கங்களில் முக்கியமாக சுயம்புலிங்கம், தேவிலிங்கம், திவ்ய லிங்கம், ஆர்ஷக லிங்கம்,மானுஷலிங்கம், இராக்ஷச லிங்கம், ஆசுரலிங்கம்' என எழுவகை லிங்கங்கள் உள.

1. தானே தோன்றியது - சுயம்புலிங்கம் (பருவதாகாரமாயுள்ளது, உதாரணம் - ஸ்ரீ சிதம்பரம் - திருமூலத்தான சிவலிங்கம்)

2. லோகமாதாவாகிய பார்வதி தேவியாரால் பூஜிக்கப்பட்ட லிங்கம் - தேவிலிங்கம் (உதாரணம் - கச்சியேகம்பத்திற் காமாக்ஷியம்மையாரால் பூஜிக்கப்பட்ட ஏகாம்பரநாத லிங்கம்)

3. தேவர்களால் ஸ்தாபிக்கப்பட்டது - தைவிக லிங்கம் (உதாரணம் - திருமாற்பேறில் விஷ்ணு பூஜித்த மால்வணங்கீசுரமகா லிங்கமும், சீகாழியில் பிர்மாவினால் பூஜிக்கப்பட்ட பிர்மபுரீசமகா லிங்கமும், திருக் கண்ணூர் கோயிலில் இந்திரன் ஸ்தாபித்துப் பூசித்த கண்ணாயிரேசுர லிங்கமுமா மென்க)

4. இருஷிசிரேட்டர்களால் பூஜிக்கப்பட்டது - ஆர்ஷக லிங்கம் (உதாரணம் - திருக்குற்றாலத்தில் அகத்தியரால் ஸ்தாபித்துப் பூஜிக்கப் பெற்றகுறும்பலா வீசுர மகாலிங்கம்)

5. மானுடப் பிறப்பினரால் பூஜிக்கப்பட்டது - மானுஷ லிங்கம் (உதாரணம், திருக்கன்ரூப்பூரில் பிராமணப் பெண்ணால் பூஜிக்கப்பட்ட நடுதறியப்ப மகாலிங்கமும், திருவாப்பாடியில் சண்டேசுர நாயனாரால் பூஜிக்கப்பட்ட பாலுகந்தேசுரமகாலிங்கமுமாமென்க)

6. இராக்ஷசர்களால் பூஜிக்கப்பட்டது - இராக்ஷச லிங்கம் (உதாரணம்,இடும்பாவனத்தில் இடும்பனால் பூஜிக்கப்பட்ட சற்குண நாதேசுரலிங்கம்)

7. அசுரர்களால் பூஜிக்கப்பட்டது - ஆசுரலிங்கம் (உதாரணம் - திருவோணகாந்தன்றளியில் ஓணன் காந்தன் என்பவர்களால் பூஜிக்கப்பட்ட ஓணகாந்தேசுர லிங்கம்)

இவைகளே யல்லாமல் பஞ்சபூத ஸ்தலங்களில் பஞ்சபூதமகாலிங்கங்கள் வேறே யிருக்கின்றன. அவையாவன; காஞ்சி - பிருதிவிலிங்கம், திருவானைக்கா - அப்புலிங்கம், திருவண்ணமலை - தேயு லிங்கம், திருக்காளத்தி - வாயுலிங்கம், சிதம்பரம் - ஆகாய லிங்கம். இலிங்க பேதா பேத வகைகளை இன்னும் விவரிக்கிற் பெருகுமாகையால், இனி இதன் உண்மை தத்துவத்தை யாராய்வாம்.

இச் சிவலிங்க அமைப்பு பரவெளியாகிய அருவத்தைக் குறித்ததாயினும், பிருதிவியம் சத்திலமைந்திருக்கின்றமையால் அருவுருவத்திருமேனியெனப்படும். பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம், சூரியன், சந்திரன், ஆன்மா, என்னுமிவையெட்டுமின்றவனது "அட்டமூர்த்தம்" எனப்படும். இவ்வெட்டினுள்ளும் எல்லாமாயிருக்கின்ற இறைவனை வழிபடலாம். பிருதிவி யம்சமாய் விளங்கு மிச்சிவலிங்கத்துள் வழிபடுவோனைச் சேர்த்து (ஆன்மா) மேற்கூறிய வெட்டும் அடங்கியிருக்கின்றன வென்பது ஆன்றோர்களின் துணிபாதலின் இச்சிவலிங்க வழிபாடே மற்றேனையவற்றுளெல்லாம் சாலச் சிறப்புடைத்தாம். சிவலிங்கவடிவம் பிரணவத்தைக் குறிக்கும். இதனை

" இலிங்க நற்பீட மிசையு மொங்காரம்
இலிங்க நற்கண்ட நிறையு மகாரம்
இலிங்கத்துள் வட்ட நிறையு முகாரம்
இலிங்க மகார நிறைவது நாதமே"

என்னுந் திருமந்திரத்தானறிக.பிரணவமோ அண்டவடிவு (உலகவடிவு). எனவே சர்வாண்டங்களும் தாமே யென்பதை இவ்விலிங்க மூர்த்தங் குறிப்பாலுணர்த்துகின்றது. சிவலிங்கத்தின் விருத்தமே ருத்திரபாகம்.பீடத்தின் அதோ பாகத்தின் அடி நான்குமூலை பிரமபாகம். நடுவின் எட்டுமூலை விஷ்ணுபாகம்.இவற்றுள் பிரம்மபாகம் நபும்ஸகலிங்கமெனவும், விஷ்ணுபாகம் ஸ்திரீலிங்கமெனவும், உருத்திரபாகம் புவலிங்க மெனவுங் கொள்ளக் கிடக்கின்றது. இதுவே பிரணவ முதற்பொருள். இதன் சோதியுருவே மகார, அகார, உகாரமாயிருக்கும். அகாரவாச்சியமே சிவம், உகாரவாச்சியமே சத்தி. மகாரவாச்சியமே பரம் எனவும்; அகாரம் நாதம், உகாரம் விந்து, மகாரம் கலை யெனவும் வேதம் கூறும். இவை சிவனது அவ்யகத்தவுருவாகிய நிஷ்களம். சிவலிங்கத்திற் காணப்படும் ஆவுடையாள் சிற்சக்தியைக் குறிக்கும். எவ்வாறெனில் பரசிவமாகிய பரவெளியில் எப்பொழுதுமோரசைவுண்டு. அவ்வசைவைச் சிற்சத்தியென்பர். இவ்வசைவே உயிர்களிடத்துள்ள மல சக்தியைக் கெடுத்து, சுத்தப்படுத்துமென்றறிக. இவ்வசைவே பிரபஞ்ச சிருட்டிக் கேதுவாயிருக்கின்றது.இதனால் சிவம் சத்தியோடுறிற் சகம் விரியும் என்பது போதருகின்றது. பரவெளியாகிய சிவலிங்கத்தின்கீழ் அசைதலைக்கும் இவ்வாவுடையாள் அடங்கிக் காணப்படுதலின் சத்தி சிவத்திற்கடக்கம் என்பது வெளியாகின்றது. தவிர, சத்தியின்றி சிவத்தாலெதுவு மாகாதென்பது மிதனால் தெரிகின்றது. இனி ஆவுடையாள் வளைந்திருப்பதோடமையாது கோமுகி யென்னும் பெயரால் ஒரு பக்கத்தில் நீண்டிருப்பதின் கருத்தென்னையோ வெனின், மேற் கூறியவாறு உயிர்களின் மலசக்தியைக் கெடுக்குங் கருணையே அசைதலென்பதை யுணர்த்தும் பொருட்டு உயிர்களை நோக்கிய குறிப்பாக அமைந்திருக்கின்றது. சிவலிங்கமும் ஆவுடையாளும் ஆண் பெண்ணென நின்றமையால் இப்பரவெளியிலடங்கி யிருக்கும் எல்லாப் பொருள்களுள்ளும் ஆண் பெண்ணென்கிற இரு பகுதியாகவே காணப்படுகின்றன. இலிங்கத்தி லமைந்திருக்குங் கோமுகியானது கோவாகிய பசுக்களை (உயிர்களை) நோக்குங் கருணை யுடையதென்பதைப் புலப்படுத்துகின்றது. ஆவுடையாளின்கீழ் எண்கோணமாகவும் அவ்வெண் கோணத்தின்கீழ் நாற்கோணமாகவும் அமைந்திருப்பதானது நான்கு திக்கும் எட்டு கோணமுமாயிருக்கின்ற எல்லா அண்டங்களும் தன் சத்தியினலாக்கப்படுகின்றன வென்பதையும், பரவெளியாகிய தன்னுள்ளே யவைகளடக்கம் என்பதையு முணர்த்துகின்றது. சில சிவலிங்கங்களில் ஒரு முகமும் மூன்று கண்களுக் காணப்படுகின்றன. அதன் கருத்தென்னையோவெனின் கண் சந்திரன் சூரியன் அக்கினி என்று மூன்றுமாய்ப் பிரகாசிக்கிறே மென்பதையும் முகம் கருணையுடைத்தாயிருக்கிறே மென்பதையும், உணர்த்துகின்றது. மேற்கூறியவாறு சிவலிங்கம் திருமுகங்களைப் பெற்றிருக்கின் முகலிங்கமெனப் பெறும். இதனை ஸர்வஸமலிங்க மெனவுங் கூறுவதுண்டு. ஈசானம், தற்புருடம், வாமதேவம், அகோரம், சத்தியோ ஜாதம் என ஐம்முகங்களைக் கொண்டிருக்கின் பஞ்சமுக லிங்க மெனப்படும். சகல புவனதாரமாய் நின்று சிருட்டி திதி சங்காரம் திரோபவம் அனுக்கிரகம் என்னும் பஞ்ச கிருத்தியம் நடத்தலை இது குறிக்கின்றது. சிவலிங்கத்தின் உண்மைத் தத்துவார்த்தத்தை கற்றறிந்த மேலோர் பல வகையாகச் சிறப்பித்து கூறுவர். விரிக்கிற் பெருமாதலால் இவ்வகை மேன்மை யுற்ற சிவலிங்கப் பெருமானைப் பூஜித்துப் பேறுபெற்ற மகான்களையும் இப்பூஜையினல் அடையும் பயனதியவை



களைப் பற்றியும் ஒரு சிறுதுரைத் திதனை முடிப்பாம்.

விஷ்ணு காசிக்ஷேத்திரத்தின்கண்ணே பதினாயிரம் வருஷம் தவம் செய்து பெருமானைப் பூஜித்து தமது உத்தமமான பதவியையும் உலக ரக்ஷிப்புத் தொழிலுரிமையும் பெற்றார். பிரமா காஞ்சியிற் சிவலிங்கப் பெருமானைப் பூஜித்து தனது சிருஷ்டி அதிகாரத்தையும் சரஸ்வதி அன்ன வாகன முதலியவைகளையும் பெற்றார். இந்திரன் மதுரையிற் சோமசுந்திர லிங்கப் பெருமானைப் பூஜித்து தன் பழி நீங்கப்பெற்றான். இங்ஙனம் இந்திரன்,அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானர் என்னுந் திக்குப்பாலகர்களும் முறையே ஸ்ரீ சைலம் - திருவருணை - கேதாரம் - கோகரணம் - சம்புகேசுரம் - காளத்தி - சித்தவடம் - திருவாரூர் முதலிய க்ஷேத்திரங்களில் பூஜித்துத் தத்தம் திசையின் ஆதிபத்யத்தையும் வாகனங்களையும் ஆயுதங்களையும் பெற்று பெருமையுற்றனர். தவிர நவகோள்களும் சப்த ரிஷிகளும் துருவன் ஆதிசேஷன் முதலாயினோரும் சிவலிங்கப் பெருமானைப் பூஜித்துப் பயனடைந்ததாகப் பலசரித்திரங்கள் கூறுகின்றன. தவிர தேவர்-அசுரர் - கருடர் - யக்ஷர் - வித்தியாதரர் - மகோரகர் - கின்னரர் - மாமுனிவர் - கிம்புருடர் - மானிடர் முதலாயினோரும் பூஜித்து இன்பமடைந்திருக்கிறார்கள். இதல்லாமல் யானை - சிலந்தி - பாம்பு - பசு - குரங்கு - கருக்குருவி - எறும்பு - அணில்- நாரை - முதலிய அஃறிணை வுயிர்களும் சிவலிங்கப் பெருமானைப் பூசித்து பேறு பெற்றதாகச் சரித்திர வாயிலாயறிகிறோம். இச் சிவலிங்க வழிபாட்டால் இம்மையில் புகழும் நற்கீர்த்தியும், கல்வி, செல்வம், நன்மனையாள், சத்புத்திரப்பேறு, தீர்க்காயுசு, சத்துருஜயம், இராஜவசியம் முதலிய சர்வாபீஷ்டங்களும், மறுமையில் சாலோக சாரூப சாயுச்சிய பதவியையும் அழிவிலின்பத்தையும் பெறுவாரென்பது திண்ணம். ஆகையால் இந்து சகோதரர்களே ! இத்துணை மகிமை பெற்றிலங்கும் சிவலிங்க மூர்த்தத்தைப் பக்தி சிரத்தை வைராக்கியத்தோடு விதிமுறை பூஜித்து ஆன்மப் பேறடைய முன் வருவீர்களாக. இதற்கு நம் வெற்றி வேலுடைக் கொற்றவன் திருவருள் துணை புரிவதாக


# மகாநாட்டு மலர்

நமது முதல் மகாநாட்டின் நிகழ்ச்சிகள், வைபவங்கள், தலைவர்களின் பேருரைகள், தீர்மானங்கள் நிறைந்துள்ளன.

தலைவர்களின் ஆப்டோன் படங்கள்
**40**-க்கு மேல் பொலிந்து விளங்குகின்றன.

வழவழப்பான காகிதம். கண் கவர் அழகு.

செங்குந்தர் ஒவ்வொருவர் கையிலும்
இருக்கவேண்டியது அவசியம்.

விலை அணு **8** தபாற் செலவு அணு **3**

மானேஜர், செங்குந்தமித்திரன் ஆபீஸ்,
சென்னை.




[திரு. ஜ. க. பெருமாள்சாமி முதலியார், பவானி.]

வாலிபர்களே!

யான் சர்வஜன முன்னேற்றத்தைக் கருதியவனே யானாலும் 'முதலிற் குல முன்னேற்றம் வேண்டும்' என்ற ஒரு கொள்கையைக் கொண்டு இக்கட்டுரையை எழுதுகின்றேன். இக்கட்டுரை முன்னேற்றத்தைக் கைக்கொண்ட வாலிபர்களுக்கன்று. கல்வி யறிவுமின்றி, உலகத்தில் முன்னேற்றத்தைக் கருதிப் பலகுலத்தவரும் பல முயற்சி புரிந்து வருவதை யறியும் அறிவு மின்றிப் புராதனமாகிய எண்ணங்களைக் கொண்டுள்ள பெரியோர்களின் வார்த்தையை மீற வழியின்றித் திகைக்கும் வாலிபருக்கே யாகும். ஆனால் நான் இவ்வாறு சொல்வதைக் கொண்டே என்னைப் "பெரியோரைப் பழிக்கும் பாவி" யென்றும், "அதிகப் பிரசங்கி" யென்றும் கூறுதல் வேண்டாம். அறிவுடையோர் அவ்வாறு கூறவே மாட்டார்கள். முக்கியமாக வாலிபரை நோக்கி யான் வேண்டிக் கொள்வது எதன் பொருட்டென்றால், வாலிபர்களாலேயே ஒவ்வொரு சமூகமும் முன்னேற்ற மடையு மென்பது பல பெரியார்களின் அபிப்பிராயமாகும். வாலிபராலன்றி ஒரு சமூகம் முன்னேற்ற மடையா தென்பது உறுதியான வாக்கியமாகும். இனி நான் உங்களுக்குச் சொல்ல வேண்டியதை ஆரம்பிக்கின்றேன்.

சகோதரர்களே! நீங்கள் நமது தலைச் சங்கம் இதுகாறும் செய்துவந்த நன்மைகளாகிய சூரியோதயத்தைக் கண்டு விழிப்ப நடந்துள்ளீர்கள். அது காரணமாக நீங்கள் முன்னேற்ற மடையக் கருதி நாகரீகத்திலும், கல்வியிலும், உலக அனுபவங்களிலும் அவாக் கொண்டுள்ளீர்களல்லவா? நீங்கள் நல்ல ஆடைகளைத் தைத்துக் கொள்ள வேண்டுமென்றால், தேக சுத்தங் கருதி தினந்தோறும் ஆற்றங்கரை நாடிக் குளிக்க வேண்டு மென்றால், துவிச் சக்கரவண்டி யேறுவதென்றால், உங்கள் குடும்பங்களிலுள்ள பெரியோர்கள் என்ன சொல்லுகிறார்கள்? "அடே! அதிகப் பிரசங்கி, நாங்களெல்லாம் சட்டை போட்டுக் கொண்டுதான் வாழ்ந்தோமா? சட்டையில்லாவிட்டால் தங்களுக்காகாதா? தினமும் ஆற்றுக்குச் செல்ல வேண்டுமா? தண்ணீரில் குளித்துக் கொண்டு வந்தால் உடம்பு இளைத்துப் போகாதா? துவிச் சக்கரவண்டி யேறிக் கை கால் முறித்துக் கொண்டு மூலையில் உட்காரப் போகிறாயா? போக்கிரிப் பையல்களல்லவோ துவிச் சக்கர வண்டி யேறுவார்கள்" என்று சொல்லுவதுண்டல்லவா?

எனது அன்பர்களே! நீங்கள் உங்கள் பாடங்களை இராக்காலங்களில் அதிக நேரம் விழித்துக் கொண்டு படிக்க வேண்டுமென்றால், உங்கள் நட்பாளர்களிடம் கல்வியைப் பற்றிச் சம்பாஷணை புரிய வேண்டுமென்றால், இயற்கை வளப்பங்களைக் கண்டறிய வெளியே (ஆற்றங்கரை, மலையடிவாரம், அலங்காரத் தோட்டம் முதலிய இடங்களுக்குச்) செல்ல வேண்டுமென்றால், பத்திரிக்கைகளை வரவழைத்துப் பார்க்கவேண்டுமென்றால், சில நியாயங்களிடையில் பேச வேண்டு மென்றால் உங்கள் பெரியோர்கள் என்ன சொல்லுகிறார்கள்? "அடே! இவ்வளவு நேரம் விழித்துக் கொண்டு படித்திருந்தால் தூக்கம் கெடும். உடம்பு (அதனால்) கெடும். இப்படிப் படித்துப் பின்னால் எங்களுக்கு என்ன சம்பாதித்துக் கொட்டுகிறாய்! உன் சம்பாதனை வேண்டாம். அப்படித்தான் படிக்கிறாயே! உன் உதடும் ஆடுவதில்லை! உன் வாயில் கொழுக்கட்டையா இருக்கிறது? என்னவோ படிக்கிறானும். பள்ளிக்கூடத்திலிருந்து வந்தவுடன் பையன்களோடு சேர்ந்து கொண்டு அரட்டையடிக்கப்போய்விடுகிறான். வந்தால் 'வீடுண்டு' என்றிருக்காமல் திரியலாமா? பேட்மின்டன் கோர்ட்டுக்குப் போக வேண்டுமாம். என்ன! லட்சாதிபதியின் மகனா! ஆறு, குளம், மலை, தோப்பு முதலிய இடங்களுக்குப் போவது, வீண்வார்த்தை பேசிக் காலங்கழிப்பது— இதே வேலையாய் விட்டது. பெரிய உத்தியோகஸ்தனைப்போலப் பேப்பர் படிப்பது, அதற்காகக் காசைச் செலவழிப்பது. எத்தனைப் புஸ்தகங்களுக்குப் பணம் கொடுப்பது? நீ படிப்பதும் வேண்டா; எங்களைக் காப்பாற்றுவதும் வேண்டா. பெரிய மனிதனைப் போலப் பெரியவர்களிடம் சென்று நியாயம்பேசுவது! உனக்கேனடா இந்த வேலை? போதும், போதும்" என்று சொல்லுகிறார்க ளல்லவா?

இன்னும், நீங்கள் சங்கங்களில் அங்கத்தினராகச் சேரவேண்டு மென்றால், உங்கள் சோதரிகளை நாகரிகத்திலும் கல்வியிலும் பழக்க வேண்டுமென்றால், கைத் தொழில்களில் பெரிய வேலைப்பாடுள்ள தொழில்களைச் செய்ய வேண்டுமென்றால், இன்னும் மற்ற தொழில்களில் பழக வேண்டுமென்றால், உங்கள் பெரியோர்கள் உங்களுக்கு இடந் தருகிறார்களா? இல்லை. என்ன சொல்லுகிறார்கள்? "அந்தோ! சங்கத்தில் போய்ச் சேருகிறானும், அதற்கென்னவோ பணந்தர வேண்டுமாம். அதிலேதாவது வந்தால் யார் ஜவாப்தாரி? அந்தப் பெரிய வேலையெல்லாம் நமக்கு எதற்கு? இனி, எங்காவது சங்கம் கூடினால் போகவேண்டு மென்பாய். அதற்கும் பணந்தர வேண்டும். இந்தத் தொல்லை யெல்லாம் எதற்கு? இப்படித் திரிந்தால் நமது தொழிலுக்கு இடையூறல்லவா? பெண் பிள்ளைகளுக்குச் சட்டை எதற்கு? புதுநூதனம் செய்ய வேண்டுமென்கிறாய். உன்பாட்டன் இப்படியா பிழைத்தான்? பெண்பிள்ளையும் படிக்க வேண்டுமா? ஆண்கள்தான் படித்தால் பிரயோஜனப்படும். பெண்கள் படித்து என்ன உத்தியோகஞ் செய்யப் போகிறார்கள்? வீட்டு வேலைகளைச் செய்து அடுப்பூதி வருகின்ற பெண்ணுக்குப் படிப்பெதற்கு? நாம் செய்து வந்த தொழிலையே செய்யாமல், பேட்டென்றும், மிஷன் என்றும், அடைகட்டுவதென்றும், வேறு பேட்டுக்கு அடைபிரித்துக் கட்டவேண்டு மென்றும், அடை முந்தியென்றும், புட்டா என்றும் கயிறுகளுக்கும் பிளானுக்கும் காசைக்கொட்டி அடை கட்டி வேலை கெட்டுத் திரிகின்றானே. அப்படிச் செய்து கொண்டிருந்தால் உயர்ந்த தொழிலாளி என்று சொல்வார்களா? இவ்வளவு சிரமம் இல்லாமல் பழைய துணியையே நெய்து கொண்டிருந்தால் போதுமல்லவா? அதில் வரும் இலாபத்திற்கும் வேலைக் கெடுதலுக்கும் சரியாகத்தானே போகும். "நெய்வதை விட்டு நினைத்தான் கைக்கொள்வன்" என்பதுபோலத் தன் தொழிலிருக்க, மோட்டார் கார் ஒட்டப் பழக வேண்டுமாம். அது தான் தோன்றிப் பையன்கள் செய்யும் வேலையல்லவா? இயந்திர சாலைக்குப் போகவேண்டுமாம். பட்டணங்களுக்குச் சென்று நோக்கந்தெரிய வேண்டுமாம். பட்டணம்போனால் பட்டணம் போக்கிரிகளிடம் ஏமாறிப் போவாயே, பினாங்கு, சிங்கப்பூர், கொழும்பு, ரங்கோனுக்குக் கப்பலில் ஏறிப் போகிறானும். உனக்கென்னடா அவ்வளவு துணிவு? நாங்களெல்லாம் நாடோடிகளாகத்தான் திரிந்தோமா? நாங்கள் இவ்வூரிலேயே யிருந்து கொண்டு பிழைக்கவில்லையா! போடா, போ" என்று சொல்வதுமுண்டல்லவா?

இவ்வாறு நமது பெரியோர்கள் சொல்வார்களா என்றும், அவ்வாறு சொன்னால் கேட்பார்களா என்றும் ஆசங்கை நிகழலாம். அவ்வாறு சொல்லும் அறிவற்ற பெரியோர்கள் சிலர் இருப்பதாலும், அவர்கள் வார்த்தைக்குப் பயந்து அடங்கி அவர்கள் சொற்படியே நடக்கும் வாலிபர்க ளிருப்பதாலும் தான் இது எழுதலாயிற்று. நானும் பல இடங்களில் இவ்வாறு சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆதலால், வாலிபர்களே! இப்படிப்பட்ட பெரியோர்கள் வார்த்தையைத் தள்ளுவது குற்றம் என்றெண்ணாதீர்கள். இப்படிப்பட்டவர்கள் பெரியோர்களல்லர். அறிவால் மிகுந்தவர்களே பெரியோர்களானதால் அறிவற்ற பெரியோர்களின் வார்த்தையை நாம் நீக்குதல் குற்றமாகாது. ஆதலால் முன்னேற்ற வழிகளைக் கடைப்பிடிக்கும் முயற்சியைக் கைக்கொண்டு முன்னேற்றத்தை யடைவீர்களாக.

158888

# ஆராய்ச்சிப் பகுதி

## முருகன்

(செங்குந்தமித்திரன், தொகுதி 4-ல் 169-ம் பக்கத்தொடர்ச்சி)

[திரு. ஜி. இராஜு முதலியார் அவர்கள், பூவிருந்தவல்லி]

ஆனாற் கந்த புராணத்தினும் பிற நூல்களினுஞ் சூரபன்பனுக்கு "இரு பேருருவின் ஒரு பேரியாக்கை" கூறப்பட்டதாகத் தெரியவில்லை. ஆகையால், இதின் வேறுபாடு காணப்படுகிறது.

இனி, இவ்வரலாறு பரிபாடலிற் காணப்படுவது எங்ஙனமென்று கவனிப்போம்.

3. பரிபாடலிற் காணப்பெறும் வரலாறு.

பரிபாடல் 5-ம் பாட்டு அடிகள் 22-56

"ஆதி யந்தண னறிந்து பரிகொளுவ
வேத மாபூண் வையத் தேருர்ந்து
நாக நாணு மலைவில் லாக
மூவகை, ஆரெயில் ஓரழ லம்பின் முளிய
மாதிர மழல—வெய் தமரர் வேள்விப்
பாக முண்ட பைங்கட் பார்ப்பான்
உமையொடு புணர்ந்த காம வதுவையுள்
அமையாப் புணர்ச்சி யமைய நெற்றி
யிமையா நாட்டத் தொருவரங் கொண்டு
விலங்கென விண்ணோர் வேள்வி முதல்வன்
விரிகதிர் மணிப்பூ ணவற்குத்தா னீத்த
தரிதென மாற்றான் வாய்மைய னாதலி [வு
னெரிகனன் றானுக் குடாரிகொண் டவனுரு
திரித்திட் டோனிவ் வுலகேழு மருளக் [கை
கருப் பெற்றுக் கொண்டோர் கழிந்தசே யாக்
நொசிப்பின் ஏழுறு முனிவர் நனியுணர்ந்து
வசித்ததைக் கண்ட மாக மாதவர்
மனைவியர் நிறைவயின் வசிதடி சமைப்பிற்
சாலார் தாவே தரிக்கென வவரவி
யுடன்பெய் தோரே யழல்வேட் டவ்வவித்
தடவு நிமிர் முத்தீப் பேணிய மன் னெச்சில்
வடவயின் விளங்கா லுறையெழு மகளிருட்
கடவு ளொருமீன் சாலினி யொழிய
அறுவர் மற்றையோரும் அந்நிலை யயின்றனர்
மறுவறு கற்பின் மாதவர் மனைவியர்
நிறைவயின் வழாது நிற்சூ லினரே
நிவந்தோங் கிமையத்து நீலப் பைஞ்சுனைப்
பயந்தோ ரென்ப பதுமத்துப் பாயற்
'பெரும்பெயர் முருகநிற் பயந்த ஞான்றே
யரிதமர் சிறப்பி னமரர் செல்வன் [தென
எரியுமிழ் வச்சிரங் கொண் டிகந்துவிர் தெறிந்
அறுவேறு துணியும் அறுவராகி
யொருவனை வாழி யோங்குவிறற் சேய்!
ஆரா வுடம்பினீ யமர்ந்துவிளை யாடிய
போரால் வறுங்கைக்குப் புரந்தர னுடைய"

இதற்குப் பரிமேலழகர் கூறும் உரை:— நான்முகனாகிய பாகன் கொளுவுமாறறிந்து செலவினைக் கொளுவ, வேதங்க ளாகிய குதிரைபூண்ட, பூமியாகிய தேரேறி, வாசுகி நாணாக, இமையம் வில்லாக, வெள்ளி பொன் இரும்பென்னும் மூவகையையு முடைய அரிய மதில்கள் ஒரு தீயாகிய அம்பாலே வேக, அவற்றைத் திசைகள் வெதும்ப எய்து, அமரர்க்குச் செய்யும் வேள்விக்கண் அவிப்பாகத்தை யுண்ட கோபத்தாற் பசிய கண்ணையுடைய ஈசன் உமையோடு புணர்ந்து காமத்தை நுகர்கின்ற வதுவை நாளின்கண் அமையாத புணர்ச்சியை ஒரு காலத்து அமைந்தானாக; நெற்றிக்கண் இமையா நாட்டத்தை யுடைய அவன் பக்கலிலே இந்திரன் ஒரு வரத்தைக்கொண்டு, 'இந்தப் புணர்ச்சியாற் றோன்றிய கருவை அழிப்பாயாக' என, மழுப்படையைத் தரித்தவன் வாய்மைய னாதலின், அவ்விந்திரனுக்குத் தான் கொடுத்த வரத்தைச் செய்தற்கு அரிதென மாற்றாதே, இவ்வுலகேழும் தன் மெய்ம்மையை வியக்க, அதனுருவைப் பலகண்ட மாகச் சேதித்தான்; அங்ஙனம் சேதித்தலாற் கழிந்த சேயாக்கை யாதற்குரிய கருவை 'இஃது, அமரர் சேனைக்குத் தலைவனும், எனச் சமாதியா னுணர்ந்து, இந்திரனுக்கிரதம் வராமை கூறி, அவன் பக்கலிலே பெற்றுக்கொண்டு போன தெய்வ முனிவர்கள் எழுவரும் இறைவன் கண்டமாக வசித்ததாகிய சிவதடியை நம்மனைவியர் தாத்துச் 'சமைவிப்பாராயின் நிறைவயிற் சாலார்; அதனான் அங்கியாகிய தானே தரிக்கவென வெண்ணி, அம்மாதவர் அழலைவேட்டு அதன்கண் அவியுடனே பெய்தார்; பெய்ய, அவ்வவியோடு குண்டங்களில் நிமிர்ந்த முத்தீக் கொள்ளுதலால், புரோடாசமாகிய அதனை வானத்து வடவயினுறைகின்ற மகளி ரெழுவருள் கடவுட் கற்பினை யுடைய ஒருமீனாகிய அருந்ததி யொழிய விளங்குகின்ற கார்த்திகை யாகிய அறுவரும் அப்பொழுதே அயின்றார்; அயின்றும் தம் கணவர் வேண்ட அயின்ற புரோடாச மாதலால் மறுவற்ற கற்பினை யுடைய அம்மாதவர் மனைவியர் நிறையுடைமையின் நீங்காதே நின்னைச் சூற் கொண்டார்; கொண்டு பின் இமயத்துச் சரவண மென்னுஞ் சுனையில் தாமரைப் பூவாகிய பாயற் கண்ணே ஒருங்கு பெற்றா ரென்று பௌராணிகர் சொல்லுவர். முருகா! அவ்வாறு நின்னைப் பெற்ற அன்றே இந்திரன் இகன் மிகுதி



யான் முனிவர்க்குத் தான் கொடுத்த வாக்கைக் கடந்து வந்து வச்சிரத்தைக் கொண்டெறிந்தானாக, முன் அறுவேறாகிய துணியும் அறுவராய்ப் பின்னும் ஒருவனாயினை; குழவிப் பருவத்தை யாகலான் வளரா வுடம்பினை யுடைய நீ மேவி விளையாடிய போரின் கண் வறுங்கைக்கு இந்திரன் உடைதலால்"

என்பதனாற் சிவபெருமான் உமையோடு கூடி யிருக்குங் காலையில், இந்திரன் வேண்டுகோளின்படி இந்திரியத்தைப் பலகண்டமாகச் சேதிக்க, அவற்றை யிந்திரனிடத்திலிருந்து முனிவரேழுவரும் பெற்றுச் சென்று, அங்கியிற் பெய்து, அருந்ததி யொழிந்த கார்த்திகை மாதர்களேழுவர்க்குங் கொடுக்க, அவர்கள் பெற்று, உண்டு, கருத்தரித்துப் பெற்றன ரென்றும், அவைகள் ஆறு குழவிகளும் விளையாடி யிருக்குங் காலையில், இந்திரன் அக்குழந்தைகளின் வரலாற்றை மறந்து போர் தொடுக்க அக்குழந்தைகளின் வடிவம் ஆறும் ஒரு வடிவமாய் இந்திரனை வறுங்கையாலேயே வென்றது என்பது வெளிப்படுகிறது.

இவ்வரலாறே திருமுரு காற்றுப் படையின் உரையில் நச்சினார்க் கினியரால் எடுத்தாளப்பெற்றதென்று தெரிகிறது. அன்றி, இப்பரிபாடலினும் இதனைப் பௌராணிகர் கூற்றாகக் கொண்டு கூறுதலான், முருகன் வரலாற்றைக் கூறும் பழய புராணமொன்றும் இருந்ததாகத் தெரிகிறது. கந்தபுராண வரலாறு இதினின்றும் வேறுதலாற் புராண மொன்று வேறிருந்த தென்று தெரிகிறது.

இனி, இவ்வரலாறுகள் கால வேறுபாட்டான் மாறப்பட் டிருக்கின்றன என்று கொள்ளுதலும் ஆம். எங்ஙனமெனில், முதலிற் 'சிவ பெருமானுடைய இந்திரியத்தினின்றும் கார்த்திகைப் பெண்களறுவர் வயிற்றினும் பிறந்ததாகவும், பின்னர், அங்ஙனங் கூறுவது தெய்வத்தன்மைக் கிழுக்கெனக் கருதி 'நெற்றி விழிகளினின்றும் உண்டாகிய அக்கினிப் பொறிகளாறினுந் தாமே ஆறு குழவிகளாகத் தோன்றினதாகவுங் கற்பிதஞ் செய்யப்பட்டன. ஆகையால், இவைகள் கற்பிதமென்பது பிழையன்று.

இதுவரை கூறியவை பிறப்பு வேறுபாட்டை யுணர்த்து வரலாறே. இனி மற்றொரு வரலாறு வேறுபட்டிருப்பதுங் காண்போம். அது, நான்முகனை யடக்கியது.

கந்த புராணத்தில், கயிலையிற் குமார பவனத்திற் குமரன் வீற்றிருக்குங் காலையில் அவ்வழியாகச் செல்லும் நான்முகன் 'இக்குமரன் சிறு வன்றானே' என்றெண்ணி வணங்காது சென்றானாக; அதனைக் குறித்துணர்ந்த முருகன், நான்முகன் சிவபெருமானை வணங்கி விட்டுத் திரும்ப வருங்காலையில், வரவழைத்து, நீ யாவன்? எனவும், நின்றொழில் என்னை? எனவும் வினவியதற்கு, 'நான் நான்முகன்; படைத்தற் றொழிலினன்' என்று நான்முகன் பதிலளித்தானெனவும், வேதம் ஓதினையோ? என்றதற்கு ஓதினேன் என்றான் எனவும், ஆயின் பிரணவப் பொருளறிதியோ? என்றதற்கு மயங்கினனெனவும், 'பிரணவப் பொருளறியாத நீ அகங்காரத்துடன், படைத்தற் றொழிலியற்ற வல்லையல்லை' என ஓதிக் குட்டித் தளைசெய்தனன் எனவும், பின்னர்ச் சிவபெருமானுக்கிணங்கியின்படி நான்முகன் றளை நீங்கினன் எனவுங் கூறப் பெறுகிறது.

திருமுரு காற்றுப் படையுரையில், திருப்பரங்குன்றிற் சிவபெருமானும், மாலும், இந்திரனும் மற்றையோரும் நான்முகன் பிழையைப் பொறுத்து விடுதலை செய்யவேண்டு மென்று வேண்டிக் கொள்வதற்காக முருகனைச் சூழ்ந்து வணங்கி வருகின்றன ரென்றும், அந் நான்முகன் செய்த பிழையாவது சூரபன்மனையும் அவன் கிளையையும் மருங்கறவென்று திருப்பரங்குன்றில் தெய்வயானையை மணந்து விற்றிருக்குங்காலையில் முருகன் தன் வேலைச் சிறப்பித்து நமக்கு இவ்வளவும் வந்த வெற்றியிந்த வேலினாற்றான்' என்றானாக, நான்முகன் 'இவ்வேலிற்குக் கொற்றம் என்னால் வந்தது' என, முருகன் வெகுண்டு 'நின்னால் நம் வேலுக்குத் தரும் வெற்றியு முளதோ' என்று கூறி, மண்மிசைச் செல்லப் பணித்தனன். அங்ஙனமே, நான்முகன் மண்மிசை வீழ்ந்து துயருற்றான் என்றும் நச்சினார்க்கினியராற் கூறப் பெறுகிறது.

ஆகையால், இவையும் வேறு பாடுகளே அன்றி, நான்முகனைத் தளை செய்த தொன்றும், மண்ணிற் செலுத்திய தொன்றும் ஆக இரண்டு வரலாறுகளாகக் கூறினுங் கூறுக. எவ்வாறு கூறினும் இவை கற்பித வரலாறுகளே யென்பது முற்கூறப்பெற்றது. கற்பித மன்றெனிற் கடவுட்டன்மைக் கிழுக்காமாறும் உணர்க.

இது காறுங் கூறிய வாற்றால், முருகன் என்பது அழியாப் பொருள், இளமைச் செவ்வியது என்பதும், வரலாறுகள் யாவுங் கற்பிதம் என்பதும், அங்ஙனம் அறிஞர்கள் சாதாரண மக்கட்குக் கடவுளை வழிபாடு செய்யவே கூறினர் என்பதும் உணர்த்தப்பட்டன. சிவபெருமான், விஷ்ணு முதலாய தெய்வங்கட்கு விதித்தனவும் கற்பிதமென்பதும் உணர்க. முருகன் என்று தமிழ் நாட்டினரே இயற்கைப் பொருட்குக் குறியிட்டனர் என்பதும் முன்னரே உணர்த்தப் பெற்றது.

வரலாற்றினும் முருகன் வேறு, சிவன் வேறு அல்லர் என்றுங் கூறப் பெறுகின்றது. சிவபெருமான் உமைக்கு 'நாமே சுப்பிரமண்யனாய்த் தோன்றினோம்' என்கிறார். ஒரு பெரியார், "அஞ்சுமுகங் காட்டாமல் ஆறுமுகங்காட்ட வந்த செஞ்சரணச் சேவடியைச் சேர்வதுவும் எக்காலம்" என்கின்றனர். இதில் ஐம் முகனாகிய சிவன் ஆறுமுகனாய் வந்தனன் என்றும், அஞ்சத் தக்க முகங்களைக் காட்டாமல் ஆறுதல் செய்யும் முகங்களைக் காட்ட வந்தனன் என்றும் இருபொருள் கொள்ள

# திருப்புகழ் ஆசிரியர்

[திரு. S. கணபதி முதலியார் அவர்கள், திருநெல்வேலி]

"செயற்கரிய செய்வார் பெரியர்; சிறியர்
செயற்கரிய செய்கலாதார்"

என்பது வள்ளுவரது குறள். பிறப்பில் மனிதர்கள் எல்லோரும் ஒத்தார்களாயினும் எல்லோரும் 'பெரியார்' என்னும் பெயர்க்குரியாரல்லர். ஒரு சிலரே அப்பெயர்க்குரியார். பிறரால் செய்தற்கரிய அரும்பெருஞ்செயல்களைச்செய்கின்றவர்களே பெரியார் எனற்பாலார். அவர்கள் மாண்டார்களேனும் உண்மையில் மாண்டார்களல்லர். அவர்களது பூதவுடம்புதான் மாண்டது; புகழுடம்பு என்றும் நிலைத்து நிற்கும் தன்மையது. அவ்வாறு அரிய - பெரிய அருஞ் செயல் புரிந்து இறந்தும் இறவாத பெரியார் நம் அருணகிரிநாத சுவாமிகளே. அவர்களை நாம் இன்றும் எண்ணுகின்றோம்; பாடல்களைப் பாடுகின்றோம்; இன்பத்தில் மூழ்குகின்றோம்; தமிழுலகம் என்றும் அவர்களைப் பற்றிச் சிந்திக்கும் என்பதற்கும் ஐயமின்றாம். அவர்கள் புரிந்த அருஞ் செயல் எவர்க்கும் எடுத்துரைக்க இயலாததொன்று. அதனாலேதான் நமது தாயுமான சுவாமிகளும் "ஐயா வருணகிரி யப்பாவுனைப்போல மெய்யாக வோர் சொல் விளம்பினர் யார் - வையகத்தோர் சாற்றறிதென்றே சற்றூர் தன்னையாய் முக்கணைந்தை நாற்றிசைக்குங் கை காட்டினன்" என்று போற்றுவார்களானார்கள். அவர்களது சரித்திரம் படிப்போர்க்கு இன்பம் பயப்பது; மெய்யன்புடையார்க்கு நல்விருந்தளிப்பது; இல்லறத்தாரை நல்லறத்தில் ஈடுபடச் செய்வது.

அருணகிரியார் திருப்புகழென்னும் கருணை மாமழை பெய்த பெரியாராவர். அவர்களது சரித்திரம் பலவாறாகக் கூறப்படும். ஆயினும் அவர்கள் பிறந்தது நினைக்க வீடளிக்கும் திருவருணையம்பதி என்பது எல்லோர்க்கும் ஒப்ப முடிந்ததோர் உண்மை. அவர்களை ஒரு சிலர் பட்டினத்தடிகளின் திருக்குமாரர் என்பர். மற்றொரு சிலர் அன்று என மறுத்துச் சொற்கலாம் விளையா நிற்பர். உண்மை தேர்ந்தறிவித்தல், ஆராய்ச்சி, உலகத்தின் கடமை. காதன் மனையாளும் காதலனுமாறின்றித் தீதிலொரு கருமம் செய்து, மகப்பேறு குறித்துக் குமரன் றளினைப் போற்றி வந்த தந்தை தாயாரிருவருக்கும் ஒருயிராய் அவதரித்தார்கள் என்றே யாங்கோடும். மற்றும் முன்னர் சீகாழியிலே முருகப் பெருமான் திருஞான சம்பந்தராய் அவதரித்தது போல, வீரவாகு தேவரே முருகனருளால் அருணகிரிநாதராய் அவதரித்து, அந்த மிகு சந்தம் பொலியும் தெய்வத் திருப்புகழை ஓதினார்கள் என்றலும் ஒன்று.

அவர்கள் தெய்வத் திருமகவாய்த் தோன்றிக் குழலினு யாழினு மினியக் குதலைவாய் மொழிந்து, அமிழ்தினு மினிய கூழமைந்து, நாளொரு மேனியும்பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து, பிள்ளைப்பருவம் கடந்து காளைப்பருவம் அடைந்தார்கள். காளைப்பருவம் அடைந்துழி மங்கையர்கள் இவர்களது தேகவழகைக் கண்டு, மருண்டு, மோகங்கொள்ள, ஆண்டவன் அருள்வழி ஒழுகும் அருணகிரிநாதர் அது பொறுக்கலாற்றாராய் முருகனைச் சிந்தித்து உருகுவாராயினர் என்பது ஒரு சாராரது கொள்கை. அருணகிரிநாதர் கணிகையர்களது மனைபுகாமலே அருட்டுறையில் நின்று ஈறில் புகழுடைய திருப்புகழ்பாடி முருகனால் ஆட்கொள்ளப் பெற்றார் என்பது மேற்கூறியவர்கள் கண்ட உண்மை. ஆனால் இக்கொள்கையைப் புலவர் புராணமுடையார் 'அருணகிரிநாதர் பால் அன்பின் மிகுதியால் எழுந்த கருத்தெனக் கூறி மறுப்பதோடு அகச் சான்றாக (Internal Evidence)

"அவனி தனிலே பிறந்து
மதலை யெனவே தவழ்ந்து
அழகு பெறவே நடந்து - இளைஞோனாய்

(203-ம் பக்கத் தொடர்ச்சி)

லாம். சிவபெருமான் உருத்திரனுதலால் அழித்தற்றொழிலையுடைய தமது முகங்களைக் காட்டாமல், தேவர்களுக்கு ஆறுதல் செய்யும் வடிவத்தோடு கூடிய முகங்களைக் காட்ட வந்தனன் என்பது பிழையாகாது. ஆதலானும், முருகன் சிவனுடைய பிள்ளை யென்பது கற்பனை யென்றுணர்க.

ஆகையால், செங்குந்த மக்களாகிய நமக்கு வழிபடு தெய்வமுஞ் சோதரருமாகிய முருகன் தமிழ்நாட்டுத் தெய்வ மென்று கொள்ளப் பெறுதலால் நாமும் தமிழரே யென்பதில் ஐயம் வரவேண்டுவதில்லை. தமிழ் மக்கள் வேளாண்மையே செய்து வந்தனரென்றால் உடையின்றி யிருந்தன ரென்று கொள்ள முடியாது. நெய்தற் றொழிற் கேற்ற நலங்கள் நம் நாட்டில் இல்லை யென்று சொல்லுதற்கும் ஆதாரமில்லை. நாம் வெளி நாட்டிலிருந்து வந்தோ மென்பதற்கும் ஏற்ற ஆதாரங்கள் காட்டவியலா. எஃதெங்ஙனமாயினும் நமக்கு வழிபடு தெய்வமாகிய கடவுளை முருகன் என்னுஞ் சொல்லால் வழிபட்டோம் என்பதும், கடவுட்டன்மையை யுணர்த்துவதற்கு முருகன் என்னுஞ் சொல்லே சிறந்த தென்பதும் உணரத் தக்கன.

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணை [போற்றி
ஏவருந் துதிக்க நின்ற ஈராறு தோள் போற்றிக் [காஞ்சி
மாவடி வைகுஞ் செவ்வேள் மலரடி போற்றி யன் [னன்
சேவலும் மயிலும் போற்றித் திருக்கைவேல் [போற்றி போற்றி

சுபம்.



அருமழலையே மிகுந்து
குதலை மொழியே புகன்று
அதிவித மதாய் வளர்ந்து - பதினாறாய்
சிவகலை களாக மங்கள்
மிகவுமறை யோது மன்பர்
திருவடிகளே நினைந்து - துதியாமல்
தெரிவையர் களாசை மிஞ்சி
வெகு கவலை யாயுழன்று திரியு
மடியேனை யுன்றன் - அடிசேராய்
பரம பதமே செறிந்த
முருக னெனவே யுகந்து
பழநிமலை மேல மர்ந்த - பெருமாளே"

என்றின் னனைய திருப்புகழ் கொண்டும்,

"மாத ரிரு விழியாகுமம் புக்கு மதனவேள் [வாளிக்கு நடுவாகியே,
மாலாகு மருணகிரி நாதர்"

என்ற மார்க்க சகாய தேவர் முதலிய பிறபுலவர்களது வாக்கினையே புறச்சான்றாகவும் (External Evidence) கொண்டு தத்தம் கருத்துக்களை வலியுறுத்துவர். அன்றியும் வெப்பத்தில் வருந்திய வன் நிழலை விரும்புதல் போலும் மாயையி லழுந்திய அருணகிரிநாதர் பின்னர் வைராக்யம் கைவரப் பெற்றவராய் முருகனது இணையடி நீழல் அடைந்தா ரென்றும், அவ்வாறு மாயையில் விழுந்தார்கள் என்று கூறுவதனால் சுவாமிகளது பெருமைக்கும் மகிமைக்கும் ஒரு சிறிதும் குற்றம் ஏற்படாது என்பதும் இக்கொள்கை யாளர்களது கருத்து. ஆனால் உண்மை எதுவோ என்பதை அறிகிலம்.

இதுவும் நம்மனோரால் சிந்திக்கற் பாலதே.

உண்மை எதுவே யாயினும் அருணகிரி நாதர் மனம் தளர்ச்சியுற்றவராய் கோயிலை அடைந்தார் என்பது தெளிவு. அங்கு வதியும் நாளில் முருகன் இன்னருள் சுரந்து திருவருள் பாலிக்க,

"அடலருணைத் திருக்கோபுரத்
தேயந்த வாயிலுக்கு
வடவருகிற் சென்று கண்டுகொண்
டேன் வருவார் தலையிற்
றடபடெனப்படு குட்டுடன்
சர்க்கரை மொக்கியகைக்
கடதட கும்பக்களிற்றுக்
கிளைய களிற்றினையே"

என்று பாடி முருகனை வடபால் கண்டார். கண்டு பக்தி என்னும் மையல் கொண்டார். அவரது உள்ளம் வெள்ள நீர் பள்ளம் பார்த்துச் செல்லுதல் போலும், தாயைக் கண்ட சேய்போலும் ஓடிற்று. இங்ஙனம் சில நாள் செல்ல ஒரு நாள் முருகன் அவர்கள் முன் தோன்றி 'ஏ! மெய்யன்பனே! எம்மைப் பற்றிப் பாடுக' வென்ன, அருணகிரியார் 'எவ்வாறு பாடுகே' னென்ன,

"முத்தைத்தரு பத்தித் திருநகை
அத்திக் கிறை சத்திச் சரவண
முத்திக்கொரு வித்துக் குருபர- எனவோது"

என்று அடி எடுத்துக் கொடுத்து, ஞான சக்தி என்னும் தம் வேல் கொண்டு, அவர் நாவில் பதித்து, பாடும் ஆற்றலை நல்கி நம்மண்ணலார் மறைய, அன்னாள் தொட்டு அருணகிரியாரும் கருணையுரி திருவருணை முதல் பல பதிபுக்குத் திருப்புகழென்னும் அருள்மாரி பொழிவாராயினர். இவ்வாறு முருகன் அடி எடுத்துக் கொடுக்கத் திருப்புகழ் பாடினா ரென்பது

"மாதரிருவிழியாகு மம்புக்கு மதனவேள் வாளி [க்கு நடுவாகியே
மாலாகு மருணகிரிநாத ரருளைச் சிகரிவட வாசலிற் பயிலகம்,
பாதமலர் பாடுநீயென்ன வடியேனு மெப்படி [பாட வென்றவளவிற்
பத்திதரு முத்தநகை யத்தியிறைவாவெனப் [பாடென்று சொல்லியியலாற்,
பூதலமு மெங்கிளையு மீடேற நாவிற் பொறித் [தவருரைத்த கவிதைப்,
புத்தமுது பன்னிரு செவிக்கு நிறையக் [கொண்டு போத முன்னளித் [தருளினன்,
சீதளமலர்ச் சரண முதவு கரனாரணி சிறு [தேருருட்டி யருளே
செயசெயென வமரர் தொழ வசுரர்முடி [சிதறுமுனி சிறு தேருருட்டி யருளே"

என்ற திருவிரிஞ்சை முருகன் பிள்ளைத் தமிழ், சிறு தேர்ப் பருவம் முதற் செய்யுளானும்,

"செப்பதியும் வைத்துயர் திருப்புகழ் விருப்ப [மொடு
செப்பென எனக் கருள்கை-மறவேனே"

என்ற திருப்புகழானும் உணர்ந்து கொள்க. மற்றும் முருகன் முதலடி எடுத்துக் கொடுத்தது திருப்புகழின் தெய்வத் தன்மையையும், திருப்புகழ் ஆசிரியரது பெருமையையும் விதந்தோதும் தன்மையது. அன்றியும் இந்நிகழ்ச்சி அருணகிரியாருக்கு 'உலகெலாம்' என்று அம்பலக் கூத்தன் எடுத்தருளப் பின் பெரிய புராணம் தொடுத்த ஒப்பில் புலவரான சேக்கிழாரோடும், 'திகட சக்கரச் செம்முக-மைந்துளான்' என்று கச்சிப்பதி வாழ் முருகன் அடி எடுத்துக் கொடுக்கக் கந்தபுராணம் பாடிய ஆசிரியர் கச்சியப்ப சிவாச்சாரியாரோடும் வைத்தெண்ணப்படும் பெறும் பேற்றை அளித்தது.

இத்திருவருட் செல்வர், அருளிப் போந்த பிரபந்தம் முருகனது திருப் புகழைப் பொருளாகக் கொண்டமையின் திருப்புகழென்னும் பெயர் கொண்டு விளங்கிற்று.

இஃது அந்த மிகு சந்தத் தொடைச் செந்தமிழ்த் திருப் பாட்டுக்களாலாயது; சொற் சுவை பொருட்சுவை நிரம்பியது. காண்டொறும் எண்ணுந்தொறும், படிக்குந் தொறும் பக்தி விளைவித்து முக்திதர வல்லது. இஃதுண்மையா மென்பது,

"ஞானம் பெறலாம் நலம் பெறலாம் எந்நாளும்
வானம் அரசாள் வரம் பெறலாம்-மோனவீ
டேறலாம் யானைக்கிளையான் திருப்புகழைக்
கூறினர்க் காமேயிக் கூறு"

என்பது கொண்டு அறிக.

அருணகிரியாரது திருப்புகழ் பதினாறாயிரம் என்ப. அஃது,

"அருணகிரிநாதர் பதினாறாயிரமென்
றுரைசெய் திருப்புகழை யோதீர்-"

என்றதனாலும்,

"எம்மருணகிரி நாதரோது பதினாறாயிரந் திருப்புகழமுது" என்ற மார்க்க சகாய தேவரது பிள்ளைத் தமிழ்க் காப்புச் செய்யுளினாலும் நன்கு வலியுறுத்தப்பட்டது. ஆனால், இப்பொழுது அப்பதினாறாயிரமும் கிடைத்திலது; மிகச் சில (1260) திருப்புகழ்களே கிடைத்திருக்கின்றன. அடியார்களின் கூட்டுறவும், அதனாலுளதாம்பயனும், பக்தியின் ஆற்றலும், கந்தரது கருணையும், பிறப்பால், வரும் துன்பமும், பிணியும் யாண்டும் சொல்லப்பட்டிருத்தல் பாவலருக்கும் நாவலருக்கும் கற்றோர்க்கும் மற்றோர்க்கும், நன்மை தருவதாகும்.

அன்றியும் அருணகிரியார் சைவ உலகத்தாலும் போற்றப்படும் ஒரு பெருந் தகையாளர். சைவ உலகம் தங்களது சமயக் குரவர்களாகிய ஞான-சம்பந்தர், நாவுக்கரசர், சுந்தரர், மாணிக்க வாசகரைப் போற்றுதல்போல் நம்மருணை அண்ணல் அருள் பெற்ற அருணகிரியாரையும் போற்றுதல் சுவாமிகளது பெருமைக்கு ஒரு சிறந்த எடுத்துக் காட்டாகும். நால்வரும் பரமசிவனருள் பெற்றுய்ந்தவர்கள். அருணகிரியாரும் முருகனது அருள் பெற்று உய்ந்தவர். நால்வரும் ஈசனால் செவ்வி (தகுந்த காலம்) பார்த்து ஆட்கொள்ளப் பெற்றார்கள். அங்ஙனே அருணகிரியாரும் முருகனால் செவ்வி பார்த்து ஆட்கொள்ளப் பெற்றார். நால்வர் ஓதியது தேவார திருவாசகம். அருணகிரியார் கூறியது திருப்புகழ் என்னும் ஒண்பாமாலை. நெஞ்சம் நெக்கு நெக்குருகக் கனிவாய்ப் பாடியவர் மாணிக்கவாசகர்; தாக்குடன் பேசியவர் திருஞான சம்பந்தர்; நயத்துடன் கேட்டார் வாய் பிணிக்குந் தகையதாய் மொழிந்தவர் வன்றொண்டர் எனப் பெயரிய சுந்தரர்; சொல்லுறுதியாய்ப் பேசியவர் நாவரசென்னும் பாவரசு. அதுபோலவே வாக்கில் சிறந்த பெரியார் அருணகிரி சுவாமிகளே யாவர். இவ்வுண்மை,

"வாக்கிற் கருணகிரிவாத வூரார் கனிவிற்
ருக்கிற் றிருஞான சம்பந்தர்-நோக்கிற்கு
நற்கீர தேவர் நயத்துக்குச் சுந்தரனார்
சொற்குறுதிக்கப்ப ரெனச் சொல்"

என்றதினால் உணர்க.

அஃதன்றியும் அருணகிரி நாதரைக் கருணைக்கோர் வித்தாமெனக் கொள்வர் ஆன்றோர். அவர்கள் கருணைக்கோர் அரசாமென்பது அவர்கள் 'சொல்லுக்கு வில்லி' என்ற வில்லி புத்தூர் ஆழ்வாருடன் 'கந்தரந்தாதி'யின் வாயிலாய்த் தம் கவித் திறனைக் காட்டி, ஆழ்வாரை வென்று சபதம் செய்து கொண்டபடி செய்யாது வில்லி புத்தூராரை விடுவித்ததினின்றும் அங்கை நெல்லியென நாம் உணரலாம். இவ்வாறு அருணகிரி நாதர் கருணை உடையவராய் இருந்ததினால்தான்,

"காசுக்குக் கம்பன் கருணைக் கருணகிரி
யாசுக்குக் காளமுகிலானவனே - தேசுலவு
ஊழுக்குக் கூத்த னுவக்கப் புகழேந்தி
கூழுக்கிங் கௌவை யெனக் கூறு"

என்ற பாட்டு எழுந்தது. விரிவஞ்சி இதன் கணடங்கிய கதைகளை விடுத்தாம். எனவே கருணை மேகமாகிய அருணகிரியார் மழையெனப் பொழிந்த

"திருப்புகழைக் கற்க திருப்புகழைக் கேட்க
திருப்புகழை நித்தம் செபிக்க-திருப்புகழை
அர்ச்சிக்க முத்தியெளிதாகுமே கூற்றை வென்று
கெர்ச்சிக்கலாமே கெடீ"

## அநுதாபம்

### மோக்ஷதீபம்

நமது செங்குந்த மகா நாட்டுத் தலைவர்களில் ஒருவராகிய சென்னிமலை திருவாளர். செ. செங்கோட்டையா முதலியார் அவர்களின் தகப்பனார் சுமார் 95 வயதுள்ள திரு. வா. சென்னியப்ப முதலியார் அவர்கள் நிகழும் பிரமோதூதாஸு சித்திரைமீ 16-உக்கு திங்கள்கிழமை மாலை 5 மணிக்கு தெய்வலோகம் அடைந்ததை உத்தேசித்தும் சிவபெருமான் திருவருளை பெற நினைந்தும் இவ்வூர் க்ஷேத்திரப் புரோகிதர்களில் ஒருவரும் நம் சமூக முக்கிய அபிமானியுமான ஸ்ரீமான் நீ. நா. சுப்பிரமணிய சாஸ்திரியார் அவர்களால் இவ்வூர் கோவில் திருக்கோபுரத்தில் இன்று திரு. வா. சென்னியப்ப முதலியார் அவர்களுக்கு 16-வது தினமாகிய மோக்ஷதினத்தில் மோக்ஷதீபம் போட்டிருப்பதைப் பார்த்து நான் மனமகிழ்ந்ததுடன் நம் சகோதரர்கள் யாவரும் அறிய விரும்பி எழுதலானேன்.

கூ. மருத வீரபாண்டி முதலியார்,
மானேஜர், செங்குந்தர்கள் பொதுமடம், இராமேஸ்வரம்.






## கொக்கிப்புழுநோய் (Hook-worm disease)

திருவாளர் மா. பரமகுருநாத முதலியார், திருமயிலை

கொக்கிப் புழுக்களால் உண்டாகிற இந்நோய்க்கு வாய்ந்த இப்பெயர் காரணப் பெயராகும்.

இப் புழுக்களின் தலைப்பாகம் கொக்கி போலிருப்பதால் இப்புழுக்களுக்கு இக்காரணப் பெயரிடப்பட்டதும் தகுதியே.

இவை சுமார் முக்கால் அங்குல நீளமும், உருண்டை வடிவமாகவும், நூல்கனமுள்ளவையாயுமிருக்கும். இதற்கு ஒருவித வெண்ணிறமும் உண்டு. இவ்வினத்தின் பெண் புழுக்கள் ஆண் புழுக்களைப் பார்க்கிலும் பெரியவை. இவற்றுள் பெரிய புழுக்கள் மனிதர்களின் குடலில் வாசஞ் செய்யா நிற்கும். சிறியவைகளோ பூமியில்தங்கி ஜீவித்திருக்கும்.

இவை மனிதர்களின் குடலில் எவ்விதம் பிரவேசிக்கின்றன என்பதை கவனிக்குங்கால், மூன்று விதங்களாகப் பிரவேசிக்கின்றன என ஏற்படுகின்றது.

முதலில் இவைகளின் சிறிய கிருமிகள் புல் பூடு பூமி முதலியவைகளின்மேல் தங்கி இருக்குங்கால், மனிதர்கள் வெறுங்காலால் அங்குநடந்து செல்லும் போது, அவர்களின் காலில் தொத்திக்கொண்டு தோலைத் துளைத்து உடலில் புகுந்து குடல்களுக்குச் செல்கின்றன.

இரண்டாவது அசுத்தமான இடங்களில் விளையும் அல்லது தங்கி இருக்கும் பதார்த்தங்கள், பழங்கள் முதலானவைகளில் இக்கிருமிகள் ஒட்டிக் கொண்டிருப்பதால் அவைகளைப் புசிப்பதால் உணவின் வழியாக குடலுக்குள் பிரவேசிக்கின்றன.

மூன்றாவது, மழை பொழியுங்கால் அசுத்த இடங்களில் தங்கியுள்ள இக்கிருமிகள் மழை ஜலத்தின் வழியாகச் சுற்றுச் சுவரற்ற கிணறுகளிலும், குளங்குட்டைகளிலும் உள்ள ஜலத்தில் கலந்து தங்கி இருக்கின்றன. இக்கொற்ற ஜலத்தை மனிதர்கள் பருகுங்கால் இக்கிருமிகள் அவர்கள் குடலில் குடியேறுகின்றன.

இப்புழுக்கள் தரையில் சில மாதங்களும், மனிதர் குடலில் சில வருஷ காலங்களாகவும் ஜீவித்திருக்க முடியும்.

ஆகவே மேற்காட்டிய மூன்று மார்க்கங்களால் மனிதர் குடல்களுக்குள் இப்புழுக்கள் பிரவேசிக்கின்றனவென ஏற்படுகின்றது.

அங்ஙனம் பிரவேசித்த பிறகு குடலில் இவைகள் விளைவிக்கும் வேறுபாடுகளின் விபரங்களை விசாரிக்கவேண்டி இருக்கின்றது.

இங்கு இவைகள் மனிதர்களின் குடலைக் கடித்துப் பசுவினிடமாகப் பாலைக் கரப்பதுபோல் இரத்தத்தை உருஞ்சிக் குடித்து அவ்விடத்தை விட்டு வேறு இடமேகும். இவ்விதமாக ஜீவித்து விருத்தியாகுங்கால் பெரியபுழுக்கள் மனிதர்களின்குடலில் $1\frac{1}{2}$ மாதங்களுக்குள், பெண் புழுக்கள் முட்டை இடுகின்றன. இவை ஒரு நாளில் 8,000 முட்டைகளிடுகின்றன. குடலில் இம்முட்டைகள் கிருமிகளாகாததினால், மல ஜலங் கழிக்குங்கால் மலத்தோடு பூமிக்கு வருகின்றன.

இங்கு 12 அல்லது 60 மணி நேரத்திற் கெல்லாம் இம்முட்டைகள் கிருமிகளாய் விடுகின்றன. இம் முட்டைகளும் கிருமிகளும் கட்புலனாகா; அணுதரிசனி (Microscope)யின் உதவியைக் கொண்டுதான் பார்க்க இயலும்.

இக்கிருமிகள் தோலின் வழியாகவோ, ஜலம், ஆகாராதிகளின் மூலமாகவோ, குடல்களுக்குள் நுழையவே குடல்களைக் கடித்து, இரத்தத்தைக் குடித்துப் புண்படுத்தி, குடல்களைக் கெடுத்துக் கொண்டே இருக்கும். அதனுடனும் விடாமல் தன்னிடம் இயற்கையாக உண்டான விஷயத்தையும் அங்குக் கக்கிக் கொண்டே இருக்கும். இங்ஙனமாகக் குடல்கள் கெடவே கொக்கிப் புழு நோய் தானே உண்டாகாமலிருக்க முடியுமா? வந்தே தான் தீரும்.

இப்பிணியாளர்கள் படும் பாட்டையும் பார்ப்போம்.

இவ்வியாதியஸ்தர்களுக்கு ஆரம்பத்தில் ஒன்றும் புலப்படா விட்டாலும்; வியாதி பலப் பலக்கத் தலைவலி மயக்கம் அஜீர்ணம் பலஹீனம், வேலை செய்ய அசக்தி முதலானவைகளால் பீடிக்கப்படுகிறார்கள். இன்னும் இவர்களுடைய தோல்

வரட்சியாக இருக்கும். கண் இரப்பையின் உட்பாகம் வெளுத்திருக்கும். குழந்தைகள் வயதுக்குத் தக்க வளர்ச்சியின்றி குறுகி விடுவார்கள். பிள்ளைகள் பள்ளியில் சரியாக வாசியார். அவர் அசுத்தப் பதார்த்தங்களையும், கரி, சாம்பல், அரிசி முதலானவைகளைப் புசிக்க ஆவலுள்ளவர்களாக இருப்பார்கள். பெரியவர்களும் தம்தம் வேலைகளைச் செய்ய உற்சாக மற்றவர்களாவார்கள். பின்னும் இவ்வியாதி முற்றுங்கால் மனிதர்களின் தேகங்கள் அதிகமாக ஊதியோ அல்லது சிறுத்தோ இருக்கும். நிற்கவும் நாடியற்றவர்க ளாவார்கள். இங்ஙனமாக நாளடைவில் "தோலிருக்கச் சுளையை விழுங்குவது" போல் வெளித்தோற்ற மில்லாமலே ஊன் உடலைக்கொள்ள கொண்டு மரலிக்காளாக்கி அனேகரை மாண்டுபோகச் செய்துவிடும்.

இவ்வியாதிக்கு இடந் தராமல் காத்துக்கொண்டால் சிறிய வயதிலேயே சிவபத மடையாமல் சில காலம் தங்கள் பந்து மித்திரர்களுக்கு உதவியாக இத் தரணியில் உயிர் தரித்திருக்கலாம்.

இந்தியாவில் சிலரும் வெளிப் பிரதேசங்களில் பலரும் இவ்வியாதியால் வாட்ட முறுகின்றன ரெனத் தெரியவருகிறது.

இந்நோய் கொண்டவர்களோ அல்லது உண்டென்று சந்தேகங் கொண்டவர்களோ உடனே அருகாமையிலுள்ள ஆஸ்பத்ரியில் காட்டினால் அங்குள்ள டாக்டர்கள் பரீக்ஷை செய்து தகுந்த ஔஷதாதிகளைக்கொடுத்துச்சொஸ்தப்படுத்துவார்கள். இன்றேல் தகுந்த வைத்தியர்களைக் கொண்டாவது நோய் விட்டகல வழி தேடிக்கொள்ள வேண்டியது. எதற்கும் நோயின் ஆரம்பத்திலேயே சிகித்சை செய்து கொள்வதுதான் மதியூகம்.

அதிலும் சிறந்தது, "வெள்ளம் வருமுன் அணை போடுவது போல்" இந்நோய் வாராமல் தடுக்கும் உபாயங்களை அனுசரித்து வருவதுதான்.

எப்படி எனில் கீழ்வருமாறு:

(1) எங்குச் சென்றாலும் வெறுங்காலோடு போகாமலிருத்தல். காலில் செருப்போ அல்லது அதற்குத் தகுதியான வேறு எதையாவது காலில் போட்டுக் கொண்டு நடந்தால் இப்புழுக்கள் தோலில் நுழைந்து குடலுக்குள் பிரவேசியா.

(2) அசுத்தமான இடங்களில் விளையும் அல்லது தங்கி இருக்கும் பதார்த்தங்களையும் பச்சையாகவோ அல்லது சரியாக வேகவைக்காமலோ புசிக்கலாகாது. அக்கொற்ற இடங்களிலிருக்கும் பழங்களையும் புசிக்கக் கூடாது.

(3) எவ்வித ஜலத்தையும்சரிவரப்பொங்கக்காய்ச்சி வடிகட்டி ஆரவைத்துத்தான் குடிக்கவேண்டும்.

(4) கிராமாந்திரங்களில் உள்ளவர்கள் பூமிக்குள் சுமார் 20-அடி ஆழமாகக் குழிவெட்டி, சுற்றிலும் ஓலையாலோ அல்லது சுவராலோ கட்டிய ஒரு கக்கூஸ் ஏற்படுத்தி அக்குழியில் மலஜல விசர்ச்சனஞ் செய்துவரின் இந்நோயைத் தடுக்கலாம்.

எவ்விதமெனின், இவ்வியாதியஸ்தன் மலத்தின் மூலமாக இப்புழுக்கள் குழிக்குள் செல்கின்றன. அங்கு அவை விருத்தியடையினும் ஆழமுள்ள குழியிலிருந்து பூமிக்குமேல் வரமுடியாமல் அக் குழியிலேயே மாண்டு போகின்றன. இக்குழியில் கொஞ்சம் ஜல மிருத்தல் நன்று. ஆனால் இக்குழிகள் கிணறுகளுக்கு 150 அடி தூரத்திலிருத்தல் அவசியம்.

அப்போதைக்கப்போது மலங்களை எடுத்து எகும் முனிசிபாலிடியுள்ள இடங்களில் இவை வேண்டியதில்லை.

இந்நோய் வெகு சாமான்ய மென்று அலட்சியமாக இராமல் இந்நோயைத் தடுக்கும். மார்க்கங்களைச் சதா அனுசரித்துவரின் நோய்க்கும் மற்ற வியாதிகளுக்கும் இடங்கொடாமல் சுலபமாகத் தடுத்துக்கொள்ளஹேது உண்டு என்று நம் நண்பர்களுக்குத் தெரிவித்துக்கொண்டேன்.

---

## அநுதாபம்

### "யாழ்ப்பாணம் கல்லூரியில் ஒரு பரிதாப மரணம்"

இவ்வூரில் பரம்பரையில் வைத்தியத்திலும் மாந்திரீகத்திலும் மேம்பட்ட "மாவடியார்" என்ற குடும்பத்தில் உதித்த பிரபல வைத்தியர் ஸ்ரீமான் வி. சுப்பையா முதலியாரின் ஒரே புதல்வர் திருவாளர் சு. இரத்தின சபாபதி முதலியார் நிகழும் பிரமோதூத௵ சித்திரை ௴ 27-ம௳ (9-5-1930) சுக்கிர வாரம் மாலை நாலு மணிக்குத் தம் இருபத்து நாலாம் பிராயத்தில் தேகவியோகமானார். அன்னார் சித்த வைத்தியத்திலும் ஆயுர்வேதவைத்தியத்திலும் அதிக திறமை வாய்ந்தவர். அவர் இலங்கா ஆயுர்வேத கல்லூரியில் கலைகள் பயின்று சென்னை ஆயுர்வேத வைத்தியசபையாரால் நடத்தப்பெற்ற பரீட்சையில் இரண்டாம் மாணவராகத் தேறிப் பத்திரம் பெற்றவர். அப்பொழுது ஸ்ரீமான் ஸேர். பொ. இராமநாதன் துரை அவர்களின் கையினாற் பரிசுகள் பெற்றவர். இவர் தம், பிந்திய நாட்களில் கொழும்பில் வெள்ளை வத்தையிலிருந்து வைத்தியம் நடத்திவந்தவர். அன்னாருக்கு இன்னும் விவாகமாகவில்லை. அன்னார்க்கும் பெற்றாருக்கு எமது மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்."



# குடியால் விளையும் கேடுகள்

பரிசு பெற்ற வியாசம்

[திரு. ஜெ. தங்கவேல்]

மனித வர்க்கமாகிய தேகத்துக்கு ஒவ்வொரு மனிதனும் அவசியமான அவயவமாகையால், தேகத்தின் நலன் ஒவ்வொரு அவயவத்தின் நலனையும் பொருத்திருப்பதுபோல, மனிதவர்க்கத்தின் முன்னேற்றமும் ஒவ்வொரு மனிதனுடைய முன்னேற்றத்தையும் பொருத்திருக்கிறது. அத்தகைய வளர்ச்சிக்கு வழியடைப்புக்களாக நிற்பவைகளாகிய கெடுதிகள் பலவற்றுள் முக்காற்பங்குக்கும் மேலானவைகள் குடியாலேயே விளைகின்றன வெனில் மிகையாகாது. மனநலன், தேக நலன், சமூக நலன் முதலிய நலன்களுக்கும், பொருள், அறிவு, இன்பம் முதலியவற்றின் பெருக்கத்துக்கும் வலுத்த சத்துருவாய் அமைந்துள்ளது இக்குடியே. குடி என்னும் சொல் சாதாரணமாகக் குடிப்பது எதையேனும் காட்டி நின்றாலும், நாற்றம் என்பது துர்நாற்றத்தை உணர்த்துவது போலவே, சிறப்பாகத் தீமைகளை விளைக்கும் குடியையே குறிக்கும். காபி, டீ, முதலியவையும் குடியைச் சேருமாயினும், அவை அத்துணைக் கெடுதிகளுக்குக் காரணமா யிராமையாலும், போலி நாகரிகத்தில் ஒரு முக்கிய அம்சமாய் நிலைத்திருப்பதனாலும் அவ்வளவு பழிக் குள்ளாவதில்லை. குடியென்னும் குடும்பத்தின் தலைவர்களான கள், சாராயம் என்னும் இருவரும் ஜன சமூகத்துக்கு இன்ன லிழைப்பதில் ஒருவர்க்கொருவர் தாழ்ந்தவ ரல்லர். மக்களது அபிவிருத்தியைக் குறைத் தழிப்பதிலேயே கண்ணும் கருத்துமா யுள்ள பகையாளிகளில் வறுமை, பிணி, மரணம் ஆகிய மூன்று முக்கியஸ்தர்களும் இவ்விருவர்களையே உற்ற துணைவராகக் கொள்கிறார்கள். ஆகவே, குடியால் விளையும் அபரிமிதமான கெடுதிகளை எவரே முற்றுங் கணக்கிட்டுரைக்க வல்லார்?

கட்குடி கூலி வேலை செய்யும் ஏழை மக்களிடத்தில் அதிகமாகப் பரவி யிருக்கிறது. விலையுயர்ந்த சாராயம் முதலியவைகளின் பானமோ, 'நாங்களே நாகரித்துக் கடிப்படை' என்று கர்வம் பாராட்டிப் போலி நாகரிகத்துக் கடிமைகளா யமைந்துள்ள தனவந்தர்களிடம் காணப்படுகின்றது. அந்தோ! இம்மக்கள் அடைதற்கரிய நன்மைகள் பலவிருக்க, அவற்றை யெல்லாம் விட்டுத் தங்கள் தழிவுக் கேதுவாகிய குழிகளைத் தாங்களே பெருந்தொகையான பொருளைச் செலவிட்டுத் தோண்டிக் கொள்ளுகிறார்களே! தங்கள் நன்மை அடியோ டழிவதையும், அதனால் நாட்டு நன்மைக் கிடையூறு நேர்வதையும் இவர்கள் உணர்கிறார்க ளில்லையே. நன்மையை விட்டுத் தீமையைக் கைக்கொள்ளும் பண்ணையினும் இவர்கள் எந்த விதத்தில் மேம்பட்டவர்க ளாவார்கள்?

தேகாரோக்கியத்தின் சார்பாகப் பார்ப்போமானால், அந்தச் செடியை வளரவொட்டாது அரிப்பதில் குடியென்னும் புழுவே முதன்மை பெற்றிருக்கிறது. ஒரு குடிகாரனது இருதயத்தையும் சுவாச கோசங்களையும் எடுத்து ஆராயின், குடியானது அவைகளை எவ்வாறு பாழ் படுத்துகிற தென்பது நன்கு புலனாம். ஒருவன் உயிர் வாழ்வதற்கு இன்றியமையாதவையாகிய அந்த அவயவங்களில் அது துவாரங்களை யுண்டாக்கி, அவற்றை உபயோக மற்றவை யாக்குகின்றது. இன்னும், நமது தேக முழுதும் மிகவும் மெல்லிய, உணர்ச்சி மிகுந்த நரம்புகள் வியாபித்திருக்கின்றன. எல்லா அவயவங்களினும் சிறந்ததான மூளையும் நரம்புகளா லானதே. இத்தகைய நரம்புகளைக் குடியானது தூண்டி, வெகு விரைவாக வீணுக்கு உழைக்கச் செய்கிறது. இவ்வாறு பல தடவைகள் உத்தீபனம் பெறுவதால், அதிகமா யுழைத்துச் சீக்கிரத்தில் கெடும் யந்திரத்தைப் போல, அவைகள் சின்னாட்களில் தளர்ந்துவிடுகின்றன. உடம்பில் தந்திக்கம்பிகளை நிகர்த்து வேலை செய்யும் நரம்புகளின் உதவியை இழந்த மனிதன் உணர்ச்சி குறைந்தவனாகிறான்; வலிமை தளர்ந்தவனாகிறான்; அசதியுடையவனாகிறான்; சுருக்கமாக, எதற்கும் பிரயோசன மற்றவனாகிறான். இவ்வாறு பலங்குறைந்து இருக்கும் தேகம் பிணி என்னும் விரோதி குடி புகுதற்குத் தகுதியான இல்லமாகிறது. அத்தகைய தேகத்தை யுடையவன் சொற்ப நாட்களிலேயே மரணத்தின் வாய்ப்பட்டு மடிந்து மண்ணாவான் என்பதைக் கூறவும் வேண்டுமோ?

தக்கபடி நடந்தால் தானும் பெரும்பயன்

களை யனுபவிப்பதுடன் பொது ஜனங்களுக்கும் மேலான நன்மைகளை இயற்றக் கூடிய ஒருவன் இளம்பிராயத்திலேயே இறந்து படுதல் ஜன சமூகத்துக்கு ஒரு பெரிய நஷ்டமன்றோ? இன்னும், இவ்வாறு மெலிந்த தேகிகளா யுள்ளவர்களைப் பெற்றோராக உடைய பிள்ளைகளுக்கும் தேக சுகத்தையும் உலகவின்பத்தையும் அடைதலும், பொது நன்மைக்கு ஏற்றவாறு உழைத்தலும் அசாத்தியமாகின்றன. ஆகையால் ஒருவன் கேடடைவதோடு நில்லாமல் பல குடும்பங்களும், அதனால் பல சமூகங்களும், நாடுகளுமே பெருந்தீமைகளுக் குள்ளாகின்றன. இவற்றிற் கெல்லாம் முதற்காரணம் குடியைக் கெடுக்கும் குடியே.

குடியினா லுண்டாகும் பண நஷ்டமும் கொஞ்சமான தன்று. கூலியாட்களும் வண்டிக்காரர்களும் பகலெல்லாம் மாடுகளைக் காட்டிலும் கேவலமாகக் கஷ்டப்பட்டு உழைத்துச் சம்பாதிக்கும் சொற்பக் கூலியைக் கள்ளுக் கடைக்காரனது பெட்டியில் கொண்டு போய்க் கொட்டுகிறார்கள். அந்தப் பணம் போதாதென்று கடன் வாங்கியும் அவன் பெட்டியை நிரப்புகிறார்கள். இத்தகைய அறிவீனமான செயலால் பல குடும்பங்கள் வறுமை வெள்ளத்தி லகப்பட்டு அலமருகின்றன. அக்குடும்பங்களிலுள்ள மனைவிகளும் மக்களும் தக்க ஆகாரமின்றிப் பசிப்பிணிக் கிரையாகி மெலிவடைகிறார்கள். இவ்வாறு குடியினால் தரித்திர திசை யடைபவை ஏழைக் குடும்பங்கள் மாத்திரமே யல்ல. தம்மிடமிருந்த கோடிக்கணக்கான ரூபாய்களை யெல்லாம் குடிக்காகச் செலவிட்டு முடிவில் தமது மனைவிமாரது கழுத்திலுள்ள மங்கல நாண்களையும் அதன் பொருட்டு விற்கத் தயாராயிருந்து அல்லற்பட்ட பெருந்தனவந்தர்களைப்பற்றி நாம் கேட்டதில்லையா? இத்தகைய கொடிய பழக்கமுள்ள குடும்பங்களைக் கொண்டுள்ள எந்த நாடு தான் க்ஷேமமடையும்?

பின்னும், குடிகாரர்கள் தீபாவளி, பொங்கல் முதலிய சிறந்த பண்டிகைக் காலங்களிலேயே அதிகமாகக் குடித்து விட்டு ஆடுகிறார்கள். கடவுள் நமக்கு அளித்துள்ள பல நன்மைகளையும் நன்கு அநுபவித்து, அதனால் இன்ப மடைவதுடன் அவைகட்காக அவரிடத்து நன்றி செலுத்தும் முறையாக அவரது சிறப்புக்களை மனத்திருத்தி அவரை வழிபட வேண்டிய திவ்ய நாட்களில் எல்லாவற்றினும் கொடிய செயலைச் செய்வது எத்துணை இழிவாகும்? இதனால் பண்டிகைகள் திருவிழாக்கள் முதலியவைகளின் பெருமை அடியோடன்றோ அழிந்துபடுகிறது? ‘ஆல மரத்தைப் பிடித்த பேய் அரச மரத்தையும் பிடித்த’ தென்பது போல, தாங்கள் குடித்து விட்டு இழிவைத் தேடிக்கொள்வது போதாதென்று சாமிகளையு மல்லவோ மொந்தைச் சாமிக ளாக்கிவிடுகிறார்கள்? புறக்கடையான், காட்டேறி, முனியாண்டி முதலிய “குட்டிச் சாமி”களைத் தாங்களே ஏற்படுத்திக்கொண்டு அவைகளுக்குக் கள்ளையும் சாராயத்தையும் வைத்துப் படைப்பது மட்டுமன்றி, அவைகளுக்குப் பூசை போடுவதாகச் சொல்லி வாயில்லாப் பிராணிகளாகிய ஆடுகளையும் மாடுகளையும் பலியிட்டுப் பிள்ளையைச் சாக்கிட்டுப் பூதம் விழுங்குவது போல விலாப் புடைக்கத்தின்றும் குடித்தும் குதித்தாடும் இவர்களது குடிவெறியும் மதியீனமும் என்னே!

இவ்வாறு மதுபானம் செய்பவர்கள் தாங்கள் ஆடுவதோடு மட்டில் நிற்பதில்லையே. பண்டிகைக் காலங்களில் கள்ளுக்கடைகள் அமர்க்களத்தை யன்றோ நிகர்த்திருக்கின்றன? எத்தனைக் கொலைகள் அன்றைக்கு நடக்கின்றன? எத்தனைப் பேர் வலுத்த காயங்களை யடைகின்றனர்? எத்தனைப் பேர் விலங்குங் கையுமாய்த் தாணாவுக்கு அழைத்துச் செல்லப்படுகின்றனர்? எவ்வளவு ஏழை மக்கள் பெருந்தொகையான அபராதம் தருகிறார்கள்? சிறை புகுகிறார்கள்? மரண தண்டனை பெறுகிறார்கள்? எத்தனைப் பெண்கள் புருஷர்களையும் பிள்ளைகளையும் இழக்கிறார்கள்? இம்மட்டோ? எத்தனைப் பேர் தமது அரிய மக்களைக் கொலை செய்து விட்டுத் தாமும் தற்கொலை செய்து கொள்கிறார்கள்? இவைகளைக் காட்டிலும் பாவச்செயல்கள் பாரினி லுண்டோ? இவைகளை யெல்லாம் குடியென்னும் பேய் பிடித்தாட்டும் மக்களன்றோ செய்கின்றனர்? எறும்பு, பூரான், தேள் முதலிய விஷஜந்துக்களின் சாரத்தைக் கொண்டதும், ஒழுக்கமுடையோரால் தாங்க முடியாத நாற்றத்தைக் கொண்டதுமான புளித்த கள் ஒருவன் வயிற்றி லிறங்கிய உடனே அவன் தலை தெரியாது ஆட ஆரம்பிக்கிறான்; சாந்தத்தை இழக்கிறான்; அன்பைத் துறக்கிறான்; மதிப்பு மானம் என்பவைகளை மாய்க்கிறான்; உற்றார்



உறவினர் என்பவர்களை மறக்கிறான்; அறிவு கெட்டுச் செய்யத் தகாதவற்றைக் கூசாது செய்கிறான்; சுருங்கக் கூறின், பகுத்தறிவற்ற, கேவலமான, கொடிய மிருகத்தினும் பைத்தியக்காரனினும் கீழானவ னாகிறான். தன் வசமிழந்து, புத்தித் தடுமாற்றங் கொண்டு, கடூரச்செயல்களி லீடுபடும் இவன் அல்லற் படுகுழியில் அழுந்துவது திண்ணமே.

இத்தகைய கொடிய பழக்கத்தை விட்டொழித்தால் எவ்வளவு நன்மைகளைப் பெறலாம்? இந்தப்பாழும் பண்டத்திற்காகச் செலவிடும் பெருந்தொகைகளைக் கல்வி அறிவு முதலியவற்றைப் பரப்பும் வழிகளில் செலவிட்டால் சமூகங்களும் நாடுகளும் எத்துணை மேன்மை பெறும்? ‘கல்வியி னூங்கில்லை சிற்றுயிர்க்குற்ற துணை’ என்பதை மறந்து, குடிகாரர்கள் செல்வத்தை விழலுக் கிறைத்த நீராக்குகிறார்கள். கல்வியில் ஆழ்ந்த பற்றுக்கொண்டு, பணமின்மையால் தங்கள் அவாவை நிறைவேற்ற வியலாது, எண்ணிறந்த ஏழை மக்கள் உள்ளம் நைந்து வாடுகின்றனர். திரவிய உதவி என்னும் அவசியமான நீரை வார்த்து வளர்த்தால் நம் நாட்டில் எத்தனை அறிவு மலர்கள் அகன்று புஷ்பிக்கும்? அவைகளால் நமது தேசம் விண் மீன்கள் பிரகாசிக்கும் விசும் பெனப் பேரொளியுடன் திகழுமே. இத்தகைய அருங்காரியங்களுக்காக ஒரு காசும் செலவழிக்காத மக்கள் கள்ளுக்கடைகளிலும் சாராயக் கடைகளிலும் நூற்றுக்கணக்கான ரூபாய்களைக் கொண்டு கொட்டுகிறார்கள். தக்க உணவும் உறையுளும் இல்லாது திண்டாடும் குடும்பங்களும் இந்தப் பணத்தைக் கொண்டு சுகமாயிருக்க இயலும்.

கடவுள் அன்புரு என்பது யாவரும் அறிந்ததே. அவர் அன்பைக் கண்ட விடத்திலேயே அருள் சுரக்கிறார். ஆகையால், மக்கள் பரம்பொருளினது பெருங்கருணை வாரிதியில் திளைத்து ஆனந்தமெய்த வேண்டுமாயின், அவர்களிடையே இருக்கக்கூடிய கொடூரச் செயல்கள் ஒழிந்து, சாந்தமும் சற்குணமும் பரவி, அன்பு செழித்தோங்கி, இன்பக்கனி பழுக்கவேண்டும். அவர்கள் ஒற்றுமை யென்னும் தூய உடையையும் ஒழுக்கமென்னும் விலை மதித்தற்கரிய அணிகலனையும் அணிய வேண்டும். தேசீயம் பெருகுவதற்கு இவைகள் அவசியமாகின்றன. ஆனால் இத்தகைய அருமைப் பேறுகளைக் குடியை ஒழித்தாலொழிய எந்நாட்டு மக்களும் பெறுவது “துஞ்சுமன் கண்ட கனா”வேயாகும். ஆகவே, கொடூரச் செயல்களுக்குத் தூண்டு கோலாய் உள்ள மதுபானம், இகத்தி லடையக்கூடிய சுகங்களை மட்டும் கெடுப்பதோடு நில்லாமல், பரத்தி லனுபவிக்கக் கூடிய பேரின்ப வாழ்வுக்கும் முட்டுக்கட்டை யாகிறது.

குடியினால் ஏதேனும் நன்மை உண்டோ என ஆராயின், ஒன்று மில்லையென்ற முடிவுக்கே நாம் வரவேண்டும். உழைப்பின் கஷ்டம் தெரியாம லிருப்பதற்காகக் கள் குடிப்பதாகக் கூலியாட்கள் கூறுவது வீணே யாகும். இன்னும், நியூமோனியா ஜுரத்தை நீக்குவதில் சாராயம் சிறிது உபயோக முள்ளது என்ற பழைய கோட்பாட்டையும் அநுபவமும் ஆராய்ச்சியும் பொய்ப்பித்துவிட்டன. கள்ளுக்கடைக ளிருப்பதாலேயே தங்களுக்குத் தென்னை பனை முதலிய மரங்களில் லாபம் வருகிறதெனச் சிலர் எண்ணுவது அவர்களது யோசனைக் குறைவையே காட்டும். பானத்திற்கு மிகவுஞ் சிறந்தவையாகிய இளநீர்க்காய்களும், உடம்புக்கு மிகவும் நன்மை பயக்கக்கூடிய தேங்காய்களும், கோடை காலத்தில் சிறந்த ஆகாரமாய் உதவும் நுங்குகளும் பனை வெல்லம் முதலியவைகளும் கள்ளினால் வரக்கூடிய லாபத்தைக் காட்டிலும் அதிகமாகவே தரும். பாளைகளை வெட்டாது விட்டால் இப்பொருள்களெல்லாம் அதிகமாகவுங் கிடைக்கும். திராக்ஷைப் பழத்தினாலும் அது போலவே லாபம் அடையலாம். அப்படி லாபங் குறைவதா யிருந்தாலும் தங்கள் சுயநலங்கருதி உலகத்தினிடைப் பெருந்தீமைகளைப் பரப்புதல் அறிஞருக்கும் தேசாபிமானிகளுக்கும் அழகானதோ?

‘மேல் நாட்டார் உயர்ந்த சாராயங்களைக் குடிக்க வில்லையா?’ எனில், அவர்களுடைய குளிர்ந்த நாடுகளில் தேகத்தைச் சூடாக வைத்துக்கொள்வதற்கு அது அவசியமாக இருக்கிறது. மேலும் அவர்கள் அளவுக்கு மீறியும் நினைத்த காலங்களிலும் குடித்து விட்டு அதனால் வெறி கொண்டு ஆடுவதில்லை. ஆழ்ந்து பார்க்கின், அந்த நாடுகளிலும் பாதிரிகள் சந்யாசிகள் முதலியோர் இந்தப் பானத்தை நீக்கியிருப்பதும், தெய்வ சம்பந்தமான திருவிழாக்கள் முதலியவற்றிலும், விரதங்களிலும் இப்பானம் கேவலமானதாகக் கருதப்படுவதும், அங்கும் இதன் கெடுதி உணரப்பட்டே யிருக்கிற தென்பதை விளக்கும்.

இன்னும், எந்த வேலையையும், சாதாரண நிலைமையிலிருப்பவனைப் போல், கள் சாராயம் முதலியவைகளைக் குடித்து மயக்கத்திலாழ்ந்திருப்பவன் செய்ய இயலாது. வயல்களிலும் மற்ற இடங்களிலும் வேலை செய்பவர்களுக்கும் தெளிவான மன நிலைமையுடனிருந்தால் நன்றாகவும் அதிகமாகவும் உழைக்க இயலும். அதனால் பொருள் விருத்தி அதிகரிப்பதுடன் நாட்டில் சுக ஜீவனமும் பெருகும்.

இவைகளையெல்லாம் யோசிக்கின், குடியால் விளையும் கேடுகளின் பெருமிதம் நன்கு விளங்கும். தேக சுகத்தைக் கெடுப்பதுங் குடி; பிணிக்கு விருந்தளிப்பதுங் குடி; மரணத்தை யழைப்பதுங் குடி; மக்களிடையே வறுமையை வளர்ப்பதுங் குடி; அன்பு, அறிவு, ஒழுக்கம், மானம், சற்குணம் முதலியவற்றை விரட்டுவதுங் குடி; ஒற்றுமை, சகோதரத்துவம், அபிமானம் முதலியவைகளை அழித்து மக்களது முன்னேற்றத்தைத் தடுப்பதுங் குடி; பஞ்சமா பாதகங்களுள் தலையாய கொலைக்குக் காரணமாவதுங் குடி; பல கூறி என்? மாந்தரைப் பெருத்த நஷ்டத்துக்கும் கஷ்டத்துக்கும் உள்ளாக்கி, உலகத்திலுள்ள சுகங்களை நுகரவொட்டாது அவர்களைத் தடுப்பதுடன், பக்தி அன்பு முதலியவற்றிற்கும் விரோதியாய் இருந்து அவர்கள் கடவுளது கருணையைப் பெறுவதைத் தடுப்பதால், இகபர சுகங்களை இன்மையாக்கிப் பல குடும்பங்களைக் குட்டிச் சுவராக்குவது இக்குடியே. உலகத்தின்கண்ணே யுள்ள பல கெடுதிகளுக்குப் பல காரணங்களிருப்பினும் அவற்றிற் பெரும்பாகத்திற்கு இக்குடியே மூலகாரணமாக இருக்கிறது. அதனாலேயே ஒழுக்க சீலர்களுக்குக் குடிகாரன் என்னும் சொல் நாராசம்போலிருக்கிறது; கள்ளுக்கடை நரகம் போலிருக்கிறது. அது பற்றியே குடியர்களது குடும்பங்களும், அத்தகைய குடும்பங்களையுடைய சமூகங்களும் நாடுகளும் தாழ்ந்தவையாகக் கருதப்படுகின்றன.

இத்துணைத் தீங்குகளுக்கும் ஆதாரமாய இதனை ஒழித்தற்காக இராஜாங்கத்தார் முன்னின்று நான்கு லக்ஷம் ரூபாய் ஒதுக்கி வைத்ததும் இது ஒழிய வேண்டியதின் அவசியத்தையே விளக்கும். பண்டிகை, திருவிழா முதலிய காலங்களில் வேறு பானங்கள் வழங்கல், கூலியாட்களது சம்பளத் தேதிகளில் சங்கீதம், வேடிக்கை முதலிய வழிகளில் அவர்களது கவனத்தைத் திருப்புதல், ஊர்தோறுஞ் சென்று குடியினால் விளையும் கேடுகளைப் பற்றிப் பிரசங்கித்தல், ஆங்காங்கேயுள்ள கள்ளுக் கடைகளையும் சாராயக்கடைகளையும் குறைக்க முயலுதல், கிராமங்களின் முக்கியஸ்தர்கள் இக்கடைகளினருகில் இருந்து அங்கு வருபவர்களுக்குப் புத்திமதி கூறி அவர்களைத் திருப்பும்படி செய்தல் முதலிய முறைகளில் மதுவிலக்குச் சங்கத்தார் படும் பாடுகள் நற்பயனைத் தந்து மக்களிடையே சுகத்தையும் இன்பத்தையும் பரவச்செய்யுமாறு எல்லாம் வல்ல இறைவனைப்போற்றுவது, குடியின் தீமைகளை அறிந்து அவை ஒழிய வேண்டுமென விரும்பும் ஒவ்வொரு அபிமானிக்கும் அமைந்த கடமையாகையால், எளியேனும் அவ்வாறே இறைவனை இறைஞ்சுகின்றேன்.

---

## ஸ்ரீ பாநுகவி மாணவர் கழக இரண்டாம் ஆண்டு விழா.

பேரன்புடைய பெற்றியீர் !

(5 - 6 - 30) மாலை 6 - மணிக்குப் பரிதிபுரம் ஸ்ரீ திருநாவுக்கரசு மடத்தில் ஸ்ரீ பாநுகவி மாணவர் கழகத்தின் இரண்டாம் ஆண்டுவிழா நடைபெறும் அவ்வமயம் கூடும் அவைக்குத் திருவத்திபுரம் போர்டு ஹைஸ்கூல் தலைமைத் தமிழ்ப் பண்டிதர் சைவத் திருவாளர் சோ. வீரபத்திரப்பிள்ளை அவர்கள் அவைத்தலைமை வகித்து நடத்துவிக்க அன்பு கூர்ந்துள்ளார்கள். பல உபந்நியாசங்கள் நடைபெறு மாதலின் அன்பர்களெய்திக் கேட்டானந்திக்குமாறு வேண்டுகிறேன்.

ஷை மடாலய டிரஸ்டிகள்,
M. அய்யாதுரை முதலியார்
P. முத்துசாமி முதலியார்
K. அப்பாசாமி முதலியார்
A. கணபதி முதலியார்

இங்ஙனம்,
A. கணபதி முதலியார்,
பிரஸிடெண்ட்.
3—6—30



சிவமயம்

சிவ சண்முக மெய்ஞ்ஞான தேசிகன் றிருவடி வாழ்க.

# சித்தாந்தப் பகுதி

## சமய நுண் பொருள்கள்

(தொகுதி 4, 160-ம் பக்கத் தொடர்ச்சி)

[திரு. க. வச்சிரவேலு முதலியார், அவர்கள் பி. ஏ., காஞ்சிபுரம்]

### அளவையின் வகை.

முன் விளக்கிப் போந்த ஆன்ம சித்சத்தி (உயிரினின்றும் புறத்துப் பொருள்களை நோக்கி ஓடும் உணர்வு) எல்லாப் பொருளையும் அறிதற்கு உரியது; ஆயினும் அது மலம் (அழுக்கு) என்ற ஒரு நுண்ணிய பொருளால் விளங்க வொட்டாமல் தடுக்கப் படுதலினால், தானே விளங்கி ஒரு பொருளையும் அறியாது. இதன் இயல்பு, கண்ணொளியோடு இதனை ஒப்பிட்டு நோக்கின், நன்றாக விளங்கும். கண்ணொளி எல்லாப் பொருளையும் காணும் இயல்புடையது; ஆயினும் இருளில் உள்ள கண்ணின் ஒளி அவ்விருளால் தடுக்கப்படுதலினால் தானே விளங்கி ஒன்றையுங் காணமாட்டாது. இனி இருளால் மறைக்கப்பட்ட கண்ணொளி, அவ்விருளை நீக்கித் தன்னை விளக்குதற்கு விளக்கு முதலிய ஒளியுடைப் பொருள்களை அவாவும். அவ்வாறு விளக்கு முதலிய பொருள்களைப் பெற்றால் அவற்றின் ஒளியால்தான் விளக்கத்தை யடைந்து பொருள்களைக் காணும். இவ்வாறே ஆன்ம சித்சத்தியும் தன்னைத் தடுத்து நிற்கும் மல சக்தியை நீக்குதற்குச் சில பொருள்களை வேண்டி நிற்கும். அப் பொருள்கள் மலத்தின் தடுத்தற் சக்தியைச் சிறிது நீக்கி ஆன்ம சித்சத்தியை விளக்கும். ஆன்ம சித்சத்தியும் அவற்றால் விளக்கம் எய்திப் பொருள்களை அறிதற்கு உரியதாகும். இங்ஙனம் மலத்தாற் றடுக்கப்பட்டுத் தானே விளங்கி அறியமாட்டாத ஆன்ம சித்சத்திக்குத் துணையாய் நின்று அதனை விளக்கி அதற்கு விடயங்களைக் காட்டும் பொருள்கள் எவையோ அவையெல்லாம் வியஞ்சகம் என்ற பெயரால் வழங்கப்படும். இவ்வியஞ்சகங்கள் தத்தம் பயன் வேறுபாட்டால் இருவகைப்படும். அவற்றுள் ஒருவகை ஆன்மசித் சத்தியையே விளக்குவன. அதாவது மல சக்தியை நீக்கி, ஆன்ம சித்சத்தியின் தடையை நீக்கும் மாத்திரத்தால் அதனைப், பொருள்களை அறிதற்கு யோக்கியமாகும்படி, பொதுவாக விளக்கி நிற்பன; சமீப பார்வை (short sight) என்ற குற்றமுடைய கண்ணிற்கு அக்குற்றத்தை நீக்கி அக்கண்ணை எல்லாப் பொருளையும் காண்டற்குத் தகுதி யுடையதாக்கும் கண்ணாடி (lens) எவ்வாறு அக்கண்ணைப் பொதுவாக விளக்குகின்றதோ அதுபோலக் கொள்க. இங்குக் கண்ணோடு உயிரையும், அதன் ஒளியோடு (short sight) ஆகிய குற்றத்தோடு மலமாகிய குற்றத்தையும், கண்ணாடி (lens) யோடு வியஞ்சகத்தையும் ஒப்பிட்டுக் காண்க.

இனிமற்றொருவகை:—இவ்வாறு பொதுவாக விளங்கிப் பொருள்களைக் காணுதற்கு உரிமை பூண்டு நிற்கும் ஆன்ம சித்சத்தி அவ்வப்பொருள்களைச் சிறப்பாகக்காணும்படி அப்பொருள்தோறும் விளக்கி நிற்பன. இவை மேற்கூறியபடி கண்ணாடியால் (lens) சமீப பார்வையாகிய (short sight) குற்றம் (defect) நீங்கிப் பொருள்களைக் காணுதற்குரிமை பூண்டு நிற்கும் கண்ணுக்கு அப் பொருள்களை விளக்கிக் காட்டும் ஒளியோடு அல்லது, உஷ்ணநிலை (temperature) வாயுவின் அழுத்தும் சத்தி (atmospheric pressure)முதலாகப் பல வாயுள்ள பொருள்களை அவ்வப்பொருள் தோறும் வெவ்வேறாய் அவ்வவற்றை விளக்கிக் கண்ணுக்குக் காட்டும் உஷ்ணமானி (ther mometery) வாயுமானி (Barometer) முதலியவற்றோடு, ஒப்பிட்டு அறியற்பாலன. இவற்றுள் முதற் பகுதியில் பின்னே கூறப்படும் வித்தியா தத்துவம் ஒருவாறு அடங்கிவிடும். இரண்டாம் பகுதியில் ஓசை, ஒளி முதலிய வாய்ப்புறத்துள்ள பொருள்களைத் தனித் தனிவிளக்கி நிற்கும் செவி, கண் முதலிய பொறிகள் அடக்கப்படும்.

இங்கு ஆன்ம சித்சத்தியைப் பொதுவாக விளக்குதற்கும் அவ்வப் பொருள் தோறும் சிறப்பாக விளக்கிக் காட்டுதற்கும் சில கருவிகள் வேண்டற்பாலன என்று கூறினோம். இவ்வாறே ஆன்மாவின் இச்சாசக்தி கிரி சக்திகளையும் (இவற்றின் இயல்பு முன்னர்க் கூறினும்; ஆண்டுக் காண்க) பொதுவாகவும் சிறப்பாகவும் விளக்குதற்கு இவை போற் பல கருவிகள் வேண்டப்படும். இக்கருவிகளின் தொகுதிக்குத்தான் தத்துவங்கள் அல்லது முதல்கள் (elements) என்பது பெயர். இவை 36 என்றஎண்ணிக்கையுடையன. இவற்றினியல்பும் மலத்தின் இயல்பும் இவ்விரண்டின் உண்மை (இருப்பு or existence) யும் பின்னர் வேறொரு பகுதியில் நன்றாக விளக்கப்படும்.

இனி முற்கூறியபடி வியஞ்சகங்களுள் இரண்டாம் பகுதியைச் சார்ந்தனவாய் ஆன்ம சித்சத்திக்குப் பொருள்களைக் காட்டுவனவாய் உள்ளவை காண்டல், கருதல், உரை என்ற இம்மூன்று வகையுள் அடக்கப்படும். படவே, ஆன்மசித்சத்தி இம் மூன்று வியஞ்சகங்களையும் பற்றி நின்று முறையே காண்டலோடு கூடிய வழி காட்சி அளவை என்றும், கருதலோடு கூடிய வழி கருதலளவை என்றும் உரையோடு கூடிய வழி உரையளவை என்றும் முத்திறப்பட்டு அவ்வவ்வியஞ்சகங்களுக்கெட்டிய யோக்கியமாகிய பொருள்களை (விஷயங்களை) அறியும். இவற்றுள், காட்சியளவை மலர் முதலியனவாய் எதிரில் உள்ள பொருளையும், கருதலளவை அவ்வாறு நேரே அன்றி (நேரிற் காணப்பட்ட பொருளாற் சாதித்து உண்மை கோடற்குரியனவாய்) மறைவில் தீ முதலியனவாய் உள்ள பொருளையும், உரை அளவை அவ்விரண்டானும் அறிய முடியாதனவாய், அவ்விரண்டினுள் ஒன்று பற்றி அறிந்தோர் வாய்ச் சொல் கொண்டு அறிதற்குரியனவாய், சுவர்க்கம், பாதலம் முதலியனவாய் உள்ள பொருளையும் அறிதற்குக் கருவியாகும். அஃதாவது காட்சி அளவைக்கு எதிரில் உள்ள பொருளும், கருதலளவைக்கு நேரே அன்றி மறைவிலுள்ள பொருளும், உரையளவைக்கு அவ்விரண்டானும் அறியப்படாத பொருளும் யோக்கியமாம் என்றபடி.

### காட்சியளவை.

இம் மூன்றனுட் காட்சி அளவையாவது முற்கூறியபடி எதிரில் உள்ள பொருளை அறிதற்குக் கருவி ஆகும். இது வடமொழியில் பிரத்தியக்ஷ பிரமாணம் என்று வழங்கப்படும். நம்மறிவு (ஆன்ம சித்சத்தி) எதிரில் உள்ள பொருள்களை அறியுமிடத்துச் செவியால் ஓசையைக் கேட்டும், கண்ணால் நிறத்தினைக் கண்டும், மூக்கால் நாற்றத்தை (மணத்தை) உயிர்த்தும், நாவால் சுவையை உண்டும், மெய்யால் ஊற்றினை (பரிசத்தை) உள்ளும் தடையற உணர்ந்து வருகின்றது. இவ்வாறு உணரும் உணர்வே காட்சி உணர்வு எனப்படும். இக்காட்சி யுணர்விற்குக் கருவி யாது? மேற் செவி முதலாகக் கூறப்பட்ட ஐம் பொறிகளோடு கூடி நின்ற ஆன்ம சித்சத்தியே கருவி ஆகும். ஆகவே இவ்வாறு எதிரில் உள்ள பொருளை அறியும் கருவியாய் ஐம்பொறிகளோடு கூடி நின்ற ஆன்ம சித்சத்தி காட்சி அளவை எனப்படும். மேல், புறத்தில் உள்ள ஓசை முதலியனவாகக் கூறிய விடயங்களை உயிர் அறிதற்குத் துணையாய் அவற்றை உயிரின் அறிவுக்கு (ஆன்ம சித்சத்திக்கு) விளக்கிக் காட்டுவன செவி முதலிய பொறிகளாகலின் அவை வியஞ்சகம் எனப்படும்.

### காட்சியளவையின் சிறப் பியல்புகளும் அதன் வகையும்

வித்தையினுண்மை :—இனி இக்காட்சி யுணர்வின்கண் படும் சிறப்பியல்களைச் சிறிது மனம் நுணுகி ஆராய்வோமாக. மேற் கூறியதைச் சிறிது கருத்தூன்றி நோக்கும்போது உயிரின் அறிவு ஓசை முதலாக உள்ள புறத்துப் பொருள்களை அறியல் உறும்போது அது தானே விளங்கி அறியவில்லை எனவும், ஆனால் தனக்கு வியஞ்சகமாகிய செவி முதலிய பொறிகளைப் (அவ்விடயங்கள் தோறும்) பற்றி நின்று, அவற்றைத் தொழிற்படுத்தி அவற்றை வழியாகக் கொண்டறிகின்றது எனவும் விளங்கும். அன்றியும் இவ்வுயிரின் அறிவு இவ்வாறு தன்னை விளக்குதற்கு வியஞ்சகங்களை வேண்டி நிற்றற்குக் காரணம் அது மலத்தால் தடுக்கப்பட்டு நிற்றல் எனவும், அம்மலத்தினால் இதன் அறிவு, இச்சை, செயல்கள் நிகழாமல் தடுக்கப் படுகின்றன என்றும் கூறினோம். இந்த உத்தேசம் (Supposition) அல்லது சங்கேதத்தை இன்னுந் தொடர்ந்து ஆராயின் கீழ்க்கண்ட முடிபுகள் தோன்றும். அவை வருமாறு :—உயிர் மலத்தால் மறைக்கப்பட்டு நிற்றலின் அதன் அறிவு தானே விளங்க மாட்டாது; அன்றியும் ஓசை முதலிய விடயங்களை யறியும்போது செவி முதலிய பொறிகளால் விளக்கம் அடைந்து அறிகின்றது என்று கொண்டபோதும், செவி முதலியனவும் உயிரின் அறிவால் அதிட்டித்துத் (பற்றி) தொழிற் படுத்தப் பட்ட பொழுதுதான் ஓசை முதலிய விடயங்களை உயிர்க்குக் காட்டுகின்றனவே ஒழிய தாமே அவ்விடயங்களை அதற்குக் காட்டுவனவல்ல. என்னை? செவி முதலியன குற்ற மின்றியுள்ள காலத்தும், நம் கருத்து வேறொன்றிற் றங்கி இருக்குமாயின் அப்பொழுது எதிரிலுள்ள ஓசை முதலியன அறியப்படாதன வாகின்றன என்பது யாவர்க்கும் அநுபவம் ஆதலின். ஆகவே, உயிரினறிவு செவி முதலிய பொறிகளை அதிஷ்டித்தற்கும், அவற்றை எதிரிலுள்ள விஷயங்களைக் காட்டும்படி தொழிற் படுத்தற்கும் ஏதுவாக, மலத்தின் தடையைச் சிறிது நீக்கி உயிரினறிவைப் பொதுவாக விளக்குங் கருவிக்கு வித்தை அல்லது வித்தியா தத்துவம் என்பது பெயர். வித்தை என்பதற்கு அறிவு என்பது பொருள். ஆன்மாவின் அறிவை விளக்கி நிகழ்வித்தலின், இக்கருவிக்கு வித்தை என்பது காரணம் பற்றி வந்த பெயர்.

வாயிற் காட்சி:— மேலே விளக்கியதிலிருந்து ஆன்ம சித்சத்தி புறத்திலுள்ள ஓசை முதலிய விடயங்களைக் கண்ணுறும்போது முதற்கண் தான் (ஆன்ம சித்சத்தி) வித்யாத் தத்துவத்தால் விளக்கப்பட்டு விடயங்களைப் பொதுவாக அறிதற்கு உரிமை எய்தி நிற்கும் என்றும், பிறகு புறத்து விடயங்களைக் காட்டுதற்குரிய செவி முதலிய பொறிகளை அதிஷ்டித்து அவற்றைத் தொழிற் படுத்தி நிற்கும் என்றும் பின்பு அப்பொறிகள் வாயிலாக (through the medium of the senses) அல்லது வழியாக விஷயங்களை அறிகின்றது என்றும் பெறப்படும். படவே விஷயங்களைக்காணலுறும்போது ஆன்ம சித்சத்தி வித்தியாதத்துவத்தைக் கருவியாகவும் செவி முதலிய ஐம்பொறிகளை வாயில்களாக அல்லது வழிகளாகவும் கொண்டு அறிகின்றது என்று



பெறப்படுகின்றது. ஆதலினால் செவி முதலிய ஐம் பொறிகளுக்கு வாயில்கள் என்று வேறொரு பெயர் உண்டு; மேற் சொல்லியபடி நிகழும் காட்சிக்கும் வாயிற் காட்சி என்று பெயர் வழங்கப்படும். வாயிலான் வந்த காட்சி என்பது பொருள். இது இந்திரியக் காட்சி என்றும் கூறப்படும்.

நிர்விகற்பக் காட்சியும் சவிகற்பக் காட்சியும்

இனி, புறத்துப் பொருள்களைக் காணும்போது நாம் இருவகையாகக் காண்கின்றோம். முதலில். எதிரி லுள்ள பொருளைப் பெயர் முதலியவற்றாற் சிறப்பித்து அறியாது 'இஃது ஒரு பொருள் தோன்றுகின்றது' என்று அப்பொருளின் உண்மை மாத்திரத்தை அறிவோம். இதற்கு நிர்விகற்பக் (விகற்ப மில்லாத) காட்சி என்பது பெயர். மேற் கூறிய வாயிற் காட்சி இந்த நிர்விகற்பக் காட்சியே ஆகும். அவ்வாறு ஆன்ம சித்சத்தி வித்தியா தத்துவக் கருவியாகச் செவி முதலிய பொறிகள் வாயிலாகப் புறத்து விஷயங்களை அறியும். ஏனென்றால் வித்தியாதத்துவம் அதைப் பொதுவாகத்தான் விளக்கும்; ஆதலின் அதனாலுண்டாகும் வாயிற் காட்சியும் நிர்விகற்பக் காட்சியே யாகும். இனி இவ்வாறு நிர்விகற்பமாய்ப் பொதுவாக அறிந்த பொருளை அதன் பெயர், வகுப்பு (சாதி), தன்மை (குணம்) தொழில் பொருள் ஆகிய ஐந்து விசேடணங்களால் விசேடித்து (சிறப்பித்து) அறியும்போது அக்காண்டலுக்குச் சவிகற்பக்காட்சி (விகற்பத்தோடு கூடிய காட்சி) என்பது பெயர். இக்காட்சி இவன் பொன்னன் (பெயர்), இவன் பார்ப்பான் (வகுப்பு), இவன் கரியன் (தன்மை), இவன் சேவகன் (தொழில்), இவன் குழையன் (பொருள்) என்று இவ்வாறு நிகழும்.

நிருவிகற்ப சவிகற்பக் காட்சிகளி னுண்மை:— இவ்வாறு காட்சி இருவகைப்பட்டு நிகழ்கின்றது. என்பதை எல்லாருக்கும் அநுபவமாய் நிகழும் ஒரு சிறிய சம்பவத்திலிருந்து தெரியலாம். 'நாம் சில நேரங்களில் ஏதோ ஒரு விஷயத்தில் கருத்தை ஊன்றிச் சிந்தித்துக் கொண்டிருக்கிறோம். அப்பொழுது நம்மருகில் உள்ள நண்பர் ஒருவர் ஏதோ ஒரு விஷயத்தைப் பற்றிச் சொல்லுகிறார். உடனே அவர் சொன்னதைக் கவனிக்கப் புகுகிறோம். அப்பொழுது அவர் ஏதோ ஒன்று சொன்னார் என்பது மாத்திரம் விளங்குகின்றது; ஆனால் என்ன சொன்னார் என்று விளங்கவில்லை. இதுவே மேற் சொல்லிய நிருவிகற்பக்காட்சி. இதுதான் வாயிற் காட்சியும் ஆகும். இங்கு ஆன்ம சித்சத்தி வித்தியா தத்துவத்தைக் கருவியாகவும் செவியை வாயிலாகவும் கொண்டு நண்பர் கூறிய மொழியை 'இஃதொன்று கேட்கின்றது' என்று பொதுவாக அதன் உண்மை மாத்திரத்தை அறிகின்றது. பிறகு நாம் என்ன செய்கிறோம்? அவர்கள் கூறியது என்னை? என்று சிந்திக்கின்றோம். அஃது இன்னதென்று விளங்காமையால் அவர்களை மீண்டும் "ஆ! என்ன சொன்னீர்கள்? நான் கவனிக்கவில்லை" என்று வினவுகிறோம்; அவரும் தாம் கூறியதை மறுமுறை கூற ஆரம்பிக்கின்றார்; ஆனால் அவர் மறுமுறை கூறுவதற்கு முன்னமே 'அவர் இன்னது கூறினார் என்றது' விளங்கிவிடுகின்றது. அதனால் நாமும் "ஓ! அந்த விஷயத்தைக் கூறினீர்களா! என்று சொல்லுகின்றோம். இங்கு இரண்டாவது நமக்கு உண்டாய காட்சி தான் சவிகற்பக் காட்சியாகும். இவ்வாறு பொருள் தோறும் இருவகைக் காட்சிகளும் முறையாக உண்டாகின்றன. ஆனால் அவை விரைந்து நம் மறிவின்கண் நிகழ்தலின் அவற்றைப் பிரித்துக் காணும்போது மிகவும் மனம் நுணுகிக்காணவேண்டி யிருக்கிறது. இச்சம்பவத்திலிருந்து மற்றொரு உண்மையும் அறியலாம். இங்கு நிர்விகற்பக் காட்சிக்கு எது விஷயமோ அதைவிட வேறொரு விடயம் சவிகற்பக்காட்சியில் வந்து கூடவில்லை. சவிகற்பக் காட்சியில் முன்நிகழ்ந்த நிர்விகற்பக் காட்சியைத் தான் நம் அறிவு மறவாது பற்றி நின்று சிந்தித்து ஆராய்கின்றது; பிறகு சவிகற்பமாய் உணர்கின்றது. இதனால் நிருவிகற்பக் காட்சியையன்றிச் சவிகற்பக் காட்சி என்பதொன்றில்லை என்றும், சவிகற்பக்காட்சியில் வியக்தமாய் (விளக்கமாய்) வெளிப்பட்டுத் (Being evolved) தோன்றும் விகற்பங்கள் (பெயர் சாதி முதலிய விசேஷணங்கள்) எல்லாம் நிர்விகற்பக் காட்சியில் அவ்வியக்தமாய் (விளங்கித்தோன்றாமல்) அடங்கியுள்ளன (Involved) என்றும், நிருவிகற்பக்காட்சிக்குப் புறத்திலுள்ள ஓசை விடயம் ஆயினாற்போல, சவிகற்பக்காட்சிக்கு நிருவிகற்பமாய் அறிவின்கண் வந்த அவ்வோசையின் உணர்வுதான் விடயமாகும் என்றும், நிருவிகற்பக்காட்சியுண்டாகும் வரையிற்றான் செவி முதலிய பொறிகள் ஆகிய வாயில் வேண்டப்படும் என்றும், சவிகற்பக்காட்சிக்கு அவ்வாயில் வேண்டப்படா என்றும், ஆகவே வாயிற் காட்சி என்பன எல்லாம் நிருவிகற்பக்காட்சியே என்றும் நுண்ணுணர்வால் தெரிந்துகொள்ளுக.

உளக்காட்சி அல்லது மானதக்காட்சி :—இனி, வித்தியாதத்துவத்தோடு கூடி நின்று பொதுவாக விளங்கி நிற்கும் உயிரின் அறிவின்கண் மேற்கூறியபடி நிர்விகற்பமாய், பொறிகள் வாயிலாக, வந்த உணர்வு (வாயிற் காட்சி யுணர்வு) பின்பு அவ்வறிவின்கண் சவிகற்பமாய் விரிந்து தோன்றுதற்கு இடையில் நம் அகத்தில் நிகழும் நிகழ்ச்சிகள் என்னை என்று காண்போமாக. புறத்தில் உள்ள விடயத்தை நிருவிகற்பமாய்ப் பொதுவாக "இஃது ஒன்று தோன்றுகின்றது" என அதன் உண்மை மாத்திரையான் அறிந்த உயிரின் அறிவு பின்னர், 1. அதனை "இது யாதாகற் பாற்று" என்று தூக்கிச் சிந்திக்கும். இவ்வாறு சிந்திக்கும்போது அந்த நிருவிகற்ப உணர்வில் அவ்வியக்தமாய் அடங்கியுள்ள இயல்புகளை வியக்தமாய் வெளிப்படுத்திக் காணும். 2. இங்ஙனம் சிந்தித்து அவ்வுணர்வில் (வாயிற் காட்சி யுணர்வில்) உள்ள இயல்புகளை வெளிப்படுத்திக் கண்ட பிறகு "இது குற்றி ஆகற்பாற்று" "இது மகன் ஆகற்பாற்று" என்றிவ்வாறு சங்கற்பிக்கும். இங்ஙனம் சங்கற்

பிக்கும் போது அவ்வுணர்விற் காணும் இயல்புகளை, இதற்குமுன் தான் சவிகற்பமாய்க் கண்ட விடயங்களி னியல்புகளோடு ஒற்றுமைப் படுத்தி யறியும். இச்சங்கற்பத்தின் பிறகு "இது குற்றியோ மகனோ" என்று ஐயமாய் விகற்பித்து அறியும். 3. இச்சங்கற்ப விகற்பங்களுக்குப் பிறகு "நான் இதனை இன்னதென நிச்சயிப்பேன்" என ஒருப்பட்டு எழும். 4. இவ்வொருப் பாட்டின் பிறகு "இது குற்றி, இது மகன்" என்று சவிகற்பமாய் நிச்சயித்தறியும். இக்கூறிய சிந்தித்தல், சங்கற்ப விகற்பம், ஒருப்பட்டெழுதல், இன்னதென நிச்சயித்தல் என்ற நாலவகைத் தொழிற்பாடும் நம் அகத்தில் மிக நுணுக்கமாய் விரைந்து நாம் விஷயங்களைக் கண்டறியுந்தோறும் நிகழ்கின்றன. இவ்வாற்றால், இங்கு மலத்தால் தடுக்கப்பட்டுப் பின் வித்தியா தத்துவத்தோடு கூடிப் பொதுவாக அறிவு விளக்கப்பெற்ற உயிர் இவ்வாறு சிறப்பாகச் சிந்தித்தல் முதலியவற்றைச் செய்தற்கு ஏதுவாக அதற்குத் துணையாய் விளக்கி நிற்கும் கருவிகள் உளவாதல் வேண்டும் என்று துணியப்படும். அந்தக் கருவிகள் தாம் அந்தக் கரணங்கள் (உட்கருவிகள்) எனப்படுவன. இவை செவி முதலிய இந்திரியங்களினும் நுணுகியவையாய், அகத்தில் உள்ளனவாய், சித்தம், மனம், ஆங்காரம், புத்தி என நான்காம். இவற்றுள் சித்தம் சிந்திக்கும்; மனம் சங்கற்ப விகற்பம் செய்யும்; ஆங்காரம் ஒருப்பட்டெழும்; புத்தி நிச்சயிக்கும்.

இவ்விஷயத்தை ஓர் உதாரணத்தால் விளக்கலாம் என நினைக்கின்றேன். ஒரு குடும்பத்தில் நான்கு இளம்பிள்ளைகள் இருப்பதாகவும் அப்பிள்ளைகள் மாட்டு அன்புள்ள ஓர் உறவினர் ஒருநாள் தின்பண்டங்கள் பொதிந்த முடிச்சு ஒன்றைக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு வெளியிற் சென்றிருப்பதாகவும் வைத்துக்கொள்ளுவோம். அம்முடிச்சை ஒரு பையன் வாங்குகிறான். அவன் அம்முடிச்சைத் தடவி "இஃதுஎன்ன உடையது?" என்கிறான். மற்றொருவன் முன் அவர் இதுபோன்று கொண்டுவந்த வழக்கங்களையும் இன்று அம்முடிச்சியின் அமைப்பையும் கவனித்து 'இஃது இன்னதுடைத்து, இன்னதுடைத்து' என்றும் 'இஃது இன்னதுடைத்தோ அன்றோ' என்றும் சங்கற்பவிகற்பம் செய்கிறான். மூன்றாவது பிள்ளை 'இஃது இன்னதென்று, அவிழ்த்துப் பார்த்துவிடவேண்டும்' எனத் துணிந்து கூறுகிறான் பிறகு கடைசியிலுள்ளவன் அங்ஙனமே அதை அவிழ்த்துப் பார்த்து இன்னதென நிச்சயித்துக் கூறுகிறான். இங்குத் தின்பண்டத்தைத்தெரியாமல் பொதிந்துள்ள மூட்டை முதற்கண் வாயிற் காட்சியான் உயிரினறிவு ஐம்புலன் சார்ந்து கொண்டு வந்த நிருவிகற்பக் காட்சியை ஒக்கும். எங்ஙனம் தின்பண்டம் எல்லாம் இருந்தும் அவை விளங்கித் தோன்றாமல் பொதியப்பட்டு உள்ளனவோ அங்ஙனமே நிருவிகற்பக் காட்சியிலும் விடயத்தின் பெயர், வகுப்பு முதலிய இயல்புகள் அவ்வியக்தமாய்ப் பிரிந்து தோன்றாமல் அடங்கியுள்ளன. இனி அத்தின்பண்டங்களை இன்னவென்று நிச்சயிக்கப் புகுந்த 4 பிள்ளைகளுள் முதற்பிள்ளை சித்தத்திற்கும், இரண்டாம் பிள்ளை மனத்திற்கும், மூன்றாம் நான்காம் பிள்ளைகள் ஆங்காரத்திற்கும், புத்திக்கும் உவமையாக எடுத்துக் கொள்ளுதற்கு உரியர். இந்நால்வரும் இவ்வாறு ஒருவர் பின் ஒருவராய் முயன்று முடிவில் அம்முடிச்சை இன்னதென்று நிச்சயித்த உணர்வு, சித்தம் முதலியன முறையே ஒன்றன் தொழிற்பாடு அடுத்து மேல் வருவதன் தொழிற் பாட்டிற்குக் காரணமாய் முடிவில் புத்தியால் நிச்சயித் துணரப்படும் சவிகற்பக் காட்சியுணர்வுக்கு உவமையாகும்.

இக்காட்சியே உளக்காட்சி அல்லது மானதப் பிரத்யக்ஷம் எனக்கூறப்படும். உளத்தால் வந்த காட்சி அல்லது மனத்தால் வந்த பிரத்யக்ஷம் (காட்சி) என்பன பொருள்கள். இங்கு இக்காட்சியில் முதற்கண் மனத்தின் தொழிற்பாடு நிகழ்தலின் உளக்காட்சி அல்லது மானதக்காட்சி எனப்பட்டது. உளம் - மனம் எனவே உளக்காட்சியாவது ஐம்புலன் சார்ந்து நிருவிகற்பமாய் அறிந்த வாயிற்காட்சியானது பின் மறத்தலின்றி நெஞ்சத்தால் நினைக்கப்பட்டு உறுதியாகிச் சவிகற்பமாய் அறிவின்கண் வந்துசேரும் நிலையான உணர்வாம் எனக்கொள்ளுக. இவ்வுணர்வுக்கு கருவி புத்தி தத்துவத்தோடு கூடிய ஆன்ம சித்சத்தி என்க. இக்காட்சியில் புத்தி தத்துவம் கருவியாகும், வாயிற்காட்சி உணர்வு விடயம் ஆகும்.

தன்நுகர்வுக் (வேதனை) காட்சி : இனி இவ்வாறு சவிகற்பமாய் உணரப்படும் புறவிடயங்கள் சுக, துக்க, மோகம் (இன்ப, துன்ப, மயக்கம்) ரூபமாய் முக்குண வடிவாயுள்ளன. ஒவ்வொரு விடயமும் இம்முக்குண மயமாயிருப்பினும் ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு குணமே மூளைத்துத் தோன்றி நம்மறிவிற் றட்டும். ஆகவே சந்தனம் முதலிய விடயங்களை நாம் புத்தி தத்துவத்தால் சவிகற்பமாய் நிச்சயித்து அறியும்போது அக்காட்சியின் பெருமை (விசேடம்) பற்றி விடயத்தில் உள்ள சத்துவம் முதலியவற்றுள் ஒரு குணம் மேம்பட்டு நிகழும். புத்தி தத்துவமும் தான் சவிகற்பமாய் உணர்ந்த பொருள் வடிவமாய் அது அதுவாய்த் திரிந்து நிற்கும். ஆகவே புத்தியின்கண் பொருளில் மூளைத்துத்தோன்றும். சத்துவம் முதலிய குணம் விளங்கித் தோன்றும். அதாவது புத்தித் தத்துவம் புறவிடயங்களைச் சவிகற்பமாய் அறிந்து அவ்வவ்விடயங்களாய்ப் பரிணமித்து நிற்கும்போது சத்துவம் முதலிய முக்குணத்தில் எக்குணம் விடயத்தில் மூளைத்துத் தோன்றுமோ அக்குணம் புத்தியின்கண் விளங்கித் தோன்றும் என்றபடி. இவ்விளக்கத்தை உயிரின் அறிவு வித்தியா தத்துவத்தோடு கூடிநின்று அறியும்போது உயிரின்கண் இன்ப துன்ப உணர்ச்சி தோன்றும். புத்தியின்கண் சத்துவ குணம் (தூயதன்மை) விளங்கித்தோன்றும்போது இன்பமும், இராசத

வழிகளாகவும் கொண்டு அறிகின்றது என்று



# நாவல் பகுதி

## சிந்தாமணி யெழுதிய சித்திரம்

[கலைமகள்]

"என்ன தேடுகிறாய் சிந்தாமணி! கட்டிவைத்துவிட்டாயானால் நானே ராமனுடன் ரயிலுக்குப் போய் ஜாக்கிரதையாய்ப் படங்களை அவன் வசம் ஒப்பித்து வருகிறேன்." என்று கூறினான் சித்திரவர்மன்.

தன் காதலனுக்குத் தன் சித்திரத்தைப்பற்றியிருந்த கவலையைக் கவனித்துக் களிப்படைந்த சிந்தாமணி, "இதோ ஆகிவிட்டது. முத்திரை வைக்கத்தனை அரக்கு வேண்டுமென்று தேடுகிறேன். எங்கும் காணப்படவில்லை. கீழேபோய்க் கடையிலிருந்து யாரையேனும் வாங்கிவரச் சொல்லிவிட்டு வருகிறேன்." என்று அறையை விட்டுச் சென்றாள்.

அறையில் சித்திரவர்மன் தனியே யிருப்பதைக் கண்டு "இதுவே அவள் படத்தைப் பார்ப்பதற்குச் சரியான சமயம்." என்று சந்தோஷித்தான். பரபரப்பாய் நடுங்கும் கைகளால் சிந்தாமணி செம்மையாய்க் கட்டியிருந்த கயிறுகளை அவிழ்த்துப் படத்தின்மீதிருந்த மெல்லிய காகிதங்களை ஓசைப்படுத்தாமல் எடுத்தான். படத்தைப் பார்த்ததும் அதன் அழகும் அருமையான வேலைப்பாடும் அவன் கண்களைக் கூசச்செய்தன. அவனுடைய செருக்குற்ற மனம் இடிவிழுந்தாற்போற் திகைத்தது. மனதிலெழுந்த கோபம், பொறாமை முதலிய உணர்ச்சிகளின் மிகுதியால் மூச்சும் ஒழுங்காய் விடமுடியாம லிருந்தான். சிந்தாமணியின் சித்திரத்தைப் பார்க்கப் பார்க்க அவன் கண்களும் உள்ளமும் நெருப்பா யெரிந்தன. தன் ஆசையும், வித்தையும், புகழும் இப்படத்திற்கு முன் கதிரவன் ஒளிபட்ட பனியென அழிந்து விடுமென்றுணர்ந்தான். செய்வகை யறியாமல் ஒருகணநேரம் அயர்ந்து நின்றான்.

அடுத்த விநாடியில் பொறாமைப்பேய் பிடித்துந்திய அவனுடைய மனதில் ஒரு கொடிய யோசனை யுதித்தது. அந்த எண்ணம் நல்லதா, கெட்டதா, நமக்குத் தகுந்ததுதானா என்று மனத்தில் நினைக்கு முன் அவன் கைகள் சிந்தாமணியின் மேஜை அறையைத்திறந்து அதனுள்ளிருந்து அன்ன வடிவத்திலிருந்த அழகிய மைக்கூட்டையெடுத்தன. கண்ணிமைப்பதற்குள் அக்கூட்டிலிருந்த பச்சை மையில் முக்காற் பாகத்தைச் சிந்தாமணியின் சிறந்த படத்திலூற்றினான். அவன் தான் செய்த அற்பத் தனமான வேலையை முடிப்பதற்குமுன் மாடிப்படியில் சிந்தாமணியின் குரலும் காலடி யோசையும் செவியிற் பட்டது. அவன் நெஞ்சும், மார்பும் படபடவென் றடித்துக்கொள்ளக் கண்கள் சுழலச் சரேலென்று அம்மைக்கூட்டைத் தன் கைக்குட்டையிற் சுற்றிச் சட்டைப் பையிற் றிணித்துக் கொண்டு படத்தை ஏறக்குறைய முன்னிருந்தவாறு கட்டிவைத்து நிமிர்ந்தானோ இல்லையோ அடுத்த நிமிஷம் கதவைத்திறந்து கொண்டு இராமன் என்ற பெயருடைய அவர்களது உண்மையுள்ள ஊழியனுடன் உள்ளே வந்தாள் சிந்தாமணி.

"என்ன, அரக்கு அகப்பட்டதா? இல்லாவிடினும் பாதகமில்லை. இதோ என்னிடம் சிறிது இருக்கிறது. அதுவே போதுமானது." என்று கையிலிருந்த அரக்கை விளக்கில் காட்டியவாறு குனிந்து தன் முகக்குறிகளை மறைத்து மிகவும் இயற்கையாகப் பேசும் குரலில் கூறினான் அவன். படத்தை யனுப்பும் அவசரத்திலிருந்த சிந்தாமணி அவன் குரலின் நடுக்கத்தையும் முகக்கலக்கத்தையும் கவனிக்கவில்லை. இருவருமாய்ச் சடுதியில் முத்திரைகளிட்டு இரண்டு படங்களையும் இராமனை யெடுத்துவரப் பணித்துக் கீழே சென்றார்கள்.

[216-ம் பக்கத் தொடர்ச்சி]

குணம் விளங்கித் தோன்றும்போது துன்பமும், தாமத குணம் விளங்கித் தோன்றும்போது மயக்கமும் உயிருக்கு உண்டாம். இம் முக்குணங்கள் விடயங்களிலிருந்து பிறகு அவற்றைச் சவிகற்பமாயறிந்து அவையவையாய்ப் பரிணமித்து நிற்கும் புத்தியில் விளங்குகின்றன. இவ்வாறு புத்தியின்கண் தோன்றும் சத்துவம் முதலியவற்றின் விளக்கத்தை உயிரின் அறிவு உணர்தலாகிய இன்ப துன்ப உணர்வுதான் தன்நுகர்வுக் காட்சியுணர்வு. இவ்வாறு உணரும் உயிரின் அறிவே தன் நுகர்வுக் காட்சி அளவை. இக்காட்சியில் சவிகற்பமாய் அறியப்பட்ட விடய ரூபமாய்ப் பரிணமித்து நின்ற புத்தி தத்துவம் விடயம்; வித்தியாதத்துவம் கருவி. இதுகாறும் கூறிய காட்சிகளில் வாயிற் காட்சியால் உளக்காட்சியும், உளக்காட்சியால் தன் நுகர்வுக் காட்சியும் உண்டாம் என அறிக.

மன ஒருமை (யோக) காட்சி:—இனி இவ்வாறு கருவிகளின் உதவியை நாடாது நம் அறிவைத் தடைசெய்து நிற்கும் அழுக்குக்களை (மலங்களை) எட்டுறுப்பொருகை நிலை (அட்டாங்க யோக, சமாதி) யால் கெடுத்தும் போக்கி அறிவு தூயதாய் விளங்கப் பெற்று ஒரு காலத்தில் ஓர் இடத்தில் இருந்து காலத்தும் எவ்விடத்தும் உள்ள எவ்வகைப் பட்ட விடயங்களையும் குற்றமின்றி உணர்தல் மன ஒருமைக் காட்சியாகும். இவ்வாறு காட்சி நால்வகைத்தெனக் கொள்ளுக.

கீழே உட்கார்ந்திருந்த சிந்தாமணியின் பாட்டனார் இராமனிடம் பலமுறை பத்திரம் பத்திரமென்று கூறினார். சித்திரவர்மன் தானும்போய் வருகிறேனென்று கூறிக் கரம் கூப்புகையில் அவன் விரல்களில் பச்சை வர்ணம் படிந்திருப்பதைக்கண்ட சித்தாமணி, "தாதா! அவர் படம் எழுதி முடித்து ஒருவாரமாகியும் இன்னும் கைகளிற் கறையுடன் காணப்படுகிறார். அப்படி அழியாது ஒட்டிக்கொள்ளும் நிறங்களாற் றீட்டிய அவர் சித்திரம் எப்படிப்பட்டதாயிருக்கும் யோசித்துப் பாருங்கள்." என்றாள்.

மிகுந்த கலவர மடைந்து, மிரண்ட கண்களால் தன் கையைப் பார்த்துக் கொண்டான் அவள் காதலன்.

"உன்னுடையதை விட உயர்வாயிருக்காது." என்ற சொற்கள் அவனை யறியாமல் அவன் வாயிற் புறப்பட்டன.

சிந்தாமணி கோபங் கொண்டவள் போல் நடித்தாள். "தாதா! நீங்கள் தான் கோட் சொல்லி விட்டிருக்கிறார்கள்!" என்றாள். அவள் பாட்டனார் புன்னகையுடன் சித்திரவர்மன் முகத்தைப் பார்த்தார். அவர்களிருவருடைய நோக்கமும் தன் மீதிருப்பதை யுணர்ந்து, மிகவும் பாடுபட்டுப் புன்னகையைத் தோற்றுவித்து, அவ்வாலிபன், "சரி நேரமாகிறது. நான் சென்றுவருகிறேன். சாயங்காலம் வருகிறேன்." என்று சொல்லித் தெருவில் போய்க் கொண்டிருக்கும், இராமனைத் துரிதமாய்ப் பின்பற்றிச் சென்றான்.

அவன் சென்றபின், சற்றுநேரங் கழித்துத் தன்னறைக்குச் சென்று, தன் சிநேகிதை ஒருத்திக்குக் கடிதம் எழுதுவதற்காக மேஜை யருகே உட்கார்ந்தாள் சிந்தாமணி. வழக்கமாய்ப் பூட்டப் பட்டிருக்கும் மேஜை யறை திறந்திருந்ததன்றி, பாதி அறை மேஜைக்கு முன்புறம் இழுத்தவா றிருந்தது. நாம் அவசரத்தில் மறந்து போனோமென்று நினைத்தவளாய், காகிதத்தை எடுத்துக் கையில் எழுதுகோலைப் பிடித்துத் தனக்குப் பிரியமான பச்சை மைக்கூடு இருந்த இடத்தை நோக்கினாள். அதைக் காணோம். மற்ற கறுப்பு, சிவப்பு மைக்கூடுகள் இருந்த இடத்திலிருக்க, பச்சை மைக்கூட்டைக் காணவில்லை. அது வெள்ளியாலானதும், விலையுள்ளதுமானது என்பதைத் தவிர, அன்று யாருக்குக் கடிதம் எழுத உட்கார்ந்தாளோ அந்த சிநேகிதி அவளுக்கு ஞாபகச் சின்னமாய் அளித்த அன்புப் பரிசு என்பதால் சிந்தாமணிக்கு அதைப்பற்றிய கவலை உண்டாகியது. மேஜை யறை முழுதும் நன்றாய்த் தேடினாள். புஸ்தக அலமாரி, மாடம் முதலியவைகளைச் சோதித்தாள். அறை நடுவே சிந்தியிருந்த பச்சை மையைக் கவனித்தாளாயினும், தன் வர்ணக் கோலினின்றும் சிந்தியதாக இருக்குமென்று அசட்டையாயிருந்து விட்டாள். அறை முழுதும் காணமற் போகவும், கீழே இருந்த பாட்டனாரை விசாரித்தாள்.

"நான் பார்க்கவில்லையே! உன் அறைசென்ற ஒரு மாதமாய்ப் பூட்டப்பட்டு இருக்கிறபடியால், அதில் வேலைக்காரி கூடப் போகிறதில்லையே. மற்ற ஏதாவது ஒரு மையால் உன் சிநேகிதைக்குக் கடிதம் எழுது. பிறகு தேடிக் கொள்ளலாம் இல்லாவிடில் நாளைக்குச் சாவகாசமாய் எழுதலாம் சித்திரம் எழுதி எழுதி உன் கைகளும் கண்களும் சோர்ந்திருக்கின்றன. சற்று உலவி வரலாம் வா!' என்றார் அவள் பாட்டனார்.

"இல்லை தாதா! கடந்த ஒரு மாதமாக சூடாமணிக்குக் கடிதம் எழுதவில்லை. அவள் மனம் வருந்துவாள். அதனுடன் நாம் உலாவப் போனால் அவர் வருவதாகச் சொல்லிப் போனாரே, அவர் வந்து காத்திருப்பார்." என்றாள் சிந்தாமணி.

"யார்! சித்திரவர்மனா? அவன் இனியும் ஒருமுறை வரமாட்டானென்று நினைக்கிறேன். மிகவும் களைத்தாற்போல் குதூகல மிழந்து காணப்பட்டான். நீ சூடாமணிக்குக் கடிதம் எழுதுகையில், அடுத்த வாரம் கண்காக்ஷி நடக்கும் தினம் நானும் நீயும் அவள் வீட்டில் தங்குவதாக எழுது. நமக்கு அவளைவிடத் தெரிந்தவரும் பட்டணத்தில் இல்லை. அவள் வீடும் காக்ஷி மண்டபத்திற்கு அருகாமையி லிருக்கிறது." என்றார் கிழவர்.

கிழவர் கூறியவாறு சித்திரவர்மன் அன்று சாயங்காலம் சிந்தாமணியைக் காணப்போகவில்லை. நற்குணவதியும், தன் மனைவியாக இருப்பவளுமான சிந்தாமணிக்குத்தான்செய்த தீங்கைநினைக்க, அவள் முகத்தைப் பார்க்க, அஞ்சினான். அவளுடைய மாசற்ற கண்கள் தான் செய்த துரோகத்தைக் கண்டு பிடித்து விடுமென்று நினைத்தான். ஒரு பெண்ணின் திறமை தன் வித்தையை வெல்லக்கூடியதாகஇருப்பதை நினைக்குந்தோறும், அவன் மனத்தில் ஆயிரம் ஊசிகள் ஊன்றியது போலிருந்தது. அவளை மணந்து என்ன பயன்? அவளுடைய பெயருக்கும், திறமைக்கும் முன் இவனுடையது பிரகாசிக்காது. கேவலம் ஒரு பெண்ணிற்கு, அதிலும் கொண்ட மனைவிக்குத் தாழ்ந்தவன்மையுட னிருப்பதைவிட இறப்பதுமேல் என்று எண்ணினான். இத்தனைத் துன்பங்களிடையில், அவள் படத்தைப் பாழ் செய்து பரிசடைய வொட்டாமற் செய்து விட்டோமென்று தேன் போன்ற ஒரு நினைவு அடிக்கடி வர, அவன் பொறாமையுற்ற உள்ளம் சந்தோஷமடைந்தது. எப்பொழுது அவனது அன்புக்கு மேற்பட்ட அழுக்காறு அவன் மனத்திற் புகுந்ததோ, அப்பொழுதே சித்திரவர்மனுக்குச் சிந்தாமணியிட மிருந்த நேசம் இருக்க இடமின்றி அகன்றுவிட்டது. சிந்தாமணி மறுநாள் எப்படித் தன் வெள்ளி அன்னத்தைத் தேட மறந்தாளோ, அப்படியே சித்திரவர்மனும் தன் குற்றத்தை வெளிப்படுத்தக் கூடிய கெட்ட ருஜுவாகிய அன்னத்தையும், மைதோய்ந்த கைக்குட்டையையும் சரியான இடத்தில் ஒளிக்க மறந்துபோனான்.

III

"உன்னுடையது முதற்பரிசுப் படங்களில் ஒன்றாகத்தா னிருக்கவேண்டும்! இங்கு எங்கும் காணப்படவில்லை."



"ஒரே அடியாய் மேலே ஏறி விடுகிறாயே! நூறு ரூபாய்ப் பரிசு கிடைப்பதே அரிது. முதற் பரிசுக்கு இந்தியா முழுவதும் போட்டியாக நின்று ஆயிரக் கணக்கில் சித்திரங்கள் வந்து குவிந்திருக்கின்றன. அத்தனைப் பெயரில், சிறியவளாகிய என்னைத் தேர்ந்தெடுப்பது கூடுமோ? அவருக்குக் கிடைக்கலாம். கைதேர்ந்த ஓவியர்; கண்கண்டதைத் கையாலமைக்கும் புத்திமான்!"

"அதற்குள் 'அவர்' 'அவர்' என்று விளிக்கிறாயே? இன்னும் கலியாணம் ஆகவில்லை. பெயர் கூறினால் என்ன மோசம்?" என்று சிந்தாமணியை அவள் தோழி சூடாமணி கேட்க இருவரும் நகைத்தனர்.

அன்றைய தினம் யாவரும் ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அகில இந்திய சித்திர விருத்தி சமாஜத்தின் சித்திரக்காக்ஷித் திருவிழவிற்கென்று குறிக்கப்பட்ட சுதினமாதலால், மாலை மூன்று மணிக்கே வந்துவிட்டனர் இவ்விரு தோழியரும். சித்திரவர்மனும், சிந்தாமணியின் பாட்டனாரும் இன்னொரு புறமிருந்த சித்திரங்களைக் காணச் சென்றனர். சபை நடுவே யிருந்த பரிசுப்படங்களைச் சுற்றி ஜனங்கள் குழுமியிருந்தனராதலின், இவ்விருமங்கையரும் அங்கே செல்லாமல், கூட்டமில்லாத இடங்களிலுள்ள சித்திரங்களைப் பார்வையிட்டுக்கொண்டும் அவற்றின் குணதோஷங்களைப் பேசிக்கொண்டு மிருந்தனர்.

அச்சிறந்த கண் காக்ஷியைக் கண்டு மகிழ, அன்று சென்னையிலும், பிறவூர்களிலுமிருந்து பற்பல சித்திரப் பிரியர்களும், தொழிலாளிகளும், மாணவர்களும், ஏனையோரும் கூட்டங்கூட்டமாய் வந்துகொண்டே யிருந்தனர். விதவிதமான கற்பனா சக்தியுடைய பல்வேறு சித்திரக்காரர்களால் எழுதப்பெற்ற அழகிய படங்களா லலங்கரிக்கப்பட்ட அக்காக்ஷி மண்டபம் தேவேந்திர சபை போலும் அற்புதமாய் விளங்கியது. முதனாளே தேர்ந்த பரீக்ஷகர்கள் பதின்மரால் பரிசிலுக்குரிய படங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன வென்றும், மாலை நான்கு மணிக்குப் போட்டியில் வென்றவர்களுக்குப் பரிசு கொடுக்கப்போவதால், படம் எழுதியவர்களும் சபையோரும் அதுவரை இருந்து போகவேண்டு மென்றும் காரியதரிசியானவர் சபையோரைக் கேட்டுக் கொண்டார்.

சிந்தாமணி தன் படமும் பரிசுப்படங்களிருக்கும் மண்டபத்தில்தா னிருக்கவேண்டும் என்று தெரிந்தவளாய் மனவெழுச்சியும் குதூகலமும் முகத்தில் விளங்க வெகு உற்சாகமாய்ப்பேசி நகைத்துக்கொண் டிருந்தாள். சித்திரவர்மன் அவளுக்கு முற்றிலும் மாறாகக் குவிந்த முகமும் யோசித்த பார்வையு முள்ளவனாய் கேட்பனவற்றிற்கு பதிலுரைக்கவும் இஷ்டமில்லாதவனாய்க் காணப்பட்டான். அவனுடைய முகவாட்டத்தைக் கண்ட சிந்தாமணி அவன் தன் படத்தைப்பற்றிக் கவலை கொண்டிருப்பதாக நினைத்து ஒன்றும் கேட்கவில்லை. சிந்தாமணியின் பாட்டனார் தம் பெயர்த்தி முதற்பரிசு வாங்குவது நிச்சயமென்று குழந்தைபோற் களித்துக் கூத்தாடிக்கொண் டிருந்தார். இறுதியில் மணி நான்கடித்தது. மணியோசை அடங்குமுன் இதுவரை மூடியிருந்த ஒரு கதவைத் திறந்துகொண்டு சபைக்காரியதரிசியும் பரிசளிக்க நியமனமான கனவானும் கூட்டத்தின் முன் நின்று வந்தனமளித்துத் தமது இருக்கைகளில் அமர்ந்தனர். சபை முழுதும் சந்தடியடங்கி மேல் நடப்பவற்றை ஆவலுடன் கவனித்தது. பிறகு காரியதரிசியானவர் எழுந்து, அகில இந்திய சித்திர விருத்திசமாஜத்தின் நோக்கத்தையும் சித்திர அபிவிருத்தியை முன்னிட்டு ஏற்படுத்தியுள்ள அப்பரிசளிப்புக்கள் ஒவ்வொரு வருஷமும் நடத்தப்படுமென்றும் கூறிய பிறகு பரீக்ஷகர்கள் பத்துப்பேராலும் ஒரு மனதாய்த் தேர்ந்தெடுக்கப்பெற்ற படங்களை எழுதியவர்கள் பெயரை வரிசையாய்க் குறிப்பிடலானார். அச்சமயம் அங்குக் குழுமியிருந்த ஓவியர்களின் நெஞ்சம் சந்தோஷமும் துக்கமும் அடைந்து மகிழ்ச்சி ஏமாற்றம் முதலிய பலவித உணர்ச்சிகளால் அலைக்கப்பட்டது.

"முதன் மூன்று பரிசுகளுக்குத் தகுதியானவையாய் இரண்டு படங்கள்தான் இருந்தபடியால் மூன்றாவது ஆயிரரூபாய் ஜயித்த படங்களை யெழுதிய ஸ்ரீமதி சிந்தாமணிக்கும் ஸ்ரீமான் இந்திரவர்மாவிற்கும் ஆளுக்குப் பாதியாய்ப் பகிர்ந்து கொடுக்கப்படும்." என்று காரியதரிசியார் கூறவும் சபையோர் எல்லாம் சமுத்திரம்போல் ஆரவாரித்துக் கைகொட்டினர். சிந்தாமணி எதிர்பாராத இப்பரிசு பெற்றதனாலுண்டான சந்தோஷ மேலீட்டால் தன் தோழியின் மீது சாய்ந்து கொண்டாள். சித்திரவர்மனின் முகம் அனலிலிட்ட புஷ்பம்போல் வாடி வதங்கிப் போயிற்று. அடுத்தப் பத்துப் பரிசு பெற்றவர்களில் ஒருவனாகிய ஸ்ரீமான் சித்திரவர்மனின் பெயரைக் காரியதரிசி சொல்லியபொழுது அவனைத் தெரிந்தவரும் நண்பரும் சிந்தாமணியும் அவனிருந்த விடத்தைத் திரும்பிப்பார்க்க அவனை எங்கும் பார்க்கமுடியவில்லை.

சிந்தாமணியின் பெயரைக்கேட்டதும் தனக்கு முதற்பரிசு இல்லையென்று அறிந்து சித்திரவர்மன் தான் செய்த சூழ்ச்சி நிறைவேறாமல் எப்படியும் அவளுக்கே முதற்பரிசு வந்ததற்காக மனம் பொங்கியவனாய் அங்கு நின்று சிந்தாமணிக்குப் பரிசளிக்கும் வைபவத்தையும், அவள் கீர்த்தியையும் காணப்பொறாமல், ஒருவரும் கவனியாமல், மெல்லென மண்டபத்தை விட்டு வெளியேறிவிட்டான். பொறாமைப்பேய் பிடித்த அவன் கண்களுக்கு உலகம் முழுதும் தன்னை ஏளனஞ்செய்வதாய்த் தோன்றியது. பெண்கள் எந்த வித்தையும் கற்று வெளிவரா திருக்கும்படியான சட்டமொன்றிருக்கக்கூடாதா என்று கோரினான். சிந்தாமணியின் மீதிருந்த அன்பு மாறி பகையுற்றான். அவள் முகத்தைக் காணவும் வெறுத்தான். பொறாமையை விடக் கொடிய விஷம் உலகிலில்லை.

(தொடரும்)

# செங்குந்த யாத்திரைவாசி

## செங்குந்தர் வரலாறு

(தொகுதி 4, 174-வது பக்கத் தொடர்ச்சி)

### இரண்டாம் நாள் கூட்டம்

அன்றிரவு போஜனமானதும் யானும் என் சீடனாகிய சிறுவனும் முத்து முதலியார் வீட்டு மாடி மேல் கொஞ்சநேரம் பேசிக்கொண்டிருந்து பிறகு படுத்துக்கொண்டோம். ஐந்தூர் நாட்டாண்மைக்காரர்களும் கீழே கூடி வெகுநேரம் பேசிக்கொண்டிருந்தார்கள். யான் காலையில் எழுந்து நித்தியக் கடன்களை முடித்துக்கொண்டு சரியாக 8-மணிக்குப் பலர் சூழ்ந்துவர கோயிலுக்குச் சென்றேன். அங்குத் திரளான ஜனங்கள் எங்களை எதிர்பார்த்திருந்தார்கள். யான் கரகோஷத்தினிடையே உட்கார்ந்தேன். முத்து முதலியார் எழுந்து 'கனவான்களே! சுவாமிகள் நாளைக்குப் புறப்பட உத்தேசித்திருக்கிறார்கள். இன்னும் ஆகவேண்டிய முக்கியமான வேலைகள் இருக்கின்றன. ஆகையால் கேள்வி கேட்க விரும்புவோர் கேட்கலாம். அதிக நேரம் தரமுடியாது. சீக்கிரம் முடித்துக்கொள்ள வேண்டும்' என்றார்.

உடனே பலர் தனித்தனியாக மதசம்பந்தமான பல கேள்விகள் கேட்டார்கள். அவர்கள் திருப்தியடையுமாறு பதிலுரைத்தேன். விரிவிற்கஞ்சி அவற்றை இங்கு விவரிக்கவில்லை. ஆயினும் ஒன்றை மாத்திரம் கூறுகிறேன். அதாவது ஒரு வயோதிகர் எழுந்து 'சுவாமிகளே! "புகை யெட்டும் போக்கெட்டும்" என்னும் அப்பர் சுவாமிகளது திருவாரூர் தேவாரத்திற்குப் பொருள் தங்களிடம் கேட்க அவாவுகின்றேன். பலர் பலவாறு கூறுகின்றனர். செங்குந்த மித்திரனிலும் இக்கேள்வி பிரசுரிக்கப்பெற்றது. தக்க பதிலைக் காணோம்' என்றார். யான் முத்து முதலியாரை நோக்கி 'இக்கேள்விக்குப் பதில் சுருக்கமாகவே கூறுகிறேன். நேரமின்மையால்' என்று சொன்னேன். முத்து முதலியார் 'சுவாமிகள் சம்மதப்படியே செய்யலாம்' என்றார். பின்னர் யான் 'அன்பர்களே! இது ஒரு விவாதமான விஷயம். பலவாறு பொருள் கூறுகின்றனர். வெகுகாலமாக இக்கேள்வி கேட்கப்பட்டு வருகிறது. அடிகளுடைய தேவாரத்திற்கு யான் கூறுவதுதான் பொருளென்றும் சொல்லிவிடமுடியாது. என் அறிவிற் கெட்டினதைச் சொல்லுகிறேன். யான் இப்போது பதவுரை கூறவில்லை. முடிவை மாத்திரம் காட்டிவிடுகிறேன். 'பூதங்கள் எட்டும்' என்றவிடத்து நாம் கண்டதும் கேட்டதும் ஐந்து பூதங்கள்தானே? பொறிகளும் ஐந்துதானே? ஆயினும் ஆன்றோர் மொழிக்குக் குற்றம் சொல்லவும் கூடாது. பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் ஆகிய ஐம்பூதங்களோடு வேறு மூன்று பொருள்களைச்சேர்த்து எட்டாக்கி விடுவோம். ஆதாரம் கேட்டால் மாறுபட்ட அபிப்பிராயங்களைக் கூறும் பல ஆகமங்களும் புராணங்களும் இருக்கின்றனவாகையால் எதையாவது எடுத்து ஆதாரம் காட்டிவிடலாம் என நினைக்கின்றனர் சிலர். இத்தகைய சமாதானம் பொருந்தாது என்பதும் இதனால் ஆளுடைய அடிகள் திருவாய்மலர்ந்தருளிய தேவாரத்திற்கும் யாதொரு மேன்மையில்லை யென்பதும் எனது தாழ்மையான அபிப்பிராயம். ஏனெனில் அடிகள் வேறிடங்களில் பூதங்கள் பத்தும் பூதங்கள் நான்கும் எனக்கூறியிருந்தாலும் கூட அவற்றிற்கும் பத்தென்றவிடத்து பிருதிவியாதி ஐந்தினோடு ஐந்துகூட்டியும் நான்கென்ற விடத்து பூதங்கள் ஐந்துள் ஒன்றாகிய ஆகாயத்தை நீக்கியும் பொருள் கூறி யாதாமொரு ஆகமத்தையோ அல்லது புராணத்தையோ ஆதாரமாகக் காட்ட முயல்வர். இவையாவும் பொருத்தமுடையனவாகா.

'இத்தேவாரத்தில் "எட்டும்" எனவரும் பல சொற்களுள் ஈற்றிலுள்ள ஒன்றே எண்ணைக்குறிப்பதாகும். (எட்டு+உம்.) ஏனைய வனைத்தும் வினை முற்றுக்களாம். முடித்துக்காட்டுகிறேன் கவனியுங்கள். புகை, போக்கு, பூதங்கள், பொறிகள் முதலியவை தெரித்த நாள் (காலம்) இது வென்று ஒருவாறு அடியேனுக்கு எட்டும். ஆனால் தேவரீர் எட்டுத் திசைகளையும் தெரிப்பதற்கு முன்னோ அல்லது பின்னோ திருவாரூரைக் கோயிலாகக் கொண்ட நாள் (காலம்) என்பதுதான் அடியேனுக்கு எட்டவில்லை. அதாவது திருவாரூரைக் கோயிலாக் கொண்டது இன்னகாலமென்று வரையறுத்துக்கூற இயலாதவாறு நெடுங்காலத்திற்கு முன்னரே எம்போலியரை ஆட்கொள்ளுமாறு ஆங்குக் கோயில்கொண் டெழுந்தருளினீர் என்பதே அதன் கருத்தாகும். "எட்டும்" என்னும் சொல்லை இரண்டு பொருள்படுமாறு பிரயோகித்தது ஈண்டு கவனிக்கத் தக்கது. யாவரும் எக்காலத்தும் ஐந்தென்றும் ஏழென்றும் வரையறுத்துள்ளவற்றை எட்டென்று கூறி வரம்பு கடந்து சென்று மக்களை மயங்கவைக்கும் குற்றத்தை அடிகள் மேல் ஏற்றுதல் தகுதியன்று. இப்பதிகத்தில் வைத்துக்கூறிய வாகீசப்பெருந்தகையாரது



கருத்தையே திருத்தொண்டர் புராணம் இயற்றியருளிய சேக்கிழார் சுவாமிகள் திருவாரூர் சிறப்புக் கூறும் அவசரத்தில் சொன்ன நாட்டைத் "தொன்மையின் மிக்கது" எனக்கூறிப்போந்தார்.' எனச் சொல்லிமுடித்தேன்.

முத்து முதலியார் எழுந்து 'கடாக்களுக்குரிய நேரம் முடிவுபெற்றது. இனி நடக்கவேண்டிய காரியங்களைக் கவனிக்கவேண்டும். நமது ஐந்தூர் நாட்டில் சென்ற வருஷமாகக் பல கக்ஷிகள் ஏற்பட்டு நம்மை பலவிதமான கஷ்டங்களுக்கும் நஷ்டங்களுக்கும் உள்ளாக்கி வருகின்றன என்பதை உங்களுக்கு நான் விவரித்துச் சொல்லவேண்டியதே இல்லை. காரணத்தையும் உணர்வீர்கள். அவற்றையெல்லாம் இப்போது சுவாமிகள் சந்நிதானத்தில் பைசல் செய்து நம்நாட்டில் அமைதியையும் ஒற்றுமையையும் உண்டாக்கி க்ஷேமமடைவோமாக. ஐந்தூர் நாட்டான்மைக்காரர்களும் முக்கியஸ்தர்களும் கூடி யோசித்து ஒரு முடிவுக்கு வந்திருக்கிறோம். அது சம்பந்தமாக நமது சுவாமிகளுக்கு ஒரு பத்திரம் வாசித்துக் கொடுக்க உத்தேசித்திருக்கிறோம். அதில் சுவாமிகளது நல்வரவால் நாம் எய்திய பயனைப்பற்றியும் நமக்குள் கக்ஷிகள் ஏற்பட்ட காரணத்தைப்பற்றியும் கக்ஷிகளால் உண்டான தீமையைப்பற்றியும் கூறி நம்மிடையே அமையும் ஒற்றுமையையும் என்றும் நிலைத்திருக்கத்தக்க ஏற்பாடுகளைச் செய்து கொடுக்குமாறு நாம் கேட்டுக்கொள்வதாகக்குறிக்கப்பெற்றிருக்கிறது. அதை இப்போது வாசிக்கிறேன்.' எனச் சொல்லிப் பத்திரத்தைக் கையில் எடுத்தார். அப்போது ஒருவர் எழுந்து 'ஐயா ஐஞ்சூர் நாட்டாமக்காரே! நில்லுங்கள். அது எனக்குச் சம்மதிக்கயில்லை; நா ஒத்துக்கோமாட்டேன். பழங்காலைத் துக்காதே. எல்லா சங்கதியும் பொறுமையா ஆகட்டும். ஒண்ணும் வெள்ளங்கொண்டும் போகல்லே!' என்று வெகு அவசரமாகப் பேசினார். முத்து முதலியார் 'பொறுங்கள், அவசரப்படாதீர்கள். நாமெல்லாம் கூடி இரண்டு நாட்களாக யோசித்து முடிவு கட்டியதுதானே. நான் புதிதாக ஒன்றும் சொல்லவில்லையே' என்றார். 'அதெல்லா நா ஒப்புக்கோமாட்டேன். கூடவே கூடாது. கக்ஷி கக்ஷிதான் சாமிக்குக் கொறைவு செய்ததாக நெனைக்க வேண்டாம். இதோ கும்பிடு போடுகிறேன்; மரியாதை செய்கிறேன். எங்கநாட்டு கக்ஷியிது. இது ஒரு பெரிய கக்ஷியா! எங்கப்பா காலத்திலே 50 வருஷம் மும்முரமா கக்ஷியிருந்தது. எங்கபாட்டனார் காலத்திலே கக்ஷியில் எத்தினியோ மண்டை ஒடைஞ்சுது. இது என்ன கக்ஷி. கக்ஷி கக்ஷிதான்.' என்றார் ஆக்ஷேபித்தவர். அவர் சொல்லி முடிக்குமுன் அவரைச் சூழ்ந்திருந்த சிலர் ஆவேசத்துடன் எழுந்து 'ஆமாங் கூடாதுதான். கக்ஷி கக்ஷிதான் அதை இங்கே பேசவேண்டாம்.........." பின்னர் பலரும் பெருங் கூச்சலிட்டுப் பேசியதால் என்ன பேசினார்கள் என்று எனக்கு விளங்கவில்லை. கூட்டத்தில் ஒரே கூச்சலாக இருந்தது. 5 நிமிஷம் வரையில் அமைதியாக இருந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தேன். சத்தம் அடங்கியபாடில்லை. பிறகு யான் எழுந்து உரத்த குரலில் 'அன்பிற்குரிய சகோதரர்களே!' என்று கத்தினேன். அமைதி உடனே உண்டாயிற்று. ஆங்காங்குச் சண்டையிடுவோரைப்போல் எழுந்து நின்று பேசிக்கொண்டிருந்தவர்களும் உட்கார்ந்து கொண்டார்கள். அப்போது யான் 'என்னை அவமானம் செய்யவா இங்கு ஆடம்பரமான ஊர்வலத்தோடு கொண்டு வந்தீர்கள்? பெரியோர்கள் நிறைந்த சபையில் நடந்து கொள்ளும் முறையை நீங்கள் அறியவில்லையே. உங்கள் நாட்டுக் கூட்டம் இவ்வளவு ஒழுங்காகத்தானா நடப்பது வழக்கம்? கிணற்றுத்தவளைகளாகிய நீங்கள் ஏனைய செங்குந்தர் நாட்டுக் கூட்டங்களைக் கண்டதே இல்லை போலிருக்கிறது. தலைவர் உத்தரவின்றி ஒழுங்கற்ற முறையில் பேசுவோர்க்குத் தண்டனை யில்லைபோலும். இந்நாட்டில் அப்படியாயின் செங்குந்தர்களென்றும், ஒரு நாட்டைச் சேர்ந்தவர்கள் என்றும் சொல்லிக் கொள்வதற்கு உங்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது? பிற்போக்கடைந்திருக்கிற இக்காலத்திலும்கூட நாட்டுக் கூட்டங்களில் இவ்வளவு காலித்தனமாக நடந்து கொள்ளும் செங்குந்தர்களை இந்நாட்டில் தவிர எந்நாட்டிலும் யான் கண்டதே யில்லை. மற்றைய நாட்டுச் செங்குந்தர் இதை யறிந்தால் உங்களை எவ்வளவு கேவலமாக மதிப்பார்கள்?' எனக்கோபாக்கினி காட்டிப் பேசினேன். உடனே ஆக்ஷேபித்தவர் உட்பட விரைந்து வந்து என்னெதிரில் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி, 'சுவாமிகளே! மன்னித்தருள வேண்டும்; அறியாமையால் செய்த பிழையாகும். சுவாமிகளை அவமதித்ததாகக் கொள்ளலாகாது, கடந்த விஷயங்களைத் தனியே சொல்லுகிறோம்.' எனச் சமாதானம் சொன்னார்கள். முத்து முதலியாரும் சிறுவனும் என்னருகே வந்து நடந்த விஷயங்களைப் பூராகவும் சொன்னார்கள். அதைக் கேட்ட யான் சபையோரை நோக்கிச் 'சகோதரர்களே! உங்கள் நாட்டு விவகாரம் இன்றைக்கு முடிவதாக எனக்குத் தோன்றவில்லை. அதற்காக நான் இங்கு இருக்க முடியாது. என்னை வைத்துக்கொண்டு அதை முடிவு செய்ய வேண்டுமென்ற விருப்பம் உங்களுக்கிருக்குமாயின் எனக்குத் தெரிவியுங்கள். என் விலாசம் முத்து முதலியாருக்குத் தெரியும். இன்றிரவு புறப்படுகிறேன். மற்றொரு சமயம் நாட்டுக் கூட்டங்களை நடத்த வேண்டிய முறைகளைப்பற்றிச் சந்தர்ப்பம் வாய்ப்பின் தெளிவாகக் கூறுவேன். நீங்கள் அனைவரும் என்னிடத்துக் காட்டிய அன்பிற்காக யான் என்றும் நன்றி செலுத்தக் கடமைப்பட் டிருக்கிறேன்.' எனச் சொல்லி முடித்தேன். முத்து முதலியார் கூட்டம் கலைய உத்தரவு கொடுத்தாராயினும் என்னை மறுபடியும் ஊர்வலமாக அழைத்துச் செல்ல அனுமதிக்கிற வரையில் கூட்டம் கலையவில்லை. முதல் நாளைப் போலவே வெகு ஆடம்

## நிருபங்கள்

### பள்ளிக்கூடத்திலும் ஜாதி வித்தியாசமா

இந்தியாவின் பூர்வீகக் குடிகளாகிய திராவிடரென்னும் நாம் லக்ஷணுதி முதலிய வாய்ந்த காகேசிய வினத்தைச் சேர்ந்தவராயிருந்தும், இடைப்போந்த எக்காரணத்தாலோ கீழ்மேல் என்னும் எண்ணிறந்த ஜாதி பேதத் தடுமாற்ற நிலையடைந்தோம். அதிலும் நம் தென்னிந்தியாவில் தீண்டாமை, செல்லாமை, சொல்லாமை, நில்லாமை, கொள்ளாமை, பாராமை, சேராமை, உண்ணுமை, எண்ணுமை, அணியாமை, பணியாமை முதலிய பல்லாமைக் கூட்டமாய்ப் பொல்லாமை ஜாதிபேதத் தாண்டவந் தலையெடுத் தாடுகின்றது. அப்பேதங்கள் பல மக்களின் பரிதாபத்துவமாயும், ஒரு வகையினரின் நன்மையின் பொருட்டும் ஆக்கப்பட்டதென்பது வெள்ளிடை.

அவை, "நாற்பாற் குலத்தில் மேற்பாலென்றும், கீழ்ப்பாலென்றும் பெரும் பிரிவாயும்; ஐயர், ஐயங்கார், கவுண்டர், முதலியார், பிள்ளை, நாயக்கர், செட்டியார், நாடார், பள்ளுப்பறை முதலிய உட்பிரிவாயும்; அவ்வவற்றிற்கு வேண்டிய புராணங்களும் நெடுங்காலமாய் அடக்கு முறையால் கையாண்டு வந்தன; வருகின்றன.

ஆனல், அப்பேதங்கள், தத்தம் சுதந்தரம்பூண்ட தொழில் வாழ்க்கையின்கண் முறை கரையப் பயின்று வந்த போதிலும்; மக்களாய்ப் பிறந்த எல்லோருக்கும் "கற்ருேரைத் தலை நிலத்தில் வைக்கப்படும்" என ஒப்ப முடிந்த சமரசமான கல்விப் பொருளை யீட்டும் பள்ளிக் கூடத்திலும் ஜாதி வித்தியாசமா?

அந்தோ! வேலியே பயிரை மேய்வதுபோல் பேதமற்ற கல்விச்சாலையே பேத முண்டாக்கின் மற்றெங்ஙனம் சமரசம் பூத்தோங்கும். சர்க்கார் உதவி பெற்றும் அவராலும் நடத்தப்படும் நம் நாட்டுப் பாடசாலைகளில் வைத்திருக்கும் பிள்ளைகள் பதிவு முதலிய எல்லாப்புத்தகங்களிலும், மாத, வருஷாந்தரக் கணக்கு முதலிய எல்லாப் பாரங்களிலும், "தாழ்ந்த உயர்ந்த ஜாதி" என்னும் வகுப்பு வாரியாய் எழுதப்பட்டு வருகின்றன.

அதில் பிராமணர் முதலிய பிள்ளைகள் உயர்ந்த என்பதிலும், மற்றைப் பிள்ளைகள் தாழ்ந்த என்பதிலும் அமையும். அப்பிரிவில், நங்குலக் குழந்தைகள் தாழ்ந்த ஜாதி என்று கருதப்பட்டு தாழ்ந்த என்னும் வகுப்பு வாரியில் எழுதப்பட்டு வருகின்றனர்.

உயர்ந்த எனக் கருதப்படும் பிராமணர் முதலியவர்களில் நாம் எந்த விதத்தில் தாழ்ந்தவர்கள் என்பதைக் கவனிப்போம்:—

(1) பிறப்பில்:—எல்லாம்வல்ல முழுமுதற் கடவுளாகிய சிவபெருமான் திருக்குமாரர்களாய், குன்றுதோறுடுங் குமரனுக் கிளவல்களாய் வந்த நவவீரர் மரபினில் வந்த நாம், அப்பெருமான் ஏவலைப் பெற்ற பிரமாவின் முக முதலியதில் வந்தோரினும் எவ்விதம் தாழ்ந்தோர்?

(2) ஒழுக்கத்தில் :—அன்றுதித்த ஆதிகாலந் தொட்டே கடவுள் ஒழுக்கம் பூராவுங் கைக்கொண்ட "கைக்கோள"ரென வைதீகம் நிறைந்த வீர சைவர்களாகிய நாம், வருவாய் போலொழுகும் மற்றையோரினும் எவ்விதம் தாழ்ந்தோர்?

(3) வீரத்தில் :—மட்டில்லாச் சூரத்தனம் வாய்ந்த சூரபன்மனுதியரை வென்றதும், உலக மாதாவருளிய ஈட்டியைப் படைக்கலமாகக் கொண்டதுமே நமது வீரத்துவத்தைக் காட்ட, படைக்கலம் பயிலாப் பான்மையோரினும் எவ்விதம் தாழ்ந்தோர்?

(4) தகுதியில் :—அரசுரிமை தாங்கி முன் தொண்டைநாடு முதலியதை ஆண்டதும், நங்குலக் கூத்தர் அரசர்க்கரசராய் " ஆடுங் கடைமணி நாவசையாமல் "........அகிலத்தை யாண்டதும், தற்போது புதுவை திரு. ஆ. வே. முத்தையா முதலியார் முதலானவர்கள் இராஜப் பிரதிநிதியாய் ஆண்டு வருவதும் இருக்க, எவ்விதம் தாழ்ந்தோர்?

(5) கல்வியில்:—முற்கால், கூத்தர்பிரான் முதலியோர் கலைக்கடலை யுண்டு கவிச் சக்ர வர்த்தியாய்



இருந்ததும், இக்கால் எத்தனையோ நங்குலத் தலைவர்கள் பி. ஏ., எம். ஏ., எல். டி., பி. எல். முதலிய பட்டம் பெற்றிருப்பதும் இருக்க எவ்விதம் தாழ்ந்தோர்?

(6) செல்வத்தில்:—உயர் தொழிலாகிய சுதந்தரச் செல்வத்தையும்; வர்த்தக முதலிய பண்டமாற்றுச் செல்வத்திலும் நங்குலத்தவர் வெளிநாட்டு வியாபாரம் புரிந்துவர, எவ்விதம் தாழ்ந்தோர்?

(7) தொழிலில்:-நெய்யுந் தொழிலுக்கு நிகரில்லையென்றும், சுயராச்சியத்திற்கு முதற் காரணமாய் மகாத்மா கைக்கொண்டமான, மானத்தைக் காத்தழகுண்டாக்கும் நெசவுத் தொழிலையே முக்கியமாயும் ஒரு சார் வியாபாரத்தையும் கொண்டொழுகும் நாம் எவ்விதம் தாழ்ந்தோர்?

(8) கொடையில்:—சுகாதாரத்திற்கு அங்கமாகிய உணவு, உடையில் இரண்டதாகிய உடை கொடுக்கும் கொடையே பெருங்கொடை யாயிருக்க எவ்விதம் தாழ்ந்தோர்?

(9) தொகையில்:—எண்ணிறந்த ஜாதியுள்ள தென்னிந்தியாவில் ஆறு லக்ஷம் பேர்களிருக்க எவ்விதம் தாழ்ந்தோர்.

இன்னும் அழகு ஆண்மை முதலிய பல் வகையினும் உயர்ந்தோ ரென்போருக்குச் சமமாகவே நாமிருக்க! எக்காரணத்தால் நம்மை தாழ்ந்த வகுப்பாரென்று குறிப்பிட்டு வருகிறது. இவ்விதமான காரணமற்ற கொடிய வழக்கத்தை நமது 'மித்திரன்' போக்க மாட்டானு?

ஒவ்வொரு வகுப்பினரும் தத்தம் மகாநாடு கூடிச் சீர்திருத்தம் செய்துவர நங்குலத்தவர் ஈரோட்டில் கூடிய முதலாவது மகா நாட்டிலேயே நிறைவேறிய தீர்மானங்களில் முதலாவதிதன்ருே?

பிற பிள்ளைகள் பாடசாலையில் புகுந்தவுடனே உயர்ந்து கொண்டே போனல், நமது பிள்ளைகள் தாழ்ந்து கொண்டே போகிருர்களா? மற்றெவ்விதம் தாழ்ந்தோர்? அடடா! யார் படித்து விர்த்தியடைந்தாலும், அறிவும் ஆற்றலும் ஒன்றே. ஒப்பநாடிச் சமமான உத்யோகமும் கொடுக்கப்படுகிறது. அப்படி யிருக்கக் காரணமில்லாக் காரியமாகிய இவ் வேறுபாட்டை, இன்னும் புனைந்திருப்பதென்னே?

நங்குலப்பெருமை முதலியவற்றைப் படித்த (கேட்ட) நங்குலச்சிருர்கள் இவ்விதமான மானக் கேட்டைக் (தங்களைத் தாழ்ந்த என்னும் வகுப்பில் எழுதியிருப்பதை) கண்டால் மறுபடியும் பாடசாலைக்குப் போவார்களா? அப்போதே அகலாமல் இருப்பார்களா? நம்மைக் கேட்டால் நாம் சொல்லும் பதிலென்ன?

கல்வி யதிகாரிகளாயும், உபாத்தியாயர்களாயும் இருக்கும் நங்குலத்தவர்கள் இதைக் கவனிக்காததென்னே!

தாழ்ந்த, உயர்ந்த என்னும் ஜாதிபேதப் பாழிருளை அடியோடு மாற்றுப்படுத்த அறிவென்னும் ஞானசூரியன் தோன்றித் துலங்கும் இக்காலத்தில், இக்கொடிய பாழிருள் பாடசாலையை விட்டகலாத தென்னே! கல்வி யிலாகா அதிகாரிகள் முக்கியம் இதைக் கவனிப்பார்களாக. நமது மித்திரனுசிரியர் தமது முன்னுரையில் இதைப் பற்றி யெழுதி, அடுத்த மித்திரனில் 'அக்கலத்தை எடுத்து விட்டார்கள்.' எனப் பிரசுரிப்பார் என எண்ணுகிறேன். சமரசம் பூத்தோங்கும் இக்காலத்தில் வேறு எத்துறையில் இருந்தாலும் முதலாவதாய்க் கற்ருேர்க்குச் சமத்துவத்தைக் கொடுக்கும் கல்விக் கழகத்தில் கீழ் மேல் என்னும் ஜாதி பேதமில்லா திருக்கும்படி செய்ய ஒவ்வொரு வகுப்பினரும் அவ்வம் மித்திரனும் இன்றே இப்போதே முன் வருவார்களென நம்புகிறேன்.

மெய்த்த திருவள்ளுவனுர் வென்றுயர்ந்தார்
கல்வி நலம்
துய்த்த சங்கத்தார்தாழ்ந்தார் சோமேசா—
உய்த்தறியின்
மேற்பிறந்தா ராயினும் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்ருரனைத்திலர் பாடு. சிவஞான முனிவர்.—

ஆசையுடன் கற்குநிலை யத்தினிலே ஜாதி வித்தி
யாசமதைப் போக்கியினி யாவர்களு-மே சமமாய்ப்
பட்டாங்க மாயிருக்கப் பார்த்திடுநற் சீர்திருத்தம்
கட்டாயங் கல்வியிலா கா.

A. M. குழந்தை.

குறிப்பு:—இந் நிருபாது வியாசம் உண்மைக் குலாபிமானிகள் மனதை உருகச் செய்யு மென்பதை எவரும் மறுக்க இயலாது. கல்வியிலும் பொருளாதார நிலையிலும் தாழ்ந்த நிலையிலுள்ள வகுப்பினருள் ஒருவராக நாம் மதிக்கப்பட்டு வருதல் உண்மைக்கு மாருனதாக இல்லாவிடினும், நமது சுயமதிப்புக்குப் பங்கம் விளைப்பதென்ருகவே இருக்கின்றது. எனினும், கல்வியிலாகாவின் ஒத்தாசை யில்லாவிடின் பல சூக்ஷ்ம புத்தி யுள்ள செங்குந்த இளைஞர் உயர்தரக் கல்வியை நாடுவது அரிதாய்விடும். ஆனல் ஒவ்வொரு கிராமத்திலும் நம்மவர் கல்வி யபிவிருத்திக் கெனப் பொதுப் பணங்கள் திரட்டி யோக்கியமானவர்கள் மேல் ப்ார்வையில் உபகாரச் சம்பள முதலியன அளித்து வரின் நாம் நமது சாதியின் சுய மதிப்பைக் காப்பாற்றிக் கொள்ளலாம். ஆனல் தற்போதைய நிலையில் நமது தலைச் சங்கத்தின் மேற் பார்வையால் திரட்டிப் பரிபாலிக்க முயலும் கல்வி நிதியே பகீரதப் பிரயத்தினமாக இருக்கும் போது, கிராமங்கள் தோறும் இத்தகைய நிதிகள் ஏற்படுவது இந்தத் தலைமுறையில் நடந்தேறக் கூடிய தொன்ருக இருக்குமென எமக்கு நம்பிக்கையில்லை. ஆனல் நமது நிருபரைப் போன்ற வீராவேச மிக்க இளஞ் சிங்கங்கள் புறப்பட்டு உழைப்பராயின் இது முடியாத விஷயமாகாது. [ப. ர்.]

[221-ம் பக்கத் தொடர்ச்சி]

பரத்துடன் என்னை ஊர்வலமாக முதலியார் வீட்டிற்கு அழைத்துச் சென்ருர்கள்.

அன்றிரவு 8 மணிக்கு யான் அவ்வூரை விட்டுப் புறப்பட்டேன். ரெயில்வே ஷ்டேஷனுக்கு என்னுடன் அநேகர் வந்தனர்கள். எனக்குப் பொதுவாகச் செங்குந்தர்கள் அனைவரும் அங்குச் செய்த உபகாரத்திற்காகவும் மறியாதைக்காகவும் யான் அவர்களிடத்து என்றும் நன்றியறித லுடையவனுயிருக்கக் கடமைப் பட்டுள்ளேனுயினும் முத்து முதலியாரிடத்திலும் சிறுவனிடத்திலும் எனக்கு மிகுந்த அன்பும் நட்பும் உண்டாய் விட்டது. அதனுல் அவர்களை விட்டுப் பிரிய வேண்டியிருத்தலை நினைத்து வருந்தினேன். அளவு கடந்த பக்தி விசுவாசத்தோடு நடந்து கொண்ட அவர்களும் முகவாட்ட மெய்தினர். ஒருவாறு சமாதானம் சொல்லிவிட்டு மற்றை யோருக்கு என் மனப்பூர்வமான வந்தனம் செலுத்தி விட்டு $10\frac{1}{2}$-மணிக்குப் புகை வண்டி ஏறினேன். யான் உத்தேசித்துள்ள நறுமணம் வருகிற வரையில் விழித்துக்கொண்டே அவ்வண்டியின் ஒரு மூலையில் நடந்து வந்த சம்பாஷணையையும் கவனித்துக் கேட்டுக்கொண்டு வந்தேன். நறுமணம் வந்ததும் வண்டியை விட்டிறங்கி பிளாட்பாரத்திலிருந்த ஒரு பெஞ்சியின்மேல் உட்கார்ந்தேன். மணி 3 அடித்தது. என் வண்டியில் பிரயாணஞ் செய்து வந்த மற்றொருவரும் அங்கு வந்து உட்கார்ந்தார்.

## சோரவனூர் விசித்திர சம்பவ மறுப்பு உண்மை

சென்ற பங்குனி மித்திரன் 92 பக்கத்தில் 'சொரவனூரில் ஒரு விசித்திர சம்பவம்' என்ற தலைப்பின் கீழ்ப் பாலப்புரம் காரியதரிசி அவர்கள் எழுதியதாகப் பிரசுரிக்கப்பட்டிருந்த விஷயத்தை மறுத்து இதனடியிற் கண்டுள்ள உண்மை நிகழ்ச்சியை செங்குந்த மகா ஜனங்கள் படித்து ஷை காரியதரிசியவர்களது நடுநிலைமைத் தன்மையை உய்த்துணர்ந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

'எங்களூர்ச் சம்பந்தமான சில விவகாரங்களை முன்னிட்டு அம்மன் கோயில் பூசை, பஜனை முதலியவை கொஞ்சகாலம் நிறுத்தப்பட்டிருந்தன. அதனால் திரு. ரெங்கசாமி முதலி என்ற பெரியார் யாகஞ்செய்து பஜனை நடத்தி வந்தார். 2 மாதங்களுக்குப் பின் அவர் அதை அவ்வாறு நடத்த இயலாமையைக் கண்ட வாலிபர்களாகிய நாங்கள் 'கோயில் விளங்கக்குடி விளங்க' என்னும் ஆன்றோர் வாக்கை அநுசரித்து பஜனையை நடத்த முன் வந்தோம். இச்சந்தர்ப்பத்தில் ஊரிலுள்ள குழந்தைகள் முதல் பெரியோர் வரையில் பஜனை சமயத்தில் கோயில்படிமேல் உட்கார்ந்து கொண்டு பல விதமாகப் பேசுவதும், கலகம் செய்வதுமாக இருந்து வந்தார்கள். ஆகவே பஜனைக்காலத்தில் யாரும் படிமேல் உட்காரக்கூடாது என்று ஒரு தீர்மானம் வாலிப சங்கத்தாரால் சர்வ சம்மதமாக நிறைவேற்றப்பட்டது. இதன்படி 6 மாதம் வரை பஜனை ஒழுங்காக நடந்து வந்தது. இதன் மத்தியில் உண்டான சச்சரவுகளைப் பெரியதனக்காரர்கள் தீர்த்து வாலிபர்களின் நன்முயற்சியை மெச்சினார்கள்.

சென்ற புரட்டாசி 13ல திரு. வா. மாணிக்க முதலியார் எங்களிடம் வந்து 'அடுத்த பஜனை திரு. கு. மாணிக்க முதலியாருடைய தாகையால் ஆட்கள் அதிகம் வருவார்கள். அன்று மாத்திரம் படிமேல் உட்காரச் சம்மதம் தரவேண்டும்' என்றார். நாங்கள் அதனால் உண்டாகும் கஷ்டத்தை எடுத்துக்காட்டி 'எத்தனைப் பேர் வந்தாலும் கீழே பாய் போட்டு உட்காரவைக்கிறோம்' என்றோம். அவ்வாறே ஒத்துக்கொண்டார். 20ல திரு. கு. மாணிக்க முதலியார் பஜனைக்கு நாங்கள் போனோம். ஏற்பாட்டின்படியே ஷை முதலியார் கீழே கொஞ்சநேரம் உட்கார்ந்து பிறகு பஜனையைக் கலைக்கச்சம்மதமில்லாத திரு. அ. மாணிக்க முதலியாரை வற்புறுத்திப் படிமேல் உட்கார வைத்துத் தாமும் உட்கார்ந்தார். பாகவதர், சுப்பிரமணிய முதலியார் எழுந்து வழக்கம் போல் சங்கத் தீர்மானத்தை விளக்கிக் கூற ஒரு நிமிஷம் பஜனையை நிறுத்தும்படிக் கேட்டுக்கொண்டார். படிமேல் உட்கார்ந்திருந்தவர் இதற்கு ஒப்பந்தப்பட்டவர்கள் மாத்திரம் இங்கிருந்தால் போதும் அல்லாதவர்கள் வெளியே போகலாம். பஜனையை நிறுத்த வேண்டாம் பாடுங்கள் பாடுங்கள் என்று பலமாகக் கூச்சலிட்டார். இதைக்கண்டு சகியாத வாலிபர்களாகிய நாங்கள் எங்கள் சட்டப்படிப் போய் விட்டோம்.

குலாபிவிர்த்தி, பக்தி, கல்வி முதலிய முன்னேற்ற விஷயங்களிலும் மற்றும் பொது விஷயங்களில் ஈடுபடுவதும், நியதிக்கு விபரீதம் சொல்லுவோர்க்கு அமைதியாக விஷயங்களை விளக்கிக் காட்டி அவர்களை வழிப்படுத்த முயல்வதுமே எங்கள் சங்கத்தின் நோக்கமாகும். இதில் யாருக்கும் யாதொரு வழக்கும் கிடையாது. இதை ஊர் முழுதும் நன்கறியும்.

படிமேல் உட்கார்ந்த விஷயத்தை நாங்கள் நாட்டாண்மைக்காரரிடம் சொல்லிக் கொண்டோம். ஊர்க்கூட்டம் கூட்டப்பட்டது. கூட்டத்தில் திரு. கு. மா. முதலியார் தெற்றுக்காரராக திரு. வா. மா. முதலியார் பேசிக்கொண்டிருக்கையில் ஷை கு. மா. முதலியார் சபையறியாமல் எழுந்து போய் விட்டார். தேடியும் காணவில்லை. நவம்பர் மீ 17ல அவரை வருத்திக் கேட்கலாமென்று பெரியோர்கள் தீர்மானிக்க 15-11-29 கூட்டம் இரவு 3-மணிக்குக் கலைந்தது. இது தான் நடந்த விஷயம். இவ்வூர் கக்ஷியின் விர்த்தாந்தத்தின் ஒரு பாகத்தைச் சுருக்கி எழுதினேன். மிகுதியைப் பின்னர் எழுதுகிறேன்.

K. M. ராமசாமி முதலியார், காரியதரிசி.
சொரவனூர் செங்குந்த வாலிபர் சங்கம்.

---

## மலாய் நாட்டில் ஒரு கிளைச் சங்கம் வேண்டும்

சீரும் சிறப்பு முற்ற செங்குந்த குலசிகாமணிகளே! நம்மித்திரனின் தை, மாசி, சஞ்சிகைகளில் 'கல்வி நிதி' என்ற தலையங்கத்தின் கீழ் மலாய் நாட்டுக் கடிதமொன்று பிரசுரித்திருந்ததை நேயர்கள் வாசித்திருப்பீர்கள்.

குலாபிமானமே குவலயத்திற் சிறந்ததென்ற உண்மையை உள்ளவாறே உணர்ந்த ஓண்டில் இளையோர்களாகியும் அறிவாற்றல்களில் முதியோர்களுமாகிய கோலாலம்பூர் கொடையாளர்கள் இத்தகைய நன்முயற்சியில் ஈடுபட முன் வந்தது பற்றி யாங்கள் அளவிலாப் பேருவகை யெய்துவதோடு, எங்கள் நன்றியையும் அன்னார்களுக்கு உரித்தாக்குகிறோம்.

எனவே இத்தகைய கைங்கர்யத்தை இம்முறையோடு நிறுத்தாது வளர் பிறை மதியைப்போல் நிறுவுவதற்குப் பல அவயவிகளைச் சேர்த்து அவர்களிடமிருந்து ஏதும் சந்தாவாக வசூலித்து வருடம் இருமுறையாகவோ ஒரு முறையாகவோ நம் தலைச்சங்கத்திற்கு அனுப்பி நம் கல்வி நிதியைப்பெருக்கும் பொருட்டு மலேயாவின் தலைநகரமாகிய கோலாலம்பூரின்கண் ஒரு கிளைச்சங்கம் ஸ்தாபிக்குமாறு மேற்படி கொடையாளர்களாகிய திருவாளர்கள் குமரவேல், முத்துவேல், முத்துக் குமரவேலர்களாகிய மூவ்வேலர்களையும் முறையே வேண்டுகின்றோம். இங்ஙனம்,

செங்குந்த குலவாசி.



## கைத்தறி வீழ்ச்சி

அன்பார்ந்த தோழர்களே,

நம்மரபினர் நெசவுத்தொழிலை மாத்திரம் செய்து வேறு விதமாய்ப் பிழைக்க அனேகர் பழகாமலிருப்பதால் தற்போது நம்மறபினர் செய்யும் ஆடையை நம்மவரே வாங்கி உடுத்தாது யந்திரங்களால், நெய்யப்பட்டதை வாங்கி உடுத்துவதாலும், மற்ற இந்திய வகுப்பாரும் நம் நாட்டு நெசவாளர் என்ற அபிமானத்தையும் விட்டு யந்திரங்களில் உற்பத்தியான ஆடைகளை உபயோகிப்பதாலும், ந[illegible]ரபினர்களில் நெசவாளிகள் ஒரு நாளில் ஒரு வேளை உணவும் உண்டு ஜீவிக்க நேருகின்றது. இப்படி இருப்பதை உணர்ந்த பின் மனமுருகாமலிருப்பவர் ஒருவரும் இருக்க மாட்டார். ஆகவே இன்று முதற்கொண்டு நம்மரபினர் அனைவரும் நம்மரபினர்களால் நெய்யப்பட்ட ஜவுளிகளையே உபயோகிப்பதென்று உறுதி செய்து கொள்ள வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன். தற்போது உலகத்திலுள்ள மற்ற வகுப்பாரும் யந்திரங்களால் ஆக்கப்பட்ட ஜவுளியை நீக்கி நம்மவரால் நெய்யப்படும் ஜவுளிகளையே உபயோகிக்கும்படி வற்புறுத்தி வருகிறபடியால் நம்மரபினர்கள் இம்முடிவுக்கு வாராமலிருப்பது பெருத்த அவமானமாகும். நம்மரபினர்களுக்கு முருகப்பெருமான் குலதெய்வமாய் இருப்பதால் நம்மவர்கள் நெசவுத்தொழில் செய்து பிழைக்கமுடியாமலிருக்கும் கஷ்டத்தை நோக்கி அதற்காகவே கஷ்டங்கள் நீங்கும்பொருட்டுப் பிறஇனத்தவரிடத்துத் தற்போது புத்துணர்ச்சியை உண்டாக்கியிருக்கிறார். இது சமயம் நம்மரபினர் நெசவுத்தொழில் (கிருக்கி) விற்பனை இல்லாதிருக்கும் கஷ்டங்களை நீக்கும்பொருட்டு நாம் முக்கியமாய் கதர் ஆடையையும், இது கிடைக்காமலோ அல்லது மனது சம்மதமின்மையிலோ விலை அதிகம் கொடுக்க சாத்தியபடாத ஏழைகளோ உள்நாட்டு மில் நூலால் நம்மவர்கள் நெய்த ஆடைகளையும் வாங்கி உபயோகிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இச்சமயம் ஒவ்வொருவரும் தங்களால் ஆனவரை உதவி அளிக்கும்படி எல்லாம் வல்ல முருகப்பெருமானை வேண்டுகிறேன்.

எ. கே. சுப்பிரமணியன்.

---

## ஒற்றுமை யின்மை

### I

எங்களூரில் ஸ்ரீகாமாக்ஷியம்மன் கோயில் வேலை முடிந்து 10-12 வருஷங்கள் ஆகியும் நம்மவர்க்குள் ஒற்றுமை யின்மையால் கும்பாபிஷேகம் நடவாதிருந்ததைக் கண்டு மதுரை வண்டியூர் திரு. M. குப்புசாமி முதலியார் வடவழி திரு. வி. கெ. எம். அப்பா, கணபதி திரு. நஞ்சப்ப முதலியார் ஆகிய மூவரும் கோவில் காரியத்தைப் பூர்த்தி செய்ய வேண்டுமென்று வெகு பிரயாசைப்பட்டும் பயன்படாததினால் மனம் நலிந்து போய் விட்டனர். ஆனால் நாளது வைகாசி 23உ கும்பாபிஷேகம் நடத்தப் போவதால் ஷை பெரியோர்களுக்கும் நம் தலைச்சங்கத்திற்கும், மற்றுமுள்ள திருவாளர்களுக்கும் தெரியும் பொருட்டு நமது மித்திரனில் பிரசுரிக்குமாறு வாலிப சங்கத்தார்கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

V. S. முத்துச்சாமிமுதலியார், காரியதரிசி,
செங்குந்த வாலிபர் கூட்டுறவு சங்கம்,
கோவை, விளாங்குறிச்சி.

### II

சென்னை சைதாப்பேட்டை திருக்காரணி செங்குந்தர்கள் திருக்காரணீஸ்வரர் ஆலயசம்பந்தமாகச் சென்ற சுமார் 10 வருஷங்களாகப் பிளவுபட்டு பதினாயிரக் கணக்காகச் செலவு செய்து வருவது யாரும் அறிந்த விஷயம். இத்தகைய கக்ஷிப்பிரதி கக்ஷிகளால் நம்மவர்களுக்கு உண்டாகும் பல வீனத்தையும் அபகீர்த்தியையும்—ஏன்? நம் குலத்தின் பிற்போக்குக்கே காரணமாயுள்ள உட்பகையை அதாவது நமக்குள்ளாகவே ஒற்றுமையின்மையையும் கருதிச் சிலர் சில நாட்களாக ஒற்றுமையுண்டாக்க முயன்று வருவதாகக் கேள்விப்பட்டு மிகவும் சந்தோஷிக்கிறேன். ஒற்றுமை உண்டாவதற்கு இருகக்ஷிப் பிரமுகர்களும் விட்டுக் கொடுத்தல் என்னும் முக்கியாம்சத்தைக் கவனிக்குமாறு வேண்டிக் கொள்ளுகிறேன். இது சம்பந்தமாக திருவாளர்கள் O. C. சோமசுந்தர முதலியார், M. B. நடேச முதலியார், S. P. நாதவேலு முதலியார், M. S. நடேச முதலியார், S. ரத்தினவேலு முதலியார், M. பொன்னுசாமி முதலியார், T. துரைசாமி முதலியார், M. குமாரசாமி முதலியார், முதலியவர்கள் சிரத்தை எடுத்துக் கொள்வார்களாயின் எடுத்த காரியம் சித்தியாகுமென்பதிற் சந்தேகமில்லை. இறைவன் துணைபுரிவானாக.

—ஒரு நிருபர்.

---

## இரங்கோனில் பூகம்பம்

இரங்கோனில் பூகம்பத்தினால் சொற்ப நஷ்டமே ஏற்பட்டது. இவ்வூருக்குச் சமீபம் 10-மைலுக்கப்பாலுள்ள பக்கோ ஜில்லாவில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் உயிரிழந்தனர். நஷ்டத்திற்களவில்லை. ஷை யூர் சுடுகாட்டிற்குச் சமானமாகிவிட்டது. பின்னப்பட்ட ஜனங்களுக்கு அளவில்லை. பக்கோ ஆஸ்பத்திரியில் ஷை ஜனங்களுக்கிடமில்லாமல் அனேகரை ரெங்கோன் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்விட்டார்கள். அந்தாவாடி ஜில்லாவைச் சேர்ந்த கையான் என்ற ஊரில் புதிதாகக் கட்டப்பட்ட ஒரு முகம்மதியர் பள்ளிவாசல் இடிந்து விசேஷ நஷ்டமேற்பட்டிருப்பதாகப் பிரஸ்தாபம். மினிவாவிலேற்பட்ட பூகம்பத்தினால் யாதொரு சேதமும் கிடையாது. நாங்கள் எல்லோரும் சௌக்கியமாக இருக்கிறோம். இவ்விடமும் மற்றுமுள்ள இப்பர்மாவில் எனதன்பர்கள் யாவரும் சுகமாக இருக்கிறார்கள். தாங்கள் என்மீதன்பு கூர்ந்தெழுதிய கடிதத்திற்கு எனது வந்தன மளிக்கிறேன்.

மு, இராமலிங்கம், போஸ்ட்டு மாஸ்டர், மினி

# செங்குந்தர் கிளர்ச்சி

## கோவை ஜில்லா

### கோவை விளாங்குறிச்சி செங்குந்த வாலிபர் கூட்டுறவுச் சங்கம்.

இச்சங்கத்தின் கூட்டம் ஒன்று வைகாசி 14உ இரவு 8 மணிக்குக் காமாக்ஷியம்மன் சந்நிதியில் திரு. பெரியதனம் கி. வெங்கடாசல முதலியார் அவர்கள் தலைமையில் கூடிற்று. தலைவர் முன்னுரையில் புத்தி புகட்டிச் சங்கத்திற்கு ஒரு ரூபாய் நன்கொடை யளித்தார். சங்கத் தலைவர் திரு. V. A. பழனிசாமி முதலியார், காயரிதரிசி திரு. V. S. முத்துசாமி முதலியார், திரு. V. S. ஆறுமுக முதலியார், பொருட் காப்பாளர் திரு. தே. கு. அங்கப்ப முதலியார் ஆகிய கனவான்கள் முறையே 'கல்வியின் அவசியம்' 'அறிவை வளர்க்கும் முறையும் பயனும்,' 'ஒற்றுமை' என்பவற்றைக் குறித்து அரிய சொற் பொழிவுகள் ஆற்றினார்கள். நமது தலைச்சங்கக் கட்டணத்தை ஒவ்வொரு தை மாதத்திலும் அனுப்பிவிட வேண்டு மென்றும், அனுப்ப வேண்டிய தொகை இவ்வளவென்று அடுத்த கூட்டத்தில் யோசிக்கப்படு மென்றும் தீர்மானிக்கப்பெற்றுத் திரு. மே. குமாரசாமி முதலியார் அ. ரங்கசாமி முதலியார் இவர்களால் கடவுள் வாழ்த்துப் பாடப் பெற்று $10\frac{1}{2}$ மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

V. A. பழனிசாமி முதலியார் தலைவர்.
V. S. முத்துசாமி முதலியார் காரியதரிசி.

*

### பொள்ளாச்சி தாலுக்கா வடசித்தூர் செங்குந்தர் சங்கம்.

இச்சங்கத்தின் 5-வது கூட்டம் 18-5-30உ திரு. சப்பல் குப்பண்ண முதலியார் அவர்கள் கட்டடத்தில் மாலை 3 மணிக்குத் திரு. சா. இராமசாமி முதலியார் அவர்கள் தலைமையின் கீழ்க் கூடிற்று. கோதாவாடி பணப்பட்டி முதலிய கிராமங்களிலிருந்து அநேக செங்குந்தர்கள் வந்திருந்தார்கள். கடவுள் வணக்கமும் சந்தா வசூலும் முடிந்ததும், திருவாளர்கள் அ. முத்துசாமி, அ. ராசு முதலியார், ப. குமாரசாமி முதலியார், K. V. அப்பாச்சி முதலியார், அ. முருகேச முதலியார் ஆகியவர்கள் ஜீவவதை (இன்னிசைப் பாட்டில்), கல்வியின் ஒழுக்கம், பெண் கல்வி, சூது விலக்கல் என்பவை பற்றி முறையே உபந்யசித்தனர். தலைவரவர்கள் கல்விக்கு வேண்டிய உதவி புரிவதாக வாக்களித்து மதுவிலக்கின் அவசியத்தை எடுத்துக் காட்டி முடித்த பிறகு கடவுள் வணக்கத்துடன் $5\frac{1}{2}$ மணிக்குச் சபை இனிது கலைந்தது.

உபாத்தியாயர் சா. நே. சி. பழனியப்ப முதலியார், காரியதரிசி.

### குளத்துப் பாளையம் முன்னேற்றக் கழகம்

27-4-30உ பகல் 4-மணிக்குக் குளத்துப் பாளையம் விநாயக ராலயத்தில் திரு. தலைவர் சிதம்பர முதலியார் அவர்கள் தலைமையின்கீழ்ச் சங்கப் பொதுக்கூட்ட மொன்று கூடிற்று. கடவுள் வாழ்த்துக்குப் பின் திரு. K. காளியண்ண முதலியார் நம்மவர் ஒற்றுமை என்பதைப்பற்றிப் பேசினார். சூது விரும்பேல் என்பதைப்பற்றிப் பெரியநாயகமும் M. R. சுப்பிரமணியமும் பேசினார்கள். மாணவர் K. P. ராமசாமி பக்தி என்பதைப்பற்றி சொற்பொழிவு நிகழ்த்தினார். பின்பு M. R. பெருமாள் நாம்ஒற்றுமையின்றியும், கடவுள் கடவுள் என்று தொழுதுகொண்டு தீய நடையுடையவராயும் இருக்கக் கூடாதென்றும், நாம் நமது தலைச்சங்கத்திற்கு உதவி செய்யவேண்டு மென்றும், நன்மை தீமையறியாது பழமை பாராட்டுதல் தகுதியல்ல வென்றும், பழையன கழிதலும் புதியன புகுதலும் தவரல்ல வாகையால் காலப் போக்கிக்கிணங்கியே நாம் முன்னேற்ற மடைய வேண்டுமென்றும் மிகவும் வற்புறுத்திக் கூறியது மிகுந்த நன்றி பாராட்டத்தக்கது.

பின்பு வந்தனோபசாரத்துடன் சபை இரவு 7 மணிக்கு இனிது கலைந்தது.

K. P. ராமசாமி,
M. R. பெருமாள்,
காரியதரிசிகள்.

---

## திருநெல்வேலி ஜில்லா

### செங்குந்தர் அபிவிருத்தி சங்கம். வீரவநல்லூர்.

இச்சங்கத்தின் 12-வது ஆண்டு 10-வது சாதாரணக் கூட்டம் நாளது வைகாசி௴ 14உ மாலை 5-மணிக்குத் திருநெல்வேலி வக்கீல் திரு. V. சங்கர சுப்பிரமணிய முதலியார் பி. ஏ. பி. எல்., அவர்கள் தலைமையின்கீழ்க் கூடிற்று. கடந்த கூட்டத்தின் குறிப்பு வாசிக்கப்பட்ட பின்னர் திரு. ந. பிச்சாண்டி முதலியாரவர்கள் இல்வாழ்க்கை யென்னும் விஷயத்தைப்பற்றிக் கதா ரூபமாகச் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பின்னர் திரு. ந. ஆ. சிதம்பர முதலியாரவர்களும் திரு. முத்துராமலிங்கம் பிள்ளையவர்களும் பல உதாரணங்களுடன் ஆமோதித்துப் பேசினார்கள். தலைவர் முடிவுரை கூற வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலையப் பெற்றது.

ந. ஆ. சிதம்பர முதலியார்,
காரியதரிசி.

### செங்குந்தர் அபிவிர்த்தி சங்கம் சங்கர நயினார் கோயில்

11-5-30உ தேனப்புரம் 2-வது தெருவில் தலைவர் உயர் திரு. A. முத்தையா முதலியார் அவாகள்



தலைமையில் நடந்த கூட்டத்தில் திரு. தி. ப. சு. அருணகிரி முதலியார் தேவாரம் ஓதிய பிறகு சென்ற சங்க நடவடிக்கை வாசிக்கப்பட்டது. தலைவர் அவர்கள் 'வறுமையிற் செம்மை' என்பது பற்றியும் திரு. ந. பழனியாண்டி முதலியார் அவர்கள் 'ஜீவேஸ்வர சம்பந்தம்' என்பது பற்றியும் உபந்யசித்தனர். 11-மணிக்குக் கூட்டம் இனிது நிறைவேறியது.

27-5-30-ல் இரவு 8-மணிக்குச் சாலத்தெருவில் தலைவர் உயர் திரு. A. முத்தைய முதலியார் அவர்கள் தலைமையில் கூடிற்று. திரு. த. சுப்பிரமணிய முதலியார் தேவாரம் ஓதினார். முன் கூட்ட நடவடிக்கை வாசிக்கப்பட்டுத் தலைவர் அவர்கள் 'மகளிர் இலக்கணம்' என்பதுபற்றித் தெளிவாக எடுத்துரைத்தார்கள். வந்தனோபசாரத்துடன் 12 மணிக்குக் கூட்டம் நிறைவேறிற்று.

அநேக ஆண்டுகளாக இவ்வூர்ச் செங்குந்தர் பொது மடத்தில் அளவிறந்த அடியார்களுக்குக் கிருத்திகைகளிலும், உற்சவ காலங்களிலும் செங்குந்தர்களால் விமரிசையாக அறுசுவை யுண்டி அளிக்கப்பட்டு வருகிறது. அது இன்னும் சிறந்தோங்குமாக.

தி. சங்கரபாண்டிய முதலியார்,
காரியதரிசி.

### ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேஸ்வர செங்குந்தர் அபிவிர்த்தி சங்கம். சிந்தாமணி.

சென்ற தை 25உ இரவு 7-மணிக்கு இச்சங்கத்தின் மகாசபை சங்க உபதலைவரும், தியாகவள்ளலுமாகிய உயர் திரு. கி. வ. கோட்டியப்ப முதலியார் அவர்கள் தலைமையில் கூடிற்று. திரு. பா. நயினார் முதலியார் அவர்கள் 'கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி எல்லா உயிருந்தொழும்' என்னும் திருக்குறளுக்கு அரியதோர் வியாக்யானம் செய்தார்கள்.

மாசி 23உ கூடிய கூட்டத்தில் ஸ்ரீமான் நயினார் முதலியார் அவர்கள் 'ஆலயந் தொழுவது சாலவு நன்று' என்னும் வாக்கியத்திற்கு வியாக்யானம் செய்தார்கள்.

பங்குனி 20உ மாலை 8-மணிக்குக் கூடிய மகா சபையில் 'நோன்பென்பது கொன்று தின்னாமை' என்பதைக் குறித்து ஸ்ரீமான் பா. நயினார் முதலியார் அவர்கள் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள்.

சித்திரை 19உ மாலை 7-மணிக்குக் கூடிய மகா சபைக் கூட்டத்தில் திரு. நயினார் முதலியார் அவர்கள் 'ஓதாதார்க்கில்லை உணர்வொடு ஒழுக்கம்' என்பது பற்றி மிகத்தெளிவாக உபந்யாசம் செய்தார்கள். தலைவர் முடிவுரையின் பின் பூமாலை சூட்டி வந்தனோபசாரத்துடன் சபை இனிது 10-மணிக்குக் கலைந்தது.

கி. வ. கோட்டியப்ப முதலியார், தலைவர்.

---

## செங்கற்பட்டு ஜில்லா

### நாயக்கன் பேட்டை தணிகைவேலர் வாசகசாலை முதலாவதாண்டு விழா.

10-5-30உ பிற்பகல் மணி 3-30க்குக் காஞ்சியம்பதிக்குக் குணபாலில் மூன்று மைல் தூரத்தில் விளங்கா நிற்கும் நாயக்கன் பேட்டை போர்டு பாடசாலையின்கண் மேற்கண்ட வாசக சாலைக்கு ஆண்டு விழா காஞ்சீபுரம் பச்சையப்பன் உயர்தரக் கலாசாலைத் தமிழ்ப் பண்டிதர் உயர் திரு. வீ. திருஞான சம்பந்த முதலியார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. காஞ்சீபுரம் சைவத் திருவாளர்கள் சி. அருணாசல முதலியாரவர்களும் பி. செ. மாணிக்கவாசக முதலியாரவர்களும் விஜயஞ் செய்தனர். நாயக்கன் பேட்டையே யன்றி, சுற்றுப் பக்கங்களிலிருந்து சுமார் 300க்கு மேற்பட்ட ஜனங்கள் வந்து குழுமியிருந்தனர்.

போர்டு பாடசாலை ஆசிரியராகிய திரு. M. முருகேச முதலியாரவர்கள் கடவுள் வணக்கம் கூறியபின் வாசகசாலைத் தலைவர் திரு. N. P. தணிகைராயன் வரவேற்புப் பத்திரம் வாசித்தளித்து அறிக்கை வாசித்து முடித்தார். தலைவர் முன்னுரையில் வாசக சாலையின் அவசியத்தையும் அதை நடத்தும் முறையையும் பற்றி வெகு விரிவாக எடுத்துரைத்தார்.

N. P. தணிகைராயன் என்பவர் 'அன்பு' என்பதைப் பற்றியும் நாயக்கன் பேட்டை தமிழ் வித்வான் திரு. நா. கி. சுந்தர முதலியார் 'கல்வி' என்பதைப்பற்றியும் சொற் பொழிவு நிகழ்த்தினார்கள். காரியதரிசி திரு. K. C. துரைசாமி என்பவரால் 'மாணவர் முன்னேற்றம்' என்பது பற்றி எடுத்துக் கூறப்பட்ட பின் திரு. M. முருகேச முதலியார் 'சூது' என்பதைப் பற்றிப் பேசினார். பிறகு 'நன்றி மறவாமை' 'நல்லொழுக்கம்' என்பவை பற்றி முறையே N. C. இராஜமாணிக்கம், K. A. பாலசுப்பிரமணியன் ஆகியவர்கள் உபந்யசித்தனர். கடைசியாக கருக்குப்பேட்டை தமிழ்ப் புலவர் திரு. M. சண்முக முதலியாரவர்கள் 'வாசகசாலையும் கிராம வாசிகளும்' என்பது பற்றிப் பேசினார். செங்குந்த மித்திரன் உதவிப் பத்திராதிபரும், சமூகத்தொண்டையே என்றும் ஆற்றி வருபவருமான திரு. பி. செ. மாணிக்க வாசக முதலியாரவர்கள் அதே விஷயத்தைப் பற்றிச் சிறிது பேசியபின் காஞ்சீபுரத்தில் இவ் வைகாசி மாதத்தில் கூடப் போகும் 2-வது செங்குந்தர் மகா நாட்டைப் பற்றியும் பேசினார். தலைவர் முடிவுரைக்குப் பின் வந்தனோபசாரம் கூறப்பட்டு விழா இரவு 7-15 மணிக்கு இனிது நிறைவேறியது.

இங்ஙனம்.
N. P. தனிகைராயன்.
தலைவர்

---

## திருச்சி ஜில்லா

திருச்சி ஜில்லா உன்னியூர் செங்குந்தர் சங்கம் 14-4-1930 தேதி மாலை 4 மணிக்கு போர்டு பாடசாலையில் திரு. கு. ஆ. ஆனந்த முதலியாரவர்களது தலைமையில் நடைபெற்றது. தமிழ் வித்வான், திரு. கு. பெ. கந்தசாமி முதலியாரவர்களால் கள்ளுண்ணாமை என்னும் பொருள் பற்றி உபந்நியாசம் நடை பெற்றதும், அடியிற் கண்ட தீர்மானம் நிறைவேறியது. இச்சங்கத்தின் பிரசாரத்தின் பலனாய், இவ்வூரில் குடிப்பவர்கள், பெரும்பாலும் இல்லை யென்றாலும், அக்கம் பக்கத்திலுள்ள கிராம ஜனங்கள் குடிப்பதற்கு இவ்வூர் கள்ளுக்கடைக்கு வருவதால், இந்தக் கிராமத்திற்கும் பக்கத்துக் கிராமங்களுக்கும், மிதக்குடி பிரசாரகர்கள் வந்து பிரசாரம் செய்ய வேண்டுமாய் திருச்சி ஜில்லா மிதக்குடி பிரசாரகர்களை இச்சங்கம் கேட்டுக் கொள்கிறது. பின்னர் சங்க மெம்பர்களிடமிருந்து சந்தா தொகை வசூலித்ததும் தலைவரின் முடிவுரைக்குப் பின் இரவு 7 மணிக்குக் கூட்டம் இனிது கலைவுற்றது.

P. மாரியப்ப முதலியார்
காரியதரிசி.

## சேலம் ஜில்லா

### பவானிக்கடுத்த சின்னப்ப நாயக்கன் பாளையம் சைவசித்தாந்த இளைஞர் சங்கம்.

29-4-30ந் தேதி இரவு 8 மணிக்கு ஸ்ரீ குகாநந்த இராத்திரி பாடசாலையில் திரு. K. ஞான சம்பந்தம் பிள்ளை அவர்கள் தலைமையின் கீழ் ஷை சங்கம் கூடிற்று. அவ்வமயம் திரு. T. R. மாரிமுத்து முதலியார் கடவுள் வணக்கம் பாடினார். சண்டேஸ்வர நாயனார் சரித்திரமும் கணபதி உற்பத்தியும், சிறுத் தொண்டன் பக்தி, சுந்திர மூர்த்தி சுவாமிகள் சரித்திரமும் முறையே திருவாளர்கள் R. P. கந்தசாமி முதலியார், ஜெ. அ. ராமசாமி முதலியார், R. கோவிந்தசாமி முதலியார், செ. அ. நாகப்ப முதலியார் அவர்களால் உபந்யசிககப் பட்டன. திரு. S. K. செங்கோட முதலியார் வந்தன உபசாரங் கூறிய பின் கற்கண்டு தாம்பூலம் வழங்க 10-30 மணிக்குச் சங்கம் இனிது கலைந்தது.

5-4-30தேதி ஷை பாடசாலையில் வழக்கம்போல் சங்கம் கூடியது. திரு. ச. செ. அங்கமுத்து முதலியார் அவர்கள் தலைமை வகிக்க திரு. T. K. கருப்பண்ண முதலியார் சென்ற மாதம் உபந்நியசித்த பட்டணத்தடிகள் துறவு என்ற பிற்பகுதியைச் சொற்பொழிவு நிகழ்த்தினார். திரு. S. K. செங்கோட முதலியார் நல்லொழுக்கம் என்பதைப் பற்றி உபந்நியாசித்தனர். தலைவர் பின்னுரைக்குப் பின், திரு. ச. செ. தங்க முத்து முதலியார் வந்தன உபசார முதலியவற்றை ஓதியதும் 11-மணிக்குக் கூட்டம் இனிது கலைந்தது.

இங்ஙனம்
T. R. மாரிமுத்து முதலியார்,
சங்கக் காரியதரிசி.

## தஞ்சை ஜில்லா

### காரைக்கால் செங்குந்த வாலிபர் சன்மார்க்க சங்கம்.

இப்பெயர் பூண்ட சங்கம் காரைக்காலில் சில செங்குந்த இளைஞர்கள் நன்முயற்சியால் தங்களுடைய சைவ பஜனை மடாலயத்தின் கண். 31-5-30 இரவு 8-மணிக்கு நாட்டாண்மை ஸ்ரீமான் மா. உத்தண்டி முதலியார் அவர்கள் முதலிய பல ஊரார் முன்னிலையிலும் ஸ்தாபிக்கப் பெற்றது.

அவ்வமயம் இந்நகரைச் சார்ந்த திருத்தெளிச்சேரி ஸ்ரீமான் சுவாமிகள் மடாதிபதி முனிவர் பெருமான் ஸ்ரீலஸ்ரீ. அரசங்க இராஜ குமரானந்த சுவாமிகள் நமது குல முன்னேற்றத்திற்குச் சங்கம் இன்றியமையாதது என்பதைப்பற்றி நீண்டதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். பிறகு சங்க நிர்வாகஸ்தர்களாகக் கீழ்க் கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

ஸ்ரீமான்கள் R. அப்பாவு முதலியார் தலைவர்.
,, S. சோமசுந்திர முதலியார் உபதலைவர்.
,, V. S. P. வைத்தியநாத முதலியார்,
,, R. M. S. கன்னையா முதலியார்,
காரியதரிசிகள்.
,, M. O. சோமசுந்திர முதலியார்,
பொக்கிஷதார்.

மற்றும் அறுவர் நிர்வாக அங்கத்தினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

பிறகு அக்கிராசனராகிய சுவாமிகளுக்கு வந்தனோபசாரம் சொல்லப்பட்டு மற்றும் யாவர்களுக்கும் சந்தனம் தாம்பூலம் வழங்கிக் கூட்டம் 9-30 மணிக்கு இனிது நிறைவேறியது. சுபம்!

R. M. S. கன்னையா முதலியார்.
காரியதரிசி.

---

### திருமண நன்கொடை

பிரமோதூதஸு வைகாசி 19உ ஸ்ரீ ஆண்டவர் சுப்பிரமணிய சுவாமி திருமண ஸ்தலமாகிய திருப்பரங்குன்ற மென்னும் க்ஷேத்திரத் திருக்கலியாண மண்டபச் சந்நிதியில் செங்குந்த மித்திரன் சந்தாதாரும் ஷை யூரில் ஜவுளி வியாபாரியுமாகிய அனுப்பானடி திரு. ப. அ. சொக்குமுதலியாருக்கும் மதுரைத் தாலுக்கா கொடிய மங்கலம் குமார முதலியாரவர்கள் குமாரத்தி திருநிறைச் செல்வி சொர்னத்தம்மாளுக்கும் நடந்தேறிய திருமணத்தில் நமது சங்கத்திற்கு ரூ. 5-0-0 ஐந்து நன் கொடை அளிக்கப் பெற்றது. இவர்கள் குலாபிமானம் மிகவும் பாராட்டத்தக்கது. தம்பதிகள் நீடூழி வாழ்ந்திருப்பாராக.

தென்னிந்திய செங்குந்தர் இரண்டாவது மகாநாடு

# விளம்பர சபைப் பிரசுரம் 1.

## வசூல் கமிட்டி.

### 1. காஞ்சீபுரம் வட்டம்.

சோளீஸ்வரர் கோயில் தெரு திருவாளர் வை. வினைதீர்த்தா முதலியார் அவர்கள்
நடுத்தெரு திருவாளர் க. ஷண்முக முதலியார் அவர்கள்
கிருஷ்ணாராயர் தெரு திருவாளர் மொ. பொன்மகிரி முதலியார் அவர்கள்
திருமேற்றளித் தெரு திருவாளர் சின்னசாமி முதலியார் அவர்கள்
புதுப்பாளையத் தெரு திருவாளர் மு. சிங்கார முதலியார் அவர்கள்
புதுப்பாளையத் தெரு திருவாளர் க. இஷ்டலிங்க முதலியார் அவர்கள்
மண்டபத் தெரு திருவாளர் தீ. வை. பாலசுந்தர முதலியார் அவர்கள்
ஒத்தவாடை தெரு திருவாளர் இரத்தின முதலியார் அவர்கள்
மாதனம்பாளையத் தெரு திருவாளர் வடமலை முதலியார் அவர்கள்
அக்கணம்பாளையத் தெரு திருவாளர் தணிகைமலை முதலியார் அவர்கள்
திருவேகம்பன் தெரு திருவாளர் குமாரவேலு முதலியார் அவர்கள்
புதுத்தெரு திருவாளர் பவழப்ப முதலியார் அவர்கள்
கச்சியப்பன் தெரு திருவாளர் அருணாசல முதலியார் அவர்கள்
ஏகமுகான் தெரு திருவாளர் அருணாசல முதலியார் அவர்கள்
பெரிய காஞ்சீபுரம் திருவாளர் குமாரசாமி முதலியார் அவர்கள்
திருமல்ராஜா தெரு திருவாளர் நடேச முதலியார் அவர்கள்
லிங்கப்பையர் தெரு திருவாளர் ஆ. தங்கவேல் முதலியார் அவர்கள்
ஆலடிப்பிள்ளையார் கோயில் தெரு } திருவாளர் தி. தேவராய முதலியார் அவர்கள்; திருவாளர் ம. சு. கந்தசாமி முதலியார் அவர்கள்
வளத்தீஸ்வரர் கோயில் தெரு } திருவாளர் மு. காளத்தி முதலியார் அவர்கள்; திருவாளர் அ. செல்லபெருமாள் முதலியார் அவர்கள்
கரிக்கினிலமர்ந்தவள் கோயில்தெரு } திருவாளர் மு. கச்சபாலய முதலியார் அவர்கள்; திருவாளர் அருணாசலமுதலியார் அவர்கள்
விளக்கொளித்தோப்புத் தெரு } திருவாளர் கு. பாலசுந்திர முதலியார் அவர்கள்; திருவாளர் நல்லதம்பி முதலியார் அவர்கள்
நாராயணம்பாளையத் தெரு } திருவாளர் வே. முருகேச முதலியார் அவர்கள்; திருவாளர் அருணாசல முதலியார் அவர்கள்
ஐயங்கார் பாளையம் திருவாளர் கச்சி. ஏகாம்பர முதலியார் அவர்கள்
ஷை திருவாளர் வரதராஜ முதலியார் அவர்கள்
ஷை திருவாளர் கதிர்வேல் முதலியார் அவர்கள்
அமுதுபடித்தெரு திருவாளர் திருவேங்கட முதலியார் அவர்கள்

### 2. அய்யம்பேட்டை வட்டம்.

அய்யம்பேட்டை.

கந்தப்பார் வீதி திருவாளர் வடிவேலு முதலியார் அவர்கள்
கந்தப்பார் வீதி திருவாளர் வேலாயுத முதலியார் அவர்கள்
ஷை திருவாளர் வி. முருகப்ப முதலியார் அவர்கள்
ஷை திருவாளர் சின்னகாளத்தி முதலியார் அவர்கள்
நடுத் தெரு திருவாளர் பரமானந்த முதலியார் அவர்கள்
ஷை திருவாளர் பெருமாகாளத்தி முதலியார் அவர்கள்
கீழ்த் தெரு திருவாளர் முனியாண்டி முதலியார் அவர்கள்
ஷை திருவாளர் சத்தியவேலு முதலியார் அவர்கள்
மேல் தெரு திருவாளர் பா. வாசுதேவ முதலியார் அவர்கள்
ஷை திருவாளர் அப்பாதுரை முதலியார் அவர்கள்
ஷை திருவாளர் சோமசுந்திர முதலியார் அவர்கள்
வடக்குத்தெரு திருவாளர் க. பாலசுந்திர முதலியார் அவர்கள்
ஷை திருவாளர் மு. சரவண முதலியார் அவர்கள்
ஷை திருவாளர் க. வேலு முதலியார் அவர்கள்
திம்மையன் பேட்டை திருவாளர் பூ. நல்லாண்டி முதலியார் அவர்கள்
கருக்குப்பேட்டை திருவாளர் க. சரவண முதலியார் அவர்கள்
ஷை திருவாளர் மு. சோமசுந்திர முதலியார் அவர்கள்
ராஜாம் பேட்டை திருவாளர் சி. கந்தசாமி முதலியார் அவர்கள்

ஷை திருவாளர் க. ஆறுமுக முதலியார் அவர்கள்

நாயக்கம்பேட்டை திருவாளர் குப்புசாமி முதலியார் அவர்கள்

ஷை திருவாளர் ச. வெங்கடேச முதலியார் அவர்கள்

ஷை திருவாளர் மு. சுப்பிரமணிய முதலியார் அவர்கள்

எக்கனும்பேட்டை திருவாளர் கு. பொன்னுசாமி முதலியார் அவர்கள்

ஷை திருவாளர் வை. வேலாயுத முதலியார் அவர்கள்

பிரதாபராயன் பேட்டை முருகேச முதலியார் அவர்கள்

பாவாசா பேட்டை திருவாளர் அ. தணிகைமலை முதலியார் அவர்கள்

களயப் பேட்டை திருவாளர் சி. ஆறுமுக முதலியார் அவர்கள்

ஷை திருவாளர் க. நமசிவாய முதலியார் அவர்கள்

ஒரக்காட்டுப்பேட்டை திருவாளர் அண்ணுவேலு முதலியார் அவர்கள்

ஷை திருவாளர் ராஜரத்தின முதலியார் அவர்கள்

ஷை திருவாளர் பூ. வேதாசல முதலியார் அவர்கள்

## 3. சிவபுரம் வட்டம்.

பழைய சிவபுரம் திருவாளர் அ. முனிசாமி முதலியார் அவர்கள்

ஷை திருவாளர் க. துரைசாமி முதலியார் அவர்கள்

சேர்க்காடு திருவாளர் மு. ராகவ முதலியார் அவர்கள்

சேர்க்காடு திருவாளர் ந. வேதாசல முதலியார் அவர்கள்

சிவமங்கலம் திருவாளர் வெ. தெய்வநாயக முதலியார் அவர்கள்

ஷை திருவாளர் ப. போரூரா முதலியார் அவர்கள்

மாவண்டூர் திருவாளர் ச. பரசுராம முதலியார் அவர்கள்

மேலவலம் பேட்டை திருவாளர் சொ. சாம்பசிவ முதலியார் அவாகள்

மதுராந்தகம் திருவாளர் முத்துபாட்சா முதலியார் அவர்கள்

ஷை திருவாளர் முத்து அருணசல முதலியார் அவர்கள்

கோர்ட்டு தேவாதூர் திருவாளர் சு. வேதாசல முதலியார் அவர்கள்

கயப்பாக்கம் திருவாளர் வீ. கந்தசாமி முதலியார் அவர்கள்

ஷை திருவாளர் சந்தி. அ. கந்தசாமி முதலியார் அவர்கள்

பொலம்பாக்கம் திருவாளர் சோமசுந்தர முதலியார் அவர்கள்

ஷை திருவாளர் பொன்னம்பல முதலியார் அவர்கள்

## 4. திருமழிசை மணிமங்கலம் வட்டம்.

திருமழிசை திருவாளர் சுப்பிரமணிய முதலியார் அவர்கள்

ஷை திருவாளர் வேலப்ப தேசிகர் அவர்கள்

குண்ணத்தூர் திருவாளர் தெய்வசிகாமணி முதலியார் அவர்கள்

ஷை திருவாளர் தட்சிணமூர்த்தி முதலியார் அவர்கள்

சைதாப்பேட்டை திருவாளர் S. இரத்தினவேலு முதலியார் அவர்கள்

ஷை திருவாளர் S. சடையப்ப முதலியார் அவர்கள்

மணிமங்கலம் திருவாளர் ந. மு. கிருஷ்ணசாமி முதலியார் அவர்கள்

ஷை திருவாளர் சோ. திருவேங்கட முதலியார் அவர்கள்

படப்பை திருவாளர் அம்பலம் முருகேச முதலியார் அவர்கள்

மேல்படப்பை திருவாளர் பி. வெங்கடாசல முதலியார் அவர்கள்

நடுவீரப்பட்டு திருவாளர் மு. வேதகிரி முதலியார் அவர்கள்

சோமங்கலம் திருவாளர் சி. ரங்கசாமி முதலியார் அவர்கள்

## 5. மானும்பதி வட்டம்.

மானும்பதி திருவாளர் கு. முருகப்ப முதலியார் அவர்கள்

ஷை திருவாளர் துரைசாமி முதலியார் அவர்கள்

ஷை திருவாளர் வேணுகோபால் முதலியார் அவர்கள்

ஷை திருவாளர் இரத்தின முதலியார் அவர்கள்

பெருநகர் திருவாளர் ப. தில்லை முதலியார் அவர்கள்

உத்திரமேரூர் திருவாளர் கா. உ. பொன்னுசாமி முதலியார் அவர்கள்

ஷை திருவாளர் கதிர்வேல் முதலியார் அவர்கள்

ஐயங்கார்குளம் திருவாளர் மணியம் பிச்சநாயக முதலியார் அவர்கள்

முன்னர் நமது மித்திரனில் வெளியிடப்பட்டுள்ள நமது இரண்டாவது மஹா நாட்டு வசூல் கமிட்டியின் வட்டக் கிரமம் மேற் குறித்தபடி மாற்றப்பட்டிருக்கிறது.

# தலைச்சங்கத்தின் விளம்பரம்

## ஏழைச் செங்குந்த மாணுக்கர்களுக்கு உபகாரச் சம்பளம்

சென்ற வருஷம் போலவே இவ்வருஷமும் உயர்தரக் கல்வியை நாடும் சில ஏழைச் செங்குந்த மாணுக்கர்களுக்கு உபகாரச் சம்பளமளிக்க நமது தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம் தீர்மானித்திருக்கிறது. உபகாரச் சம்பளத்தை நாடும் ஏழைச் செங்குந்த மாணுக்கர்களின் பெற்ருேராவது பாதுகாப்பாளராவது அடியில் கையொப்பமிட்டிருப்பவருக்கு ஜூலை மாதம் முதல் தேதிக்குமேல் 15-ம் தேதிக்குள் மனு எழுதியனுப்பவேண்டும். ஆவணி மாதத்திய செங்குந்தமித்திரனில் சங்கத்தின் தீர்மானம் வெளியிடப்படும். இது சம்பந்தமான இதர குறிப்புகளைப் பத்திரிகாசிரியர் முன்னுரையில் கண்டுகொள்க.

மனுவில் குறிப்பிட வேண்டியவை :—

1. பிள்ளையின் பெயர்
2. பெற்ருேர் அல்லது பாதுகாப்பாளர் பெயரும் விலாசமும்
3. பிள்ளை பிறந்த இடமும் தேதியும்
4. பிள்ளை படிக்கும் வகுப்பும் கலாசாலையும்
5. சென்ற பரீக்ஷையில் பெற்ற மார்க்குகள்
6. பெற்ருேர் அல்லது பாதுகாப்பாளரின் தொழில், வருமானம், சொத்து முதலியன
7. மனுதாரர் குடும்பத்து நபர்களின் தொகையும் அவர்களின் ஜீவனோபாயங்களும்
8. அவர் குடும்பத்தில் படிக்கும் இதர பிள்ளைகளின் தொகையும் வகுப்பும்
9. நாடும் ஒத்தாசையின் தன்மையும் அளவும்
10. ஏற்கெனவே வேறு ஒத்தாசை பெற்றிருந்தால் அதன் தன்மையும் அளவும்
11. உதவிக்குப் பாத்திரர் என்பதை நிரூபிக்கக்கூடிய இதர விவரங்கள்
12. பெற்ருேர் அல்லது பாதுகாப்பாளரின் கையொப்பம்
13. பள்ளிக்கூடத்துத் தலைவரின் சிபார்சுக்குறிப்பும் கையொப்பமும்

மனு செய்துகொள்வோர் கவனிக்கவேண்டிய முக்கியமான நிபந்தனைகள் :—

1. (a) மேற்குறிக்கப்படிருக்கும் விவரங்கள் உண்மையென்பதற்கு அத்தாட்சியாக மாணவர் படிக்கும் கலாசாலை அதிகாரியின் கைச்சாத்திட்ட சிபார்சு குறிப்பு ஒன்று ஒவ்வொரு மனுவுடனும் வாங்கி யனுப்புதல் வேண்டும்.

(b) உண்மைச் செங்குந்தர் சங்கங்கள் உள்ள இடங்களிலிருந்து மனு அனுப்புவோர் தம் மனுவோடு அவ்வச் சங்கத்துக்குத் தலைவர் சிபார்சையும் காரியதரிசியின் சிபார்சையும் தனித்தனி வாங்கி யனுப்புதல் வேண்டும்.

2. இதுவன்றி, ஒவ்வொரு பிள்ளைக்கும் மனுவோடு இரண்டு பிரபலமான கனவான்களுடைய சிபார்சு கடிதங்கள் வாங்கி அனுப்புதல் வேண்டும். சங்கமில்லாத இடங்களிலிருந்து மனு அனுப்புவோர்க்குச் சிபார்சு செய்பவரில் ஒருவர் உண்மைச் செங்குந்தராகவும், மற்ருெருவர் வேறு சாதியினராகவும் இருத்தல் வேண்டும்.

3. உபகாரச் சம்பளத்தை நாடும் மாணுக்கர்கள் சம்பளம் பெற்று இடையில் அசிரத்தையினலோ, தப்பு நடத்தையினலோ படிப்பை நிறுத்திவிட நேரிடில் அவர்கள் அதுவரை பெற்ற சம்சளத்தைச் சங்கத்துக்குத் தாம் ஈடுகட்டித் தருவதாகச் சிபார்சு செய்யும் கனவான்களில் ஒருவரிடமிருந்து ஜாமீன் கடிதம் ஒன்று வாங்கி மனுவோடு அனுப்புவதோடும் மனு செய்துகொள்ளும் பெற்ருேராவது பாதுகாப்பாளராவது தாமும் அவ்வித ஈடு கட்டித் தருவதாக ஒப்புக்கொள்ளல் வேண்டும். கையொப்பமிடுவோர் மாணவர் நின்ற மூன்று மாதத்துக்குள் வாங்கிய பணத்தைச் சங்கத்துக்கு ஈடு கட்டித் தரத் தவறினல் அத்தொகை ஜாமீன் கொடுத்தவரிடமிருந்து வசூலிக்கப் பெறும்.

4. உபகாரச் சம்பளம் பெறும் மாணுக்கர்கள் தமது கலாசாலை அதிகாரிகளால் எப்போதாவது துர் நடத்தைக்காகத் தண்டிக்கப்படுவரேல் அன்னவர்களுக்கு உபகாரச் சம்பளம் அதுமுதல் நிறுத்தப்படும். அதுவரை கொடுத்துள்ள பணம் மேற்கூறிய முறையில் வசூலிக்கப்பெறும்.

5. உபகாரச் சம்பளம் பெறும் மாணுக்கர்கள் நமது தலைச்சங்கத்தையாவது அதன் கிளைச் சங்கங்களையாவது, அவற்றின் நோக்கங்களையும் தொண்டுகளையுமாவது, பொதுவில் உண்மை செங்குந்தர் இயக்கத்தினையாவது தாக்கி அவற்றிற்குப் பாதகமாக நடந்து கொண்டாலும் அவர்களுக்கு அது முதல் உபகாரச் சம்பளம் நிறுத்தப்படும்.

6. சங்கத்தின் உபகர்ரச் சம்பளத்தை வாங்கும் ஒவ்வொரு மாணுக்கரும் தான் பெறும் உதவிக்குப் பிரதியுபகாரமாகக் கீழ்க்கண்ட விதங்களில் தம் குலாபிமானத்தை விளக்குவதாக ஒரு தனிக் கடிதத்தில் எழுதித் தரவேண்டும் :—

(a) தலைச்சங்கத்தின் நோக்கங்களையும் செயல்களையும் பாமர ஜனங்களுக்கு அறிவித்து அவர்கள் குலமுன்னேற்ற விஷயத்தில் ஈடுபடுமாறு பிரசாரஞ் செய்து தமது கல்வி தம் ஆயுள் பரியந்தம் பொதுநலத்துக்கு உபயோகமாகும்படி செய்ய வாக்குறுதி தரவேண்டும்;

(b) தாம் வாழ்க்கையில் ஈடுபெட்டுச் சம்பாத்தியம் செய்யும் சமயத்தில் தாம் கல்வி கற்கும் சமயம் சங்கத்திலிருந்து பெற்ற உதவிக்கு நன்றியறிதலாக நமது தலைச் சங்கத்தின்

ஆதரவில் நடைபெறும் செங்குந்தர் கல்வி நீதிக்குத் தமது வருமானத்தில் குறைந்தது ரூபாய்க்குக் காலணவாவது இடைவிடாது நன்கொடையாக வழங்கிவர வாக்குறுதி [செய்யவேண்டும்;

(c) நமது 'மித்திரன்' ஓங்குமாறு ஒத்தாசை புரியவேண்டும்.

7. ஏற்கெனவே தலைச்சங்கத்திலிருந்து உபகாரச் சம்பளம் பெற்றுவரும் மாணக்கர்களும் மேல் வகுப்புக்கு மாற்றப்பட்டிருப்பின் மேற்கூறியுள்ள நிபந்தனைகட்கு உட்பட்டு புது மனு அனுப்ப வேண்டும்.

8. மனுவில் மேற்குறித்த விவரம் எதுவேனும் விடுபட்டிருந்தாலும் உண்மைக்கு மாறாக இருந்தாலும் அம்மனு தள்ளிவிடப்படும்.

கீழ்ப்பாக்கம் சென்னை: 1930ஆ ஜூன்மீ 15உ } ம. சண்முகசுந்தர முதலியார் எம். ஏ., எல். டி., பி. சே. மாணிக்கவாசக முதலியார்,

அமைச்சர்கள். தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கம்.

158818

## 'செங்குந்த மித்திரன்' பஞ்சாங்கம்

பிரமோதூதஆ ஆனிமீ (1930ஆ ஜூன்மீ—ஜூலைமீ)

உத்தராயணம், வஸந்த ருது.

| இங்கிலீஷ் தேதி | தமிழ் தேதி | வாரம் | திதி | நக்ஷத்திரம் | யோகம் | நேத்திரம் | ஜீவன் | வாக்கிய கிராந்தி | யோகினி | விசேட நாட்கள் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 15 | 1 | ஞா | சது 32-10 | தி 54-25 | அ 54-25 ம | 2 | 1 | சூன் | ஆகாசம் | |
| 16 | 2 | திங் | பஞ் 38-18 | அவி 60... | சி 60 | 2 | 0 | சூன் | பூமி | |
| 17 | 3 | செ | சஷ் 44-5 | அவி 1-50 | சி 1-50 ம | 2 | 0 | சஷ் | கிழக்கு | |
| 18 | 4 | புத | சப் 49-23 | ச 9-8 | சி 9-8 அ | 2 | $\frac{1}{2}$ | சப் | வடக்கு | |
| 19 | 5 | வியா | அஷ் 53-40 | பூர 15-38 | சி 60 | 1 | $\frac{1}{2}$ | அஷ் | தெகிழ | |
| 20 | 6 | வெ | நவ 56-23 | உ 20-48 | சி 20-48 அ | 1 | $\frac{1}{2}$ | நவ | தெமே | |
| 21 | 7 | சனி | தச 57-18 | ரே 24 25 | ம 24-25 சி | 1 | $\frac{1}{2}$ | தச | தெற்கு | |
| ஜூன்மீ 22 | 8 | ஞா | ஏகா 55- 8 | அ 26-5 | சி 60 | 1 | $\frac{1}{2}$ | ஏகா | மேற்கு | |
| 23 | 9 | திங் | துவா 52-48 | ப✻ 25-48 | சி 25-48 ம | 1 | $\frac{1}{2}$ | துவா | வடமே | கிருத்திகை |
| 24 | 10 | செ | திர 47-50 | கிரு 23-28 | சி 23-28 அ | 0 | $\frac{1}{2}$ | திர | வடகிழ | |
| 25 | 11 | புத | சது 41-20 | ரோ 19-28 | சி 60 | 0 | $\frac{1}{2}$ | சது | ஆகாசம் | |
| 26 | 12 | வியா | அ● 33-43 | மி 14-13 | ம 60 | 0 | 0 | அமா | பூமி | சர்வ அமாவாசை |
| 27 | 13 | வெ | பிர 25-10 | தி 8-5 | சி 60 | 0 | 0 | பிர | கிழக்கு | சந்திர தெரிசனம் |
| 28 | பிரமோதூத ஆனிமீ 14 | சனி | துதி 14-23 | பு 1-23<br>பூ 54-40 | சி 60 | 0 | 0 | துதி<br>திரி | வடக்கு | |
| 29 | 15 | ஞா | திரி 7-45<br>சது 59-38 | ஆ 48-23 | சி 48-23 ம | 0 | $\frac{1}{2}$ | சது | தென்கி | |
| 30 | 16 | திங் | பஞ் 52-20 | ம 42-55 | ம 42-55 சி | 1 | $\frac{1}{2}$ | பஞ் | தெற்கு | |
| 1 | 17 | செ | சஷ் 46-5 | பூ 38-35 | சி 38-35 அ | 1 | $\frac{1}{2}$ | சஷ் | மேற்கு | |
| 2 | 18 | புத | சப் 41-23 | உத் 35-33 | அ 35-33 ம | 1 | $\frac{1}{2}$ | சப் | வடமே | ஆனித்திருமஞ்சனம் |
| 3 | 19 | வியா | அஷ் 37-53 | அ 33-58 | சி 60 | 1 | $\frac{1}{2}$ | அஷ் | வடகிழ | |
| 4 | 20 | வெ | நவ 36-10 | சித் 33-53 | சி 60 | 2 | $\frac{1}{2}$ | நவ | ஆகாசம் | |
| 5 | 21 | சனி | தச 35-30 | சு 35-8 | அ 35-8 சி | 2 | 0 | தச | பூமி | |
| 6 | 22 | ஞா | ஏகா 36-15 | விசா 37-35 | ம 60 | 2 | 0 | ஏகா | கிழக்கு | |
| ஜூலைமீ 7 | 23 | திங் | துவா 38-10 | அநு 41-15 | சி 60 | 2 | 1 | துவா | வடக்கு | |
| 8 | 24 | செ | திர 41-3 | கே 45-45 | ம 45-45 அ | 2 | 1 | திர | தெகிழ | |
| 9 | 25 | புத | சது 44-43 | மூ 50-50 | ம 50-50 அ | 2 | 1 | சது | தெமே | |
| 10 | 26 | வியா | ○ 49-8 | பூர 57-10 | சி 60 | 2 | 1 | பௌ | தெற்கு | பௌர்ணமி |
| 11 | 27 | வெ | பிர 54-15 | உத் 60... | சி 60 | 2 | 1 | பிர | மேற்கு | |
| 12 | 28 | சனி | துதி 59-55 | உத் 3-48 | சி 60 | 2 | 1 | துதி | வடமே | |
| 13 | 29 | ஞா | திரி 60... | தி 11-0 | அ 11-0 ம | 2 | 1 | திரி | வடகிழ | |
| 14 | 30 | திங் | திரி 5-55 | அ 18-28 | சி 60 | 2 | 1 | சது | வடகிழ | |
| 15 | 31 | செ | சது 11-58 | ச 25-55 | ம 60 | 2 | 1 | பஞ் | ஆகாசம் | |



ஒவ்வொரு குடும்பத்திற்கும் டாக்டரைப்போல உதவக்கூடியது

**மின்சார ரசம்**

ஒன்றேயாகும்.

சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்ற

தென உலகப்பிரசித்தி பெற்றது.

ஆயிரக்கணக்கான நற்சாக்ஷிப் பத்திரங்கள் பெற்றது

ஒரே முறை பரீக்ஷியுங்கள். கேட்லாக் இனம்.

புட்டி 1-க்கு ரூ 2 தபாற் செலவு வேறு.

எல்லா இடங்களிலும்கிடைக்கும்.

டி. பி. சுந்தரேசன், B.A., மார்த்தாண்டம்:—

✻✻மின்சார ரசத்தினல் இரும்பல், ஜல தோஷம், ஜுரம் உடனே நிவர்த்தியாயிற்று பல்லின்ஈரின் மேலிருந்த வீக்கம் மிகவும் ஆச்சர்யகரமாக உடனே குணமடைந்தது.

விலாசம்:—**மின்சார ரசம் கம்பெனி, லிமிடெட், சேலம்.**

(4)

## கற்பகத் தைலம்

குழந்தை வியாதிகட்கு அமிர்தம் போன்றது. ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாதது.

பாக்கிங் தபால் செலவு உள்பட ஒரு புட்டியின் விலை ரூபா 1—4—0.

3 புட்டி வாங்கினல் செலவின்றி அனுப்பப்படும். உபயோகிக்கும் முறை புட்டியின்மேல் காண்க.

முன்பணமில்லாத ஆர்டர்கள் கவனிக்கபடமாட்டா.

எல்லா வியாதிகட்கும் ஏற்ற மருந்துகள் கிடைக்கும்.

**ப. அங்கமுத்து முதலியார்,**

சிகிச்சாஞான பண்டிதர்,

கற்பக மெடிகல்ஹால், சத்தியமங்கலம்.

(1) கோயம்புத்தூர்.

## நமது தலைவர்களின் அழகிய போட்டோ படங்கள்

| தபாற்செலவு உள்பட விலை | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|
| ஒட்டக்கூத்தர் ... | 1 | 8 | 0 |
| தலைச்சங்க நிர்வாக சபை அங்கத்தினர் (22-பேர் கொண்ட படம்) .... | 2 | 8 | 0 |
| ம. சண்முக சுந்தர முதலியார், எம். ஏ., எல். டி., (செங்குந்த மித்திரன் ஆசிரியர்) ... | 1 | 8 | |
| தலைச்சங்கப் பிரசாரகர்கள் .... | 1 | | |

மானேஜர், செங்குந்த மித்திரன் ஆபீஸ், பவழக்காரத்தெருவு, சென்னை.

பலம், புத்தி, ஆரோக்கியம், ஆயுள் இவைகளை விருத்தி செய்யும்.

# ஆனந்தா அயக்காந்த திராவகம்



புத்தியைக் கூர்மையாக்கி, தேகத்திற்கு அழகைக் கொடுக்கும் ஜீவிய அமிர்தம்.

பால்யர், யௌவனர், விருத்தர், ஆண், பெண். யாவருக்கும் சிரேஷ்டமான ஔஷதம்

---

## குணமில்லை யெனின் பணம் வாபீஸ் செய்யப்படும்.

இரும்பைப் பார்க்கிலும் கடினமான லோகம் வேறொன்றுமில்லை. தாதுவிர்த்திக்கு இதவேசிறந்தது. இரும்பின் சத்தை உண்பவனுக்கு நரைதிரை உண்டாகாது. இதனால்தான் "இருப்பவன் இரும்பைத் தின்றால், போரவன் பொன்னைத் தின்பான்" என்று இவ்வுலகத்தில் சொல்லிக் கொள்ளுகிறார்கள். ஒருவன் இந்தத் திராவகத்தைச் சாப்பிடுகிறதற்கு முன் தன் தேகம் எவ்வளவு நிறையுள்ளதென்று நிறுத்துக் கொண்டு அதன்பின் இந்தத் திராவகத்தை ஒரு மண்டலம் 40-நாளைக்கு சாப்பிட்டு மறுபடியும் தராசில் நின்று நிறுத்துப் பார்ப்பானானல் ஏறக்குறைய முன்னிருந்ததற்கு ஒரு வீசை 40-பலம் அதிக நிறையிருப்பான். இதை ஒவ்வொருவரும் அனுபவத்தில் தெரிந்துக் கொள்ளலாம்.

தாதுவிர்த்தி யில்லாதவர் இரும்பைப் பழுக்கக் காய்ச்சி அதை ஜலத்தில் தவைத்து அந்த ஜலத்தை தினந்தோறும் குடித்து வந்தால் தாதுவிர்த்தி உண்டாகுமென்று வைத்திய சாஸ்திரம் கூறுகின்றது. அதற்கே அந்தக் குணம் இருக்கிறபோது, அயத்தினுடையவும், காந்தத்தினுடையவும் சத்தைத் திராவகமாக இறக்கி யிருக்கும் இந்தப் பரம சிரேஷ்டமான ஔஷதத்தை உட்கொள்பவர் தேகம் வஜ்ஜிர சரீரமாய் விடுமென்பதற்கு என்ன தடை?

**இச்சிறந்த மருந்தின் புட்டி 1-க்கு விலை ரூ. 2. 3 புட்டியின் விலை ரூ. 5 8 0**

### ஷை அயக்காந்த திராவகத்தினால் தீரும் வியாதிகள்:

1, வாய்வுமீறி ஆண்குறி தளர்ந்து போதல், 2. மேகவாய்வினால் போக சக்தி யில்லாமற் போதல், 3. ஸ்திரீயைக் கண்டவுடன் கலிதமாய் விடுதல், 4. தலைமயிர் உதிர்தல். 5. பித்தச் சூட்டினால் தலைமயிர் நரைத்துப்போதல், 6. மேகச் சூட்டினால் கண்ணெரிச்ச லுண்டாவது, 7. கண்களில் நகக் கணுவுகளில் இரத்த ஓட்டமில்லாமை, 8. சுரரோகத்தினால் இரத்தம் கெட்டு உடம்பு வெளுத்துப்போதல், 9. மேக ரோகத்தால் உடம்பில் சக்தி யில்லாமை, 10. பித்தவெட்டையினால் உதிரம் கெட்டு பலயீனப்படுதல், 11. கைகால் உடம்பு எரிச்சலுடைமை, 12. நாக்கு ருசியில்லாமல் அரோசகமடைதல், 13. உஷ்ணவாய்வினால் ரு மந்தமுண்டாகுதல், 14 பித்த காமாலையினால் முகம் வெளுத்துப்போதல், கண் வெளுத் போதல், 15. மஞ்சள் காமாலையினால் உதிரம்போல் கண் சிவந்துபோதல், 16. விப புணர்ச்சியினால் நாபியில் சூடுண்டாகி இந்திரியங்கள் நீத்துப்போதல் முதலியன.

9 25
10 26
11 27
12 28 சனி
13 29 ஞா
14 30 திங்
15 31 செ

**ந்தா வயித்திய சாலை தபாற் பெட்டி 288, சென்னை.**

al is published by T. N. Sabapathi Mudaliar for the South Indian Sengunthа Mahajana ras, at 31, Armenian St., Madras, and is printed by A. Rangaswamy, at the Progressive Printers, 2-17, Coral Merchant St., Madras.

| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |